விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு+பதினாறு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-4613)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 02 ஞாயிற்றுக்கிழமை (15.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

# இலங்கை - இந்திய உறவுக்கு இந்து - பௌத்தம் அடித்தளம்

## இந்தியாவில் மைத்திரி உரை



(புதுடில்லி) பௌத்த மதத்தையும் இந்து மதத்தையும் அடிப்படையாகக் கொண்ட நட்பே இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான பலம்மிக்க நீண்டகால நட்புறவுக்கு அடித்தளமாக அமைத்துள்ளதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புலம்பெயர்ந்துள்ளவர்கள் உதவ வேண்டும்

### நீதிபதி இளஞ்செழியன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் இங்குள்ள இளைஞர்களுக்கு தேவைற்ற வகையில் பணம அனுப்புவதை தவிர்த்து போரினால் பாதிக்கப்பட்ட, அவயங்களை இழந்த சிறுவர்களுக்கு உதவ வேண்டும என யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

மனிதவாழ்வில் விழுமியங்கள் எனும் தொனிப்பொருளில் மானிப்பாய் சத்ய சாய்பாபா பாடசாலையில் நேற்றைய

04ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரன் போன்று ஒருவர் இனியும் வரவே முடியாது!

### முதலமைச்சருக்கு ஆளுநர் பதில்

(யாழ்ப்பாணம்)

பிரபாகரன் போன்று ஒருவர் இனிமேல் தலைதூக்கவே முடியாது என தெரிவித்த வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே,

உலகம் நெருப்பால் மூடப்படும் அல்லது இந்த ஆண்டுடன் உலகம் அழியும் என்ற சிலரின் கற்பனை எதிர் கூறலைப் போன்றே வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்தும் உள்ளதாக குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே வடமாகாண ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், அரசியல் வாதிகளுக்கு மீணடும் யுத்தம் ஒன்று தேவைப்படுகின்றது.

தமது அரசியல் கொள்கைகள் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்றால், அதில் அவர்கள் குளிர்காய வேண்டும் என்றால் அவர்களுக்கு குழப்பம் அவசி

04ஆம் பக்கம் பார்க்க....

## பகிரங்கமாக அரசியல் பேசுவதை வடக்கு ஆளுநர் நிறுத்த வேண்டும்

### முகநூலில் மனோ பதிவு

(கொழும்பு)

என் நண்பர் வட மாகாண ஆளுநர் ரெஜினேல்ட் கூரே பகிரங்கமாக அரசியல் பேசுவதை நிறுத்த வேணடும். இதனால் தேவையற்ற பதற்றம் ஏற்படுகின்றது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், தேசிய சக

04ஆம் பக்கம் பார்க்க....

## 3ஆம் நாள் நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் மூன்றாம் நாளான நேற்று நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் மீதான விமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவுத் தூபி முன்பாக சுடரேற்றப்பட்டது.


வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மற்றும் முருக மூரத்தி ஆலயம் ஆகியவற்றில் தஞ்சம் புகுந்திருந்த பொது மக்கள் மீது கடந்த 1995-ம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி இலங்கை விமான படையின் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசின. அதில் 147 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 360க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருந்தனர்.

04ஆம் பக்கம் பார்க்க....

## ஜூன் - 29 ஜெனிவாவில் இலங்கை குறித்து அறிக்கை

### ஐ.நா. ஆணையாளர் சமர்ப்பிப்பார்



(நியூயோர்க்)

ஜெனிவாவில் அடுத்த மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 32 ஆவது கூட்டத் தொடரில், இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பான தனது வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனிதவுரி

02ஆம் பக்கம் பார்க்க....

## தியாகத்தால் உயர்ந்த சமூகத்தில் இன்று வாள்வெட்டு சீரழிவுகள்

### வழி தவறிவிட்டதாக நீதவான் யூட்சன் கவலை

(யாழ்ப்பாணம்)

தனது இனத்தின் விடுதலைக்காக உயிரை கொடுத்த சமூகத்திற்கு மத்தியில்,

பிறரை வாளால் வெட்டும் சமூகம் இன்று தோன்றியுள்ளது. உலகிலேயே எமது தியாகங்களுக்கு நிகரான தியாகம் எங்கும் நடைபெறாத நிலையில், அவர்கள் சிந்திய இரத்தம் எல்லாம் வீணாகி விடுமோ என்ற கவலை எமக்கு தோன்றியுள்ளது என மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் தெரிவித்துள்ளார்.

மனிதவாழ்வில் விழுமியங்கள் எனும் தொனிப்பொருளில் மானிப்பாய் சத்ய சாய்பாபா பாடசாலையில் நிகழ்வொன்று நேற்றையதினம் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு

16ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ்ப்பாண சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கத்தின் 55-வது வருடாந்த பொதுக்கூட்டம்

இன்று 15.05.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ கிளினிக் பகுதியில் நடைபெறும் என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

(4583) - செயலாளர்


## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**

16.05.2016 முதல் 22.05.2016 வரை
7 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(C-4607)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

## நாதன் இன்

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

## வீடு தேவை

சகல வசதிகளுடனும் கூடிய சிறிய/பெரிய வீடு வைத்தியசாலை வீதியிலோ அல்லது புகையிரத நிலையத்தை அண்மித்த அல்லது OLR / அடைக்கல மாதா ஆலயத்தை அண்மித்த பகுதியில் தேவை!

(4585)

சன்சக்தி ரேடர்ஸ் — நல்ல சேவைக்கும் உங்கள் நம்பிக்கைக்கும் நாம்-சன்சக்தி ரேடர்ஸ்/கிக்விசன்
இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் — இணையத்தளம் www.sunsakthy.com
தொ.இ. 021 221 7994 கை.தொ.இ.077 593 0335 மின்னஞ்சல் info@sunsakthy.com

## ஜீவகவாத ஒத்தட பத்து

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல், திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.


**Manufactured by:**
Jeewaka Herbal Products (pvt) Ltd
Yakkala

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகாமையில்)
தொ.பே - 021 - 222 2567

(C-4603)

## பெருமையுடன் வாழ்த்துகின்றோம்





நான்காவது நண்பர்களின் போர் ஒருநாள் துடுப்பாட்ட போட்டியில் யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை வென்று கிண்ணத்தை சுவீகரித்த முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி துடுப்பாட்ட அணியை வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்,
அண்ணா பேக்கவுஸ் நிறுவனத்தினர்.
சந்தி அம்மன் கோவிலடி, முள்ளியவளை.

(இ-4616)

## Class Rooms (4) வாடகைக்குண்டு

இடம் - இலுப்பையடிச் சந்தி, பலாலி றோட்.
தளபாட, மின்சார வசதிகளுடன் (4587)

தொடர்பு:- **0776624387**

## விற்பனைக்கு

சிறந்த Rotweiller நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. 38 நாட்கள் Parvo தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

**0776463021, 0776128179**
ஆனைக்கோட்டை சந்தி. மானிப்பாய்.

(4587)

## ஜூன் - 29 ஜெனிவா...

...மைகள் ஆணையாளர் செய்ட் அல் ஹூசெயின் ஜூன் மாதம் 29-ம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறையின் வடிவம் குறித்த இறுதி ஆலோசனை நடவடிக்கைகள் ஜூன் மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அறிக்கை சமரப்பிக்கபடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள உயர் மட்டப் பிரதிநிதிகள் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இலங்கைக்கு கடந்த பெப்ரவரி மாதம் விஜயம செய்திருந்த செய்ட் அல் ஹூசெயின் ஐ.நா மனிதவுரிமை கள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் இலங்கை தொடர்பிலும் சுட்டிக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மரண அறிவித்தல்



(4584)

## கட்டையன் சண்முகம்

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் கோணாவளை வயாவிளானை வசிப்பிடமாகவும், கொண்ட கட்டையன் சண்முகம் கடந்த 13.05.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலம்சென்ற கட்டையன் அன்னப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தம்பு சீதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், ராஜ்குமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மினி, பிரேமினி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறஜன், டிலானி, லெதிஷியா, ஷில்வி, கெவின், எரிக் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலம் சென்ற தர்மலிங்கம், தவமணி, சிவலிங்கம், பரிபவளம், ராசாத்தி, பரமேஸ்வரி (அல்லி), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் மகாதேவன், செல்லக்கிளி, குணசிங்கம், சற்குணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.05.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
(மனைவி, மகன்மார்)

கோணாவளை, வசாவிளான்.
தொ.பே : 0771547180

# மகிந்தவின் உயிரைப் பாதுகாக்க மன்றாட்டம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்திற்கு எதிராக மற்றும் அவரின் உயிரைப் பாதுகாக்குமாறு கோரி நவகமுவ சத்பத்தினி தேவாலயத்தில் நேற்று பூஜை நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.**

இதில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர கலந்து கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர். பவித்ரா வன்னியாராச்சி மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர். ஜகத் புஸ்பகுமாரவும் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

பொதுமக்களின் கருத்துக்கள் அடங்கிய

## புதிய அரசியல் அமைப்பு அறிக்கை விரைவில் பிரதமரிடம் கையளிப்பு

புதிய அரசியலமைப்பு தொடர்பில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் அடங்கிய அறிக்கை விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாக பொதுமக்களிடமிருந்து கருத்துக்களை பெற்றுக கொள்வதற்காக நியமக்கப்பட்ட குழுவின் தலைவர் லால விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பிலான மக்களின் கருத்துகளை கேட்டறியும் குழுவினால் பல்வேறு மட்டங்களில் இருந்து திரட்டப்பட்ட மிக முக்கியமான தரவுகளும் இதில் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களாக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட அமர்வுகளில் மக்களடமிருந்தும். அரசியல் கட்சிகள். பொது அமைப்புகள் மற்றும் ஏனைய தரப்புகளிடமிருந்தும் மிக முக்கிய யோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## தி.மு.க.-காங்கிரஸிற்கு வாக்களிக்க வேண்டாம்

### தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி இளைஞன் போராட்டம்



இலங்கை தமிழர்கள் படுகொலைக்கு காரணமான கருணாநிதி மற்றும் காங்கிரஸிற்காக உங்கள் வாக்கு என்ற பதாகையுடன் ஒருவர் பி.எஸ்.என்.எல். தொலைத் தொடர்பு கோபுரத்தில் ஏறி போராட்டம் நடத்தினார்.

அவரை பொலிஸார் கைது செய்தனர். சிதம்பரம் அருகே உள்ள கிள்ளை தில்லைவிடங்கன் கிராமத்தைச் சேர்ந்த மகேந்திரன் (வயது-42). இவர் நேற்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு வடக்கு பிரதான வீதியில் உள்ள பி.எஸ்.என்.எல். அலுவலக தொலைத் தொடர்பு கோபுரத்தில் சுமார் 125 அடிஉயரம்ஏறி நின்று கொணடு கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டார். மேலும் அவர் 3 பதாகைகளை கட்டியிருந்தார்.

அந்த பதாகைகளில் இலங்கை முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு காரணமானவர்களுக்கா உங்கள் வாக்கு. சகோதரி இசைப்பிரியா சிங்கள இராணுவத்தால் பாலியல் பலாத்காரம் செய்ததற்கு காரணமான கருணா நிதி மற்றும் காங்கிரஸ் கட்சிக்கா உங்கள் வாக்கு. மீண்டும் ஜெயலலிதா தான் முதல்வராகிறார். 41 தொகுதிகளில் காங்கிரஸ் தோல்வியுறும்.

சாதி வெறியர்கள் படுதோல்வி அடைகிறார்கள் என பதாகைகளில் குறிப்பிட்டிருந்தார். தகவல் அறிந்த சிதம்பரம் நகர பொலிஸ் இன்ஸ்பெக்டர் மோகன், சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் தீயணைப்பு சம்பவ இடத்திற்கு சென்று போராட்டத்தில் ஈடுபட்ட மகேந்திரனுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன் பின்னர் 8.15 மணிக்கு மகேந்திரன் போராட்டத்தை கைவிட்டு கீழே இறங்கி வந்தார். பின்னர் நகர பொலிஸார் அவரை கைது செய்துபொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசென்றனர். (இ-5)

## முறைகேடான சம்பள பட்டியல் அம்பலமானது

விமல் வீரவன்ச வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த போது, தனது அரசியல் பணிகளுக்காக அமைச்சின் மூலம் அவருடைய நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு அரச ஊதியத்தை வழுங்கியமை தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

2011 முதல் 2014 வரையானக் காலப்பகுதியில் பத்தரமுல்ல மற்றும் ஜனசேவனா ஆகிய பகுதிகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் இரண்டு உப அலுவலகங்களில் பணியாற்றியதாகக் கூறி 20 பேருக்கு இவ்வாறு ஊதியம் வழுங்கப்பட்டு வந்துள்ளது.

இவர்களில் மூவரை தவிர ஏனையவர்கள் வேறு இடங்களில் தொழில் புரிந்து சம்பளத்தை மட்டும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கி வந்த ஓசியன் வியூவ் நிறுவனத்தில் பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களில் அமைச்சின் ஊடக ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிய லங்காதீப பத்திரிகையின் ஊடகவியலாளரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீரவன்சவின் அரச பணத்தில் உறவினர்கள், நண்பர்களுக்கு ஊதியம் வழுங்கியதன் காரணமாக நாட்டுக்கு ரூபா 30 மில்லியன் இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். (இ-5)

## மைத்திரி மீண்டும் ஜனாதிபதியாவார்

### துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் ஜனாதிபதியாக்குவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாணந்துறைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் மீண்டும் மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராக கடமையாற்றுவார்.

2021ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ அல்லது சந்திரிகா பண்டாரநாயக்க ஆகிய இருவருக்கும் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட முடியாது. அதற்கான தகுதி கிடையாது.

எனவே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறெனினும் தாம் ஒரு தடவைதான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக மைத்திரிபால சிறிசேன தேர்தல் மேடைகளில் வாக்குறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## சிசுவின் தாய் குறித்து பொலிஸார் விசாரணை

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் கடந்த 8ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாயார் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

குறித்த சிசுவை இறந்த நிலையில் வீசிய தாயார் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-15)

## ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் இருநாட்டு உறவுகள் புதிய பாதையில்

### இந்திய மன்றம் நம்பிக்கை



இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் காணப்படும் நீண்டகால உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இலங்கையும்இந்தியாவும புதிய பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ளதாக இந்திய மனறம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய மன்றத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதியை நேற்று முன்தினம் மாலை இந்தியாவல் சந்தித்த போதே மேர்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்திய மன்றத்தின் தலைவர் தர்மேந்தர் பிரதாப். இந்திய இராஜாங்க அமைச்சர் ஜித்தேந்ரா சிங். பாரத ஜனதாக் கட்சியின் செயலாளர் ராம் மாதவ். இந்தியாவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியுடனான இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். (இ-5)

## ஆட்டோவுடன் பிக்கப் வாகனம் நேருக்கு நேர் மோதி விபத்து




ஆட்டோ-பிக்கப் வாகன விபத்தில் சிக்கிய இருவர் படுகாயமடைந்தனர். மேற்படி விபத்துச்சம்பவம் நேற்றுக்காலை 8.45 மணியளவில் யாழ்.கச்சேரி முன்பாக இடம்பெற்றது. ஆட்டோ-பிக்கப் வாகனங்கள் என்பன நேருக்கு நேர் மோதி மேற்படி விபத்துச்சம்பவம் இடம்பெற்றது. இதில் ஆட்டோச்சாரதிமற்றும் ஆட்டோவில்பயணித்த வயோதிப் பெண்ணொருவர் எனஇருவர்படுகாயமடைந்தனர். காயமடைந்த இருவரும் பிக்கப் வாகனத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர். மேற்படி விபத்துச்சம்பவத்தில் ஆட்டோ பலத்த சேதங்களுக்குள்ளாகியது. (இ-5)

## 6 மாதங்களில் பொலிஸாருக்கு எதிராக ஆயிரம் முறைப்பாடு

கடந்த 6 மாதங்களில் பொலிஸாருக்கு எதிராக ஆயிரத்திற்கும்மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரிய தாஸ குரே தெரிவித்துள்ளார்.

அதிகார துஷ்பிரயோகம், பொது மக்களின் முறைப்பாடுகளை கவனத்தில் கொள்ளாமை மற்றும் பக்கச் சார்பாக செயற்படுகின்றமை குறித்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 200 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சமூக வலைதளங்கள் ஊடாக வெளியிடப்படும் காணொலிகளை கொண்டு பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது என அவர் தெரிவித்தார். எனினும், பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்யும் பட்சத்தில் உரிய ஆதாரங்களுடன் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 19 ஆவது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு அமைய 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போதையில் சாரத்தியம் ரூ.10ஆயிரம் அபராதம்

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் தீர்ப்பளித்தார்.

நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மேற்படி மூவரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் இவ்வாறு அபராதம் விதித்தார். (இ-5-60)

# பகிரங்கமாக...

வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தனது முகநூலில் தெரிவித்துள்ளார்.

“வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஒரு முன்னாள் அரசியல்வாதி. இந்நாள் அரச அதிகாரி. அவரது கருத்துகள் தேவையற்ற பதற்றங்களை ஏற்படுத்துகின்றன. சிலவேளைகளில் அவை நியாயமான கருத்துகளாக இருந்தாலும் ஆளுநர் பதவிக்கு அவை பொருந்துவதில்லை.

ஆளுநர் மத்திய அரசுக்கும், மாகாண சபைக்கும் இடையிலான பாலமாக செயற்பட வேண்டும். அதற்கு அவர் அமைதியாக செயற்பட வேண்டும். அவரும் அவரது பழைய அரசியல்வாதி நினைப்பில் ஏட்டிக்கு போட்டியாக கருத்துகளை கூற இப் போது தொடங்கி விட்டார். இப்படி கருத்து கூறுவதில் அவர் ஒருவித இன்பமடைவதாக தெரிகிறது.

அது என்னவோ நாட்டின் ஏனைய மாகாண ஆளுநர்கள் இருக்கின்றார்களா, இல்லையா என்றே தெரிவதில்லை. ஆனால் வடமாகாணத்துக்கு வந்து விட்டால் எல்லோர் நிலைமைகளும் மாறிவிடுகின்றன என அமைச்சர் மனோ கணேசன் தனது முகநூலில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன்

தோற்றம் 10 - 08 - 1939



மறைவு 14 - 05 - 2016

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஜெயபாலன் 14.05.2016 அன்று சிவபதமடைந்தார்

அன்னார் காலஞ்சென்ற ஜெயபாலனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம்-இராஜமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், நாகலட்சுமி (சுவீடன்), இராஜலிங்கம் (லண்டன்), ரஜனி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கே.ரி.இராஜலிங்கம் ((Editor Asian Tribune மற்றும் ஆசிரியர் தினச்செய்தி), திருமதி பத்மினி ராஜலிங்கம் (திருகோணமலை) ஆகியோரின் மைத்துனியும், தர்ஷினி (சுவீடன்), தாரணி (சுவீடன்) ஆகியோரின் பெரிய தாயும், பிரதீபன் (லண்டன்), பார்த்தீபன் (லண்டன்), பகீரதன் (லண்டன்), திருமதி நிரஞ்சினி பாஸ்கரன் (லண்டன்), திருமதி சுபாஷினி ஜெயப்பிரகாசம் (லண்டன்), திருமதி சிவானி பிரகாஷ் (திருகோணமலை) ஆகியோரின் அப்பாமாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.05.2016 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் தில்லைகட்டி ஒழுங்கை புகையிரத நிலையத்துக்கு எதிரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்றியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-வை.ராஜலிங்கம்
(சகோதரர்) (0773544725)
(ஓய்வுநிலை கூட்டுறவுப் பரிசோதகரும் தற்போது லண்டனில் வசிப்பவரும்)
கே.ரி.இராஜசிங்கம்
(மைத்துனர்) (Editor Asian Tribune ஆசிரியர் தினச் செய்தி)
0719764514

தில்லைகட்டி லேன்,
புகையிரத நிலையத்திற்கு எதிர்,
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(சி-4618)

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 04 - 1930



மறைவு 14 - 05 - 2016

### திருமதி சாம்பசிவம் செல்வரட்ணம்

புங்கடி, புலோலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாம்பசிவம் செல்வரட்ணம் 14.05.2016 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சாம்பசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் வரதராஜன் (அமெரிக்கா), கோணேஸ்வரன் (கனடா), மயில்வாகனம் (கனடா), ஞானசம்பந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (நியூசிலாந்து), காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் இராமச்சந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் கமலாசினி சித்திரலேகா ஆகியோரின் மைத்துனியும், செல்வவதனி, விஜிதா, ஹேமாலினி ஆகியோரின் மாமியாரும், அஸ்வினி, அஞ்சலி, கயல், இனியா, கவினி, அகரன், அக்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 16.05.2016 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புங்கடி,
மந்திகை- கொடிகாமம் வீதி ,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:- கோணேஸ்வரன்
(மகன்) 0775998325,
0212262669

(சி-4617)

# 3ஆம் நாள்...

இப்படுகொலை தொடர்பான நேற்றைய நினைவு நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வல்வெட்டிதுறை நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ்சதீஸ் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (செ-4)

# போரினால்...

தினம் காலை நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் இங்கு வந்து போகும் போது போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் சென்று போக வேண்டும்.

அங்கு ஆயிரக்கணக்கான சிறுவர்கள், கல்வி கற்க முடியாத வறுமையிலும், அங்கவீனர்களாகவும் உள்ளனர். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். தனியே ஆலயங்களுக்கு மட்டும் பணத்தை செலவழிக்காதீர்கள். யுத்தத்தால் வறுமையாக்கப்பட்ட மக்களையும் பற்றி கொஞ்சம் சிந்தியுங்கள்.

நான் அனுப்பிய பணம்தான் ஒரு நீதி பதி, வைத்தியரை, பொறியியலாளரை, உருவாக்கியது என புலம்பெயர் மக்கள் சொல்ல முடியுமா? மாறாக நான் அனுப்பிய பணம் தான் இங்கு பல நூறு ரவுடிகளை உருவாக்கியது என்று தான் அவர்களால் கூற முடியும்.

மேலும் நான் எனது கடமையை செய்வேன். யாழில் வாள்வெட்டு, ரவுடித்தனம், கொள்ளை,களவு, போதைப்பொருள் என்பவற்றை முழுமையாக கட்டுப்படுத்தப்படும் வரை ஓய மாட்டேன் என நீதிபதி மா.இளஞ்செழியன் மேலும் தெரிவித்தார். (செ-4)

# இலங்கை...

கும்பமேளா விழாவை முன்னிட்டு இந்தியாவின் மத்திய பிரதேச உஜ்ஜேனியில் மக்களின் ஆன்மிக வளர்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச மாநாட்டில் நேற்று காலை பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்து மற்றும் பௌத்த மதங்கள் இந்தியாவிலிருந்து உலகிற்கு கிடைக்கப்பெற்ற மிகப் பெரிய சொத்துக்கள். பிரச்சினைகள் நிறைந்த தற்கால சமூகத்திற்கு இம் மதங்களின் தேவை முன்பொருபோதும் இல்லாத அளவில்உணரக் கூடியதாக உள்ளது. மேலைத்தேய நாடுகள் இம் மதங்கள் தொடர்பில் காட்டும் கரிசனையின்மூலம் அதனைப் புரிந்து கொள்ள முடியும்.

கீழைத்தேய தர்மங்களின் சிறப்பு அம்சமான இயற்கைக்கும் மனிதனுக்கும் இருக்கின்ற உறவினை தக்கவைத்தவாறு இலங்கையை அபிவிருத்தி பாதையில் இட்டுச் செல்வதற்காக இலங்கை அரசும் மத நல்லிணக்கத்துடன் செயற்படுவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்தோடு 12 வருடங்களுக்கு ஒருமுறை அனுஷ்டிக்கப்படுகின்ற கும்பமேளா பூஜை தினத்தின் மக்களின் ஆன்மிக எழுச்சியை நோக்காகக் கொண்டு நடத்தப்படுகின்ற இந் மாநாட்டுக்கு தன்மை அழைத்ததற்காகவும் இந்திய அரசினால் வழங்கப்பட்ட சிறப்பான உபசரிப்புக்கும் தமது நன்றியினை ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ் விழாவில் இந்தியாவின் ஏராளமான இந்துக் குருக்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான், பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் ராம் மாதவ் உள்ளிட்ட பெரு மளவானோர் கலந்து கொண்டனர்.(செ-12)

# பிரபாகரன்...

யமாகின்றது. அதனால்தான் பிரபாகரன் மீண்டும் வருவார், நாட்டை பிரித்ததுத் தரு வார் என்ற கற்பனைக் கதைகளை எல்லாம் கூறுகின்றனர்.

அவ்வாறான ஒரு கற்பனை எதிர்வுகூறலைப் போன்றதே வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கருத்தும் உள்ளது என ஆளுநர் குறிப்பிட்டார். (செ-12)

வடக்கு மாகாண
கூட்டுறவு அபிவிருத்திக்கான
100 நாள் வேலைத் திட்டம்
கட்டம் - 02

ஆரம்பம்: 15.05.2016

கூட்டுறவாளர்களின் மே தினக் கோரிக்கைக்கு அமைவாக 100 நாள்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள்

01. கூட்டுறவுச் சங்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட நியதிச்சட்டத்தினை அங்கீகாரத்திற்காக வடக்குமாகாண சபையில் சமர்ப்பித்தல்.
02. கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்திய 100 நாள் வேலைத்திட்டத்தில் பூர்த்தி செய்யாத ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல். ஆளணி அங்கீகாரம் இல்லாத சங்கங்களுக்குப் புதிய ஆளணி அங்கீகாரம் பெறுதல் மற்றும் ஆளணி அதிகரிப்புக்கு ஆவன செய்தல்.
03. எல்லா கூட்டுறவு அமைப்புகளிலும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு ஆளணி அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளல்.
04. பதவிநிர்ணயம் செய்யாத பணியாளர்களுக்கான பதவி நிர்ணயங்களைப் பெற்றுக்கொடுத்தல்
05. கூட்டுறவுச் சங்கங்களின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளை திடப்படுத்துதல்.
06. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டவலுவுள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்தாத கூட்டுறவுச் சங்கங்களுக்கு எதிராக மேல் நடவடிக்கை எடுத்தல்.
07. பணியிலிருந்து விலகிய பணியாளர்களின் பணிக்கொடை, பிணைப் பணங்களை வழங்க வேண்டிய பணியாளருக்கு வழங்க வேண்டிய காலம் வரையறுத்து கூட்டுறவுச் சங்கங்களிடம் பெற்றுக் கொள்ளுதல்.
08. சங்கப் பணியாளர்களின் முடிவுறுத்தப்படாத ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடிவுறுத்தல்
09. கிராமிய வங்கி நடவடிக்கைகளைக் கணினி மயப்படுத்தி விரிவுபடுத்தல்.
10. கூட்டுறவுக் கிராமிய வங்கி சேமிப்பு மாதம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி சேமிப்பை ஊக்குவித்தல்.
11. வடமாகாணத்திற்கான பால் பதனிடும் நிலையங்களை உருவாக்கி பால் விநியோக வலையமைப்பொன்றைச் செயற்படுத்தல்.
12. உள்ளூர் உற்பத்திகளுக்கான கொள்வனவு. விற்பனை மையங்களை ஏற்படுத்தி கூட்டுறவில் கூட்டுறவு என்ற செயற்பாட்டை வலுப்படுத்தல்.
13. கூட்டுறவு நகர் ஒழுங்குபடுத்தல்.
14. எரிபொருள்நிரப்பு நிலையங்களை ஒழுங்கமைத்தல்.
15. பயன்பாடற்று இருக்கும் தொழிற்சாலைகளை இயக்குவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
16. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தர நிர்ணயங்களை மேற்கொள்ளுதல்.
17. மாவட்ட மட்டத்தில் நலிவடைந்த சங்கங்களில் ஒன்றைத் தெரிவு செய்து வருமான மூலங்களுக்கான உதவிகளை வழங்குதல்.
18. கூட்டுறவுச் சங்கங்களால் உரிமை கோரப்படும் காணிகளுக்கான காணி உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்
19. கடற்றொழிலின்போது மரணமடைந்த கூட்டுறவாளர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார நிதி உதவி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தல்.
20. மாவட்ட கூட்டுறவு சபைகளில் உருவாக்கப்பட்ட இணக்க சபைகளை இயங்க வைத்தல்.
21. கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கம் அவர்களின் நினைவாக தபால்தலை வெளியிடுதல்.
22. இளைஞர்களை அங்கத்தவர்களாக இணைத்தலும் இளைஞர்களுக்கான கூட்டுறவு தொடர்பான பயிற்சியினை மேற்கொள்ளுதலும்.
23. கூட்டுறவு தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளைக் கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

மேற்குறித்த வேலைத்திட்டங்கள் பற்றிய பூரண விபரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புவோரும் ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவோரும் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இணைப்பாளர்
கூட்டுறவு அபிவிருத்திக்கான 100 நாள் வேலைத்திட்டம்
வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல்,
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

# நள்ளிரவு வேளை குண்டுத்தாக்குதல்

(கொழும்பு)

கல்முனை சாய்ந்தமருது பிரதேசத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவரும் அகில இலங்கை மக்கள் காங்கிரசின் பிரதி தலைவருமான ஏ.எம்.ஜெமீலின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தர் வீட்டின் மீது இனம் தெரியாதோரினால் எஸ்லோன்பைப்பில் வெடிமருந்து நிரப்பப்பட்டு தயாரிக்கப்பட்ட டப்பி என்று அழைக்கப்படும் உள்ளூர் தயாரிப்பு குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளரான அப்துல் சலாம் அஸ்வர் என்பவர் இச் சம்பவம் நடப்பதற்கு முன்னர் கொழும்பில் இருந்து ஊர் திரும்பியுள்ளார் .

கைக்குண்டுத்தாக்குல் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் அவரது பெற்றோர் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளதுடன் வீட்டின் கதவு சேதமடைந்துள்ளது என கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பாதுகாப்பு உத்தியோகத்தரின் தந்தையார் படுகாயமடைந்துள்ள நிலையில் கல்முனை அஷ்ரப் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S. சர்மா குருஜி

076 725 6024


நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

[4393]


# யுத்த வெற்றியை கொண்டாடுவதில் மகிந்த - கூட்டு எதிர்க்கட்சி தீவிரம்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் பெற்றுக்கொண்ட யுத்த வெற்றியினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொண்டாடுவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.**



குறித்த நிகழ்வினை எதிர்வரும் 18 ஆம் திகதி குருநாகலில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக, கூட்டு எதிர்க்கடசியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட அர்ப்பணிப்புகளை நல்லாட்சி அரசாங்கம் மறந்து செயற்படுகின்றது.

எனவே, யுத்த வெற்றியினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

குறித்த நிகழ்வின் போது யுத்தத்தில் உயிர் நீத்த படையினர்களை கௌரவிக்கும் வகையிலான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2009ஆம ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

இதனையொட்டி, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட புலம்பெயர் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளுக்கான நினைவு நாளை மே மாதம் 18 ஆம் திகதி உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


யாரிடம் பேசுவது?

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

எம்முடன் மனம் விட்டுப் பேசுங்கள்.

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம். எடை போட மாட்டோம். வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம். உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம்.

ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை.

தொலைபேசியில் அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

கை கொடுக்கும் நண்பர்கள்

104, நான்காம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம்

(021) 222 8117 / 077 900 8776

(மு.ப. 9.00 - பி.ப. 1.00)

Sri Lanka Sumithrayo, Jaffna (Probationary Branch)

(அரசியல், மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)

*Advt. sponsored by: Enlightenment Circle, UK (Saiva Munneta Sangam)*



நீங்கள் ஒரு நடமாடும் ஐஸ் கிறீம் வாகன வியாபாரியா...?




எம்மிடம், சிறந்த உயரிய தொழில் நுட்பமுறையில் Hygienic முறைப்படி உற்பத்தி செய்யப்பட்டு பொதி செய்யப்பட்ட

ஐஸ்பழம் ——— ரூபா 6/- தொடக்கம்
ஐஸ் சொக் ——— ரூபா 16/- தொடக்கம்
80ml கப் ——— ரூபா 18/- தொடக்கம்
தண்டர் கோண் — ரூபா 50/- தொடக்கம்
ஐஸ் கிறீம் (லீட்டர்) - ரூபா 90/- தொடக்கம்

கொள்வனவு செய்து 30% தொடக்கம். 40% வரையான லாபம் ஈட்ட முடியும். சிறு வியாபாரிகள், திருமண மண்டப உரிமையாளர்கள், மற்றும் புதிதாக ஐஸ்கிறீம் வியாபாரம் செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(4559)

Sylo food & Beverages (Pvt.) Ltd

76, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு,
தொலைபேசி: 021 221 2003, (4559)
Hotline 07777 10 785



வீட்டுப் பணிப்பெண் தேவை

தங்கி நின்று வேலை செய்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(4574)

தொடர்பு:- 077 956 8272



வேலைவாய்ப்பு (VACANCY)

(1) CHIEF COOK - 1 NO
(பிரதான சமையலாளர்)
(NORTH INDIAN, CHINESE & CONTINENTAL)

(2) KITCHEN HELPER / ROOM BOYS

(4573)

விபரம்:-
SUBHAS HOTEL
49, VICTORIA ROAD,
JAFFNA
TEL:- 021 222 4923
077 727 8630



வீட்டுடன் காணி விற்பனை

கெற்பலியில் 1/2 ஏக்கர் காணியுடன் சேர்ந்த வீடு வளவு மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
076 669 7942

(4520)


# இராசி பலன்

14.05.2016
(வைகாசி 01, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
அட்டமி பிற்பகல் 3.52மணிவரை
மகம் பின்னிரவு 5.49 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை
அட்டமி-நவமி

| | | | |
|---|---|---|---|
| | சுக் புத | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவோணம் | | |
| | | | குரு ராகு சந் |
| | சனி செவ் | | |

வளவன்

**மீனம்** பணத் தேவைகள் பூர்த்தியாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும்.

**தனுசு** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**விருச்சிகம்** வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும்.



பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னையின் யாத்திரைத்தல திருவிழா நேற்று முன்தினம் யாழ்.ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இதன்போது யாழ். ஆயர் அழைத்து வரப்படுவதையும் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் விழாவில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# தமிழினப் படுகொலை குறித்த விசாரணைக்கு சந்திரிகா தயாரா?

## மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

**சந்திரிகாவின் ஆட்சியில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை தொடர்பிலான விசாரணைகளுக்கு அவர் தயாரா? என வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ்ப்பாணம் நவாலி புனித பீற்றர் தேவாலய முன்றலில் நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகளில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், 'நவாலியில் இடம்பெற்ற கோரத்தாக்குதலை அன்றைய தினம் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் நியாயப் படுத்தியிருந்தார்.

சந்திரிகாவின் ஆட்சியில் இடம்பெற்ற இந்த நவாலி கோரத் தாக்குதல், போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளுக்கு அவர் தயாரா? என நான் கேட்க விரும்புகின்றேன். அத்துடன், செம்மணி படுகொலைகளை விசாரணை செய்ய சந்திரிகா தயாரா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை, கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்திருந்தனர்.

இதனையொட்டி, வடக்கு, கிழக்கு உள்ளிட்ட புலம்பெயர் தமிழ் மக்களினால் முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கான நினைவு நாளானது மே மாதம் 18ஆம் திகதி உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தநிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமானது வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

இந்தநிகழ்வில் வட மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர். (இ-5)




## வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வலசைப் பறவைகள் பற்றிய செயலமர்வு

வடமாகாண சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வலசைப் பறவைகள் பற்றிய செயலமர்வும் வெளிக்களப் பயிற்சியும் யாழ். மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மே மாதம் இரண்டாவது வாரத்தின் இறுதி நாட்களில் சர்வதேச அளவில் உலக வலசைப் பறவைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு எடுத்துச்சொல்லி வலசைப் பறவைகள் பற்றிய அறிவூட்டலை ஏற்படுத்தும் நோக்குடன் வடக்கு சுற்றாடல் அமைச்சு கல்வி அமைச்சுடன் இணைந்து மூன்று நாட்கள் வதிவிடச் செயலமர்வு மற்றும் வெளிக்களப் பயிற்சியை ஒழுங்கு செய்துள்ளது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (13.05.2016) ஆரம்பமான இந்நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது. இதில் வடக்கின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 100 மாணவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

வளவாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் துறையைச் சேர்ந்த கலாநிதி க.கஜபதி, கலாநிதி சி.அபிராமி, க.கஜவதனி ஆகியோரும் தன்னார்வப் பறவையியல் ஆய்வாளர்கள் க.அசோகன், பா.ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

செயலமர்விலும் வெளிக்களப் பயிற்சியிலும் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-5)

## மதுபோதையில் இடையூறு; இருவருக்கு தலா 4,000 தண்டம்

மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய இருவருக்கு தலா 4 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் பா.சுப்பிரமணியம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார். நெல்லியடி நகரப்பகுதியில் தினமும் மதுபோதையில் நின்று பொதுமக்கள் இடையூறு ஏற்படுத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டில் நெல்லியடிப்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மேற்படி இரு நபர்களையும் பொலிஸார்நேற்றுமுன்தினம்பருத்தித் துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இதன்போதே மேற்படி அபாரதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.(இ-5-60)

## வட்டார மாநாடு

யெகோவின் சாட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஜெகோவாவைப் போல் நடந்து கொள்ளுங்கள் எனும் தொனிப் பொருளிலான ஒருநாள் வட்டார மாநாடு இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். (இ-5)

## துவிச்சக்கரவண்டியில் சென்றவர் பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம்

திருட்டுத் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் பொலிஸாரைக் கண்டதும் துவிச்சக்கர வண்டியைக் கீழே போட்டு விட்டுதப்பிச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் வடமராட்சி கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி நபர் துவிச்சக்கரவண்டி ஒன்றில் சென்று கொண்டிருந்தார்.

இதேவேளை கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்னால் நெல்லியடிப் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

பொலிஸாரைக் கண்ட அந்த நபர் துவிச்சக்கர வண்டியில் இருந்து குதித்து துவிச்சக்கர வண் டியை கீழே தள்ளி விட்டு ஓடி மறைந்தார்.

அந்நபர் துவிச்சக்கர வண்டியை திருடிக் கொண்டு வந்ததைப் பொலிஸார் அறிந்திருக்கவில்லை.

ஆனால் அந்த நபர் துவிச்சக்கர வண்டியை தள்ளிவிழுத்திவிட்டு ஓட்டம் பிடித்ததால் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இதன் பின்னர் பொலிஸார் அந்த துவிச்சக்கர வண்டியை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர் எனத் தெரிய வந்தது. (இ-5-60)

## தவில், நாதஸ்வரக் கச்சேரி

சுன்னாகம் கந்தரோடை அருளானந்தம் பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவத்தின் 10 ஆம் திருவிழாவான நாளை திங்கட்கிழமைஇலங்கை மற்றும் இந்திய தவில், நாதஸ்வர கலைஞர்கள் வழங்கும் தவில், நாதஸ்வர கச்சேரி நடைபெறும். (இ-5)



மனிதவாழ்வில் விழுமியங்கள் எனும் தொனிப்பொருளில் மானிப்பாய் சத்திய சாயிபாபா பாடசாலையில் நிகழ்வொன்று நேற்றைய தினம் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், மல்லாகம் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :- உ.சாளின்)

# உண்மைகளை மறைக்க அரசு தீவிர முயற்சி

## மகிந்த அணி குற்றச்சாட்டு

நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் பனாமா ஆவணத்தில் உள்ளடங்குவதாகவும், இதன்காரணமாக உண்மைகள் வெளிவராமல் இருப்பதற்குரிய பல்வேறு சதித்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும் மகிந்த ஆதரவு அணி குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். இதன் போது அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், 'பனாமா ஆவணம் தொடர்பில் அரசாங்கம் உண்மைகளை மூடி மறைக்கின்றது. அமைச்சர் சம்பிக்க ரணவக்க உண்மைகளை மூடிமறைப்பதற்காக பல்வேறு போலியான தகவல்களை வெளியிடுகின்றார். வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள உள்நாட்டு நிதி தொடர்பில் விசாரணை செய்யக்கூடிய சட்டவரைபை முன்வைக்குமாறு பல முறை நிதியமைச்சரிடம் கோரிய போதிலும் அதுதொடர்பில் இதுவரையில் எந்த விதமான தீர்வுகளும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (இ-5)


## காணி விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி முதலி கோவிலுக்கு அருகில் நில.பர 1 குளி 14.92 எனும் அளவுடைய காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 076 702 3565 (4143)


### வற்வரியைக் காரணம் காட்டி

## தனியார் வைத்தியசாலைகளில் அதிக பணம் அறவிடப்படுகிறது

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் இரசாயன ஆய்வு கூடங்கள் என்பன வற்வரியினை சாட்டிக் கொண்டு நோயாளிகளிடம் கூடுதலான பணம் அறவிடுவதாக குற்றச்சாட்டு ஒன்று மக்களிடையே எழுந்துள்ளது.

வற்வரி திருத்தத்திற்குள் மறைந்துகொண்டு, தனியார் வைத்தியசாலைகள் மற்றும் இரசாயுன ஆய்வுகூடங்களல், நோயாளர்களிடம் அதிக பணம் அறவிடுவதாக இலங்கை வைத்திய இரசாயன கூட ஆய்வுகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

15 வீதத்தால் வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், சில நிறுவனங்கள் அந்த அளவை விட கூடுதலான பணத்தை அறவிடுவதாக சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்திய சேவைகளை நோயாளர்கள் சாதாரண விலையில் பெற்றுக்கொள்ளும் தன்மை காணப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் வைத்தியசாலைகள் மற்றும் இரசாயன ஆய்வுகூடங்களினால் அதிக பணம் அறவிடப்படுவதால், நோயாளர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய திட்டத்தின் தலைவர் ரஞ்சித் விதானவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எழும்பப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து அதிக பணம் அறவிடும் தனியார் வைத்தியசாலைகள் மற்றும் இரசாயன ஆய்வுகூடங்கள் தொடர்பில் தமது சங்கத்திற்கு எழுத்துமூலம் அறியத்தருமாறு தனியார் வைத்திய சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் செயலாளர் காந்தி ஆரியரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


# UNIVERSITY OF JAFFNA INVITATION FOR BIDS

**Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies and Commerce - Block D&E -Balance Work, University of Jaffna**

1.**The Chairperson, Department Procurement Committee (DPC), University of Jaffna** on behalf of the **University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for "Construction of Lecture Hall Complex for the Faculty of Management Studies and Commerce -.Block D&E -Balance Work, University of Jaffna" as described below and estimated to cost of **Rs. 67.8 million.**

The construction period is **273Days.**

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade **C4** or above with the Construction Industry Development Authority (CIDA),valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4.Interested bidders may obtain further information from **Deputy Registrar, (Capital Works & Planning Unit) University of Jaffna,** and inspect the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**

Contact numbers are: Phone. Tel: 021-2219201, Fax: 021-2219201

5.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar (Capital Works & Planning Unit) University of Jaffna, from **16 May 2016** until **06 June 2016** from **9:00hrs to 15:00 hrs** working days upon payment of non refundable fee of Rupees Five Thousand **(Rs. 5,000/-).**

6.Sealed Bids shall be delivered or sent by Registered post **Chairperson, Procurement Committee of University of Jaffna Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Registrar's office** to reach **on or before 14:00 hrs on the 07 June 2016.** Bids will be opened soon after closing at **14.00 hrs on the 07 June 2016** at the same venue in the presence of the bidders representatives who choose to attend.

7.Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;

- In the form included in Section 09 in the Bidding document.
- In favour of **Vice Chancellor-University of Jaffna.**
- For an amount of **Rs.1,100,000.00**
- Valid up to119 days (up to **04 October 2016)** from the closing date of Bid.
- Issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.

9. Pre bid meeting will be held at 10:00 hrs on **25 May 2016** at the Board Room of the University of Jaffna, Thirunelvely, Jaffna.

**Chairperson, Procurement Committee**
**University of Jaffna,**
Thirunelvely, Jaffna
13.05.2016

(C-4612)



# கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவில்

## 10 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்(16.05.2016)

## விசேட தவில், நாதஸ்வர கச்சேரி

நாளை திங்கட்கிழமை 16.05.2016 கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோவில் 10 ஆம் திருவிழா காலை சங்காபிஷேகத்துடன் இலங்கை இந்திய தவில் ,நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்.

அன்று மாலை விசேட இலங்கை இந்திய தவில், நாதஸ்வர கச்சேரி மாலை 7மணி முதல் 11மணிவரை இடம்பெறும்.

### நாதஸ்வரம்

நாதகான வினோதன் ஈழநல்லூர் P.S பாலமுருகன் நாதஸ்வர இளவரசன் கோண்டாவில் K.P குமரன்

### தவில்

நாதஸ்வர சக்கரவர்த்தி,பத்மஸ்ரீ டாக்டர்

**அரித்துவாரமங்கலம்**

டாக்டர் **A.K பழனிவேல்**

கலைமாமணி கோவிலூர் K.G கல்யாணசுந்தரம்

அளவையூர் தவில்மேதை V.தெட்சணாமூர்த்தியின் புதல்வன்

தவில் வித்துவான் T.உதயசங்கர்

லயஞானபாலன்:ஈழ நல்லூர் P.S செந்தில்நாதன் (452)



# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/5809 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 12 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5813 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 39<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/5810 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 14செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc, PHDகனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/5814 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 72செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5811 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5817 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5812 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 57 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5828 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே


தொடர்பு:-[illegible] 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

[illegible]

# வெல்லப்போவது யார்?



1967 இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்த பிறகு, தமிழகத்தில் வாக்கு வங்கி அரசியல் உருவானது. 1977 இல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.இ. அ.தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு, தமிழகத்தில் வாக்கு வங்கி உறுதி செய்யப்பட்டது.

1991 இல் தி.மு.க.வும், 1996 இல் அ.இ. அ.தி.மு.க.வும் தமிழக சட்ட மன்றத் தேர்தல்களில் படுதோல்வியைச் சந்தித்தாலும், தங்களின் வாக்குவங்கியை இழக்கவில்லை. தமிழகத் தேர்தல் களத்தைப் பொறுத்தவரை கொள்கைகள், கோட்பாடுகள், தேர்தல் அறிக்கைகள், அலைகள் எதுவும் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை. தி.மு.க. மற்றும் அ.இ. அ.தி.மு.க.வுடன் ம்ாறி மாறி கூட்டணி வைக்கும் கட்சிகளின் வாக்குவங்கி, இரண்டு கட்சிகளுக்கும் சமநிலையை ஏற்படுத்தியுள்ளன. ஆளுங் கட்சிக்கு எதிரான எதிர்மறை வாக்குகள்தான் கடந்த 5 சட்டமன்றத் தேர்தல்களிலும் வெற்றி தோல்வியைத் தீர்மானித்துள்ளன.

ஆனால் இந்த முறை, கூட்டணியாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட கட்சிகள் பிரிந்து நிற்கின்றன. அதனால், வாக்குவங்கிச் சமநிலை பாதிக்கப்பட்டு, ஆளுங் கட்சிக்கு எதிரான வாக்குகளும் பிரியும் சூழல் ஏற்பட்டுள்ளது.

வாக்குவங்கி என்பது தமிழகம் முழுமைக்குமான சதவிகிதமாகப் பார்ககப்படுகிறது. ஆனால், வாக்கு வங்கியைத் தீர்மானிப்பது வாக்குச் சாவடிகள்தான். ஒரு குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் 1300 வாக்காளர்கள் இருந்தால், அவர்களில் 300 - 350 பேர் அ.இ.அ. தி.மு.க.வினராகவும், 275 - 325 பேர் தி.மு.க.வினராகவும் உள்ளனர். பணவலிமையால், வாக்குச் சாவடி வாக்கு வங்கியைத் தி.மு.க.வும் அ.இ.அ.தி.மு.க.வும் உறுதிப்படுத்திவிட்டன. பிற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாகக் கூடினாலும், 150 - 250 பேர் வரை மட்டுமே உள்ளனர். 125 - 175 பேர் நடுநிலையாளர்களாக உள்ளனர். மீதி பேர் வாக்களிக்க மாட்டார்கள்.

தமிழக வாக்குச் சாவடிகளில் 85 சதவிகிதம், மேற்படி கணக்கீட்டின்படிதான் கட்சிகளின் பலம் உள்ளது.

தே.மு.தி.க.வின் வாக்குவங்கி அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பரவலாக இருந்தாலும், தி.மு.க.வையும் அ.இ. அ.தி.மு.க.வையும் முந்துகிற அளவுக்கு இல்லை. ம.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க., த.மா. கா., விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிகள் யாவருக்கும் குறிப்பிட்ட சில வாக்குச் சாவடிகளில் வாக்குவங்கி வலிமையாக உள்ளது. ஆனால், அதேபோன்ற வலிமை யான வாக்குச் சாவடிகள் தொகுதி முழுவதும் இல்லையென்பதால்தான், அவர்களால் தனித்து வெற்றி பெற முடியாத சூழல் உள்ளது.

மேற்படி வாக்குவங்கிக் கணக்கீட்டைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்திப் பார்த்தால், அ.தி.மு.க.வுக்கு 30 சதவிகிதம் முதல் 35 சதவிகிதம் வரையிலும், தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு 28 சத விகிதம் முதல் 33 சதவிகிதம் வரையிலும், தே.மு.தி.க. மக்கள் நலக் கூட்டணி த.மா.கா.வுக்கு 15 முதல் 20 சதவிகிதம் வரையிலும், பா.ஜ.க மற்றும் பா.ம.க.வு.க்கு 3 முதல் 6 சதவிகிதம் வரையிலும் வாக்குவங்கி பதிவாகலாம். நாம் தமிழர் கட்சியின் வாக்குவங்கி இந்தத் தேர்தலில்தான் தெரியவரும்.

மேற்படி வாக்குவங்கியைக் கொண்டிருந்தால் மட்டும், தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஆட்சியைப் பிடித்துவிட முடியாது. ஏனெனில், நடுநிலையாளர்கள் 15 சதவிகிதம் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதுதான் இப்போதைய முதன்மையான எதிர்பார்ப்பாகும்.

நடுநிலையாளர்களைப் பொருத்தவரையில், மூன்று விதமாகச் சிந்தித்துத்தான் இதுவரை வாக்களித்து இருக்கிறார்கள்,

1.நேர்மையானவர்களுக்கும் புதியவர்களுக்கும் வாக்களிப்பது.

2.வெற்றிபெறப்போகும் அணிக்கு வாக்களிப்பது.

3. ஆளுங்கட்சிக்கு எதிராக, எதிர்மறையாக வாக்஢ளிப்பது.

பா.ஜ.க. மற்றும் பா.ம.க.வைப் பொறுத்தவரை, தொகுதி வாரியாக 30 முதல் 35 சதவிகிதம் வாக்குகளைப் பெறுவதற்குரிய வாக்குவங்கி இல்லை என்பதால், இவர்களால் ஆட்சியைப் பிடிக்கமுடியாது. ஆனால், குறிப்பிட்ட சில வாக்குச் சாவடிகளில் பலமான வாக்குவங்கியைப் பெற்றுள்ளதால், அந்தக் குறிப்பிட்ட தொகுதிகளை வெல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், தி.மு.க. மற்றும் அ.இ.அ. தி.மு.க. இந்தத் தொகுதிகளில் கூடுதல் கவனம் செலுத்துகின்றன என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது.

தே.மு.தி.க. மக்கள் நலக் கூட்டணி த.மா.கா., அ.இ.அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வுக்கு அடுத்து வாக்குவங்கியைப் பெற்றுள்ளன. ஆனால், இவர்கள் வசமுள்ள 20 சதவிகித வாக்குகள் 35 சதவிகிதமாக மாறுவது எப்படி?

புதிய வாக்காளர்கள் தங்கள் அணிக்கு வாக்களிப்பார்கள் என்று நம்புகிறார்கள். நேர்மையானவர்களுக்கும் புதியவர்களுக்கும் வாக்களிக்க வேண்டும் என்று நினைக்கிற நடுநிலையாளர்கள், இவர்கள் பக்கம் சாய்வதற்கு வாய்ப்புகள் உண்டு. அதேசமயம், ஆளுங் கட்சிக்கு எதிரான எதிர்மறை வாக்குகளும் இவர்களுக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் உண்டு. எனினும், குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியை இழக்கப் போகும் தொகுதிகள் இவர்களுக்கு நிறையவே உள்ளன.

தி.மு.க., அ.இ.அ. தி.மு.க.வுக்கு மாற்றானவர்கள் வேண்டும் என்ற புதிய புரட்சி அலை ஒன்று தமிழக மக்கள் மனத்தில் உருவாகி இருக்குமேயானால், இவர்கள் வெல்வதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் ஆறு மாதத்தில் அந்தப் புரட்சி அலை ஏற்பட்டிருக்குமா? என்ற சந்தேகம் எழுந்தாலும், தி.மு.க., அ.இ.அ.தி.மு.க.வின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கப்போகும ஆற்றல் உடையவர்கள் எனபதை உறுதியாக மெய்ப்பிக்கப் போகிறார்கள்.

அ.இ.அ.தி.மு.க.வைப் பொறுத்தவரை அம்மா குடிநீர், அம்மா உணவகம் போன்ற நல்ல திட்டங்களுக்கும், இலவசத் திட்டங்களுக்கும் மக்கள் வாக்களிப்பார்கள் என்று ஆளுங்கட்சியினர் நினைக்கலாம். ஆனால், கடந்த ஐந்து சட்டமன்றத் தேர்தல்களிலும் எதிர்மறையாளர் வாக்குகளே வெற்றி தோல்வியை நிர்ணயித்துள்ளன என்பதை மறந்துவிட முடியாது. 2014 இல் நடந்த மக்களவைத் தேர்தலில் தனித்து நின்று வெற்றி பெற்றதும் அ.இ.அ.தி. மு.க.வின் தன்னம்பிக்கையாக இருக்கலாம். ஆனால், மக்களவைத் தேர்தல் வேறு, சட்ட மன்றத் தேர்தல் வேறு என்பதைத்தான் தமிழக மக்கள் பல்வேறு தேர்தல்களில் பாடமாகச் சொல்லியிருக்கிறார்கள். வாக்கு வங்கி வலிமை இல்லாத கட்சிகளுடன் கூட்டணியும் ஆளுங்கட்சிக்குப் பின்னடைவைத்தரலாம்.

எளிதில் சந்திக்க முடியாமை, இரண்டாம் கட்டத் தலைவர்களே இல்லாமல் செய்துவிட்டது, தேர்தல் நேரத்தில் மட்டுமே மக்களைச் சந்திப்பது, ஊழல் குற்றச்சாட்டுகள், ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள் போன்ற பரப்புரைகளைத் தாண்டி அ.இ.அ.தி.மு.க. வெற்றிபெற்றுவிட்டால், அக்கட்சியின் வாக்கு வங்கி அசைக்க முடியாத ஆற்றலாகிவிட்டது என்று உறுதியாக நம்பலாம்.

தி.மு.க.வைப் பொறுத்தவரை, 2014 மக்களவைத் தேர்தலில் ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற முடியாமல் போனாலும், தங்களுக்கான 90 இலட்சம் வாக்குகளைப் பெற்றுவிட்டதால், தனது வாக்குவங்கி பழுதாகி விடவில்லை என்ற நம்பிக்கையுடன் உள்ளது. இலங்கைத் தமிழருக்கு எதிரான கட்சி என்று முத்திரை குத்தப்பட்ட பிறகும், காங்கிரஸ் கட்சி 2014 மக்களவைத் தேர்தலில், தமிழகத்தில் 17 இலட்சம் வாக்குகளைப் பெற்று, தன்னுடைய வாக்கு வங்கியை சிறுகளவேனும் மெய்ப்பித்துள்ளது. ஆனால், த.மா. கா.வின் பிரிவு எந்த அளவுக்கு வாக்கு வங்கியைப் பிரித்திருக்கிறது என்பது இந்தத் தேர்தலில்தான் தெரியும்.

தமிழக நடுநிலை வாக்காளர்கள் ஆளுங் கட்சிக்கு எதிராகத்தான் வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கையும் இவர்களுக்கு உள்ளது. ஆனால், குடும்ப அரசியல், 2ஜி அலைக்கற்றை முறைகேடு குற்றச்சாட்டு, இலங்கைத் தமிழர் படுகொலையின்போது மெத்தனம் போன்ற நிகழ்வுகளை நடுநிலையாளர்கள் மறந்துவிட்டிருந்தால், இவர்களின் வெற்றியும் கேள்விக்குறியை எழுப்பாது.

தமிழகத் தேர்தல் குறித்து வருகிற கருத்துக் கணிப்புகள் நம்புகிற வகையில் இல்லை. ஏனெனில், நடுநிலையாளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. 15 சதவிகித நடுநிலையாளர்களின் வாக்குகள் ஒட்டுமொத்தமும் ஒரே அணிக்கு விழுந்துவிடப்போவதில்லை. அந்த வாக்குகளும் சிதறப்போகின்றன. நோட்டாவிலும் விழப்போகின்றன. ஆனால், அரசியல் கட்சிகளின் வாக்கு வங்கியை வெற்றி வங்கியாக மாற்றக் கூடிய வல்லமை இவர்களிடம் மட்டும்தான் உண்டு. இதுவரை வெற்றிபெறப் போகும் அணிக்கே வாக்களித்து வந்த நடுநிலையாளர்கள், இந்த முறை தங்க ளின் வாக்குகள் மூலம் வெற்றிபெறும் அணியைத் தீர்மானிக்கப் போகிறார்கள்.

சி.சரவணன்
வழிமூலம்-
தினமணி



# பொன்சேகாவுக்கு 35 மில்லியன் ரூபா நான் கொடுத்தேன்



## இலஞ்சம் வழங்கியதை ஒத்துக்கொண்ட நிஷங்க சேனாதிபதி

(கொழும்பு)

**அமைச்சர் சரத் பொன்சேகா தம்மிடம் இருந்து 35 மில்லியன் ரூபா இலஞ்சம் பெற்றுக்கொண்டதாக அவன்காட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளார்.**

பனாமா ஆவணம் வெளியானதையடுத்து சரத் பொன்சேகா, நிஷங்க சேனாதிபதி மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தார்.

இந்நிலையில் தம்மிடம் இருந்து 35 மில்லியன் ரூபாய் பணத்தினை இலஞ்சமாக பெற்றுக்கொண்டமை தொடர்பில் அமைச்சர் சரத் பொன்சேகா விசாரணைக்கு தயாராக வேண்டும் என சேனாதிபதி தெரிவித்துள்ளார்.

தமது நிறுவனம் கடல் கடந்த கணக்குகள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். நிஷங்க சேனாதிபதி மீது சரத் பொன்சேகா மட்டுமல்லாது ஜே.வி.பி., ஹெல உறுமய உள்ளிட்ட கட்சியினரும் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஜனாதிபதி, பிரதமரை அச்சுறுத்திய இலங்கையர் நாடு கடத்தப்பட்டார்

ஐ.எஸ்.பயங்கரவாத குழுவுடன் சட்டவிரோதமான முறையில் தொடர்பு வைத்திருந்த இரண்டு ரஷ்யரகள் மற்றும் இலங்கையர் ஒருவர் சேலங்கூர் பகுதியில் மார்ச் 28 மற்றும் ஏப்ரல் 22 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கைது செய்யப்பட்டு மலேசியாவிற்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்கள் என்று மலேசிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மூவரும் சீலங்கூர் சிறப்பு இராணுவ அதிகாரியால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மலேசிய பிரதி பொலிஸ்மா அதிபர் டேன் கலிட்அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். பயங்கரவாதக்குழுவுடன் சட்டவிரோதமான முறையில் ஈடுபட்டு வந்த 25 மற்றும் 28 வயதையுடைய இரண்டு ரஷ்ய பிரஜைகள் முதலில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரிய ஐ.எஸ். தீவிரவாதத்தின் உறுப்பினர்கள் என்று இந்த இருவர்களும் சந்தேகத்தின் பேரில் துருக்கி அதிகாரிகளால் இந்த வருடம் பெப்ரவரி மாதம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பின்னர் அவர்கள் துருக்கியில் இருந்து மார்ச் மாதம் மலேசியாவிற்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் 2012 ஆம் ஆண்டுக்கான சட்டத்தின் படி குற்றப் பாதுகாப்பு பிரிவின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கும் இலங்கையர் கிள்ளான் பள்ளத்தாக்கில் தொலைக்காட்சி தொழில்நுட்பவியலாளராக பணியாற்றும் 42 வயதுடையவர் என்று கலிட் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேகநபர் தன்னுடைய முகப்புத்தக கணக்கில் இலங்கையின் ஜனாதிபதி மற்றும் பிரதமரை கொலை செய்வதாக அச்சுறுத்தி தரவு ஒன்றை பதிவேற்றம் செய்துள்ளார்.

இலங்கையிலேயே தேடப்படும் பட்டியலில் குறித்த நபர் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர் குடிவரவு சட்டம் 6இன் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மலேசிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் ஏப்ரல் 27ஆம் திகதி நாடு கடத்தப்பட்டு பொலிஸ் அதி காரிகளின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று மலேசிய பிரதி பொலிஸ்மா அதிபர் டேன் கலிட் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

உயர் ஆபத்து நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டவர்கள் குறித்து முழுக் கண்காணிப்புடன் இருக்குமாறு மலேசிய குடிவரவு திணைக்கள பொலிஸ் அதிகாரிகளிடம் கலிட் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மகிந்த கும்பலின் பணப்பதுக்கலை அம்பலப்படுத்தும் சீசெல்ஸ் அரசு

ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் விசாரணைகளுக்கு உதவியளிக்க சீசெல்ஸ அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

சீசெல்ஸில் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் கொண்டிருந்ததாக கூறப்படும் கடல் கடந்த வைப்புக்கள் தொடர்பிலேயே இந்த உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தமது நாடு இலங்கையின் விசாரணைகளுக்கு உதவிகளை வழங்கி வருவதாக சீசெல்ஸின் சுற்றாடல் துறை அமைச்சர் டிட்லியர் டொக்லே (Didlier Dogley) தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள அவர், தமது நாட்டில் இலங்கையர்கள் கொண்டிருப்பதாக கூறப்படும் அனைத்து கணக்குகளையும் பரிசீலனை செய்ய அனுமதியளிக்க முடியும் என்று தெரிவித்தார்.

தமது நாட்டில் கணக்குகளை கொண்டிருப்போர் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

இந்தநிலையில் இலங்கையர்கள் எவராவது தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளாமல் கணக்குகளை தமது நாட்டில் கொண்டிருக்கிறார்கள் என்று சந்தேகம் இருந்தால், இலங்கை உத்தியோகபூர்வ முறைப்பாடு ஒன்றை சமர்ப்பிக்க முடியும் என்றும் சீசெல்ஸின் சுற்றாடல்துறை அமைச்சர் டிட்லியர் டொக்லே மேலும் தெரிவித்தார். (இ-5)

## வாரம் ஒரு தகவல்

### புத்தகப் பிரியன்

அந்தச் சிறுவன் கல்வி கற்றுக் கொள்ளப் பேராசை கொண்டிருந்தான்.ஆனால் அவனுக்கு அதற்கு வாய்ப்புத்தான் இல்லை. அவன் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். தந்தையோ பிறரின் வயலை உழுது, அதில் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு குடும்பத்தை மிகவும் சிரமமோடு நடத்திவருகிறார்.

தனது மகனின் கல்வியார்வத்தைக் கண்டு அவனது தாயே அவனுக்குக் பல விடயத்தை கற்பித்து வந்தாள். ஆனால் வறுமையின் கோரப்பிடியால் அவன் தந்தை அவனையும் வயல் வேலைக்கு அழைத்து செல்வது வழமை.

ஒரு நாள் சிறுவன் உழுது கொண்டிருந்த போது அவனது வயலின் பக்கத்து வயல் உரிமைக்காரர், ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருப்பதை அவன் பார்த்தான். தனக்கும் புத்தகத்தைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவனிடம் எழுந்தது.

அவரிடம் அப் புத்தகத்தை இரண்டு நாட்கள் தனக்கு இரவல் கொடுக்க வேண்டும் என்றும்,தான் அதைப்படித்து விட்டுப் பாதுகாப்பாகத் திரும்ப அவரிடம் ஒப்புவித்து விடுவதாகவும் கூறினான்.

சிறுவனின் படிப்பார்வத்தைக் கண்டு அப்பிரபுவும் புத்தகத்தை அவர் அவன் கையில் கொடுத்தார். புத்தகத்தைப் பெற்ற சிறுவன் நேராக வீட்டுக்குச் சென்று, புத்தகத்தை விரித்துப் படிக்க ஆரம்பித்தான்.

ஆனால் வயல் வேலைக்கு நேரமாகி விட்டது. இதனால் புத்தகத்தைத் தன் வீட்டுக் கூரையில் செருகி வைத்து விட்டுத் தந்தையோடு வயல் வேலைக்குப் போய்விட்டான்.வயலில் அவர் கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது பெரும் மழை பெய்யத் தொடங்கியது. உடனே சிறுவனுக்கு தான் கூரையில் செருகி வைத்திருந்த புத்தகத்தின் நினைவு வந்தது.

ஓடோடி வீட்டுக்கு வந்தான்.கூரையில் வைத்திருந்த அப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். அது முழுமையும் நனைந்து போயிருந்தது.புத்தகத்தை எடுத்துக் கொண்டு சிறுவன் நேராக அதன் சொந்தக்காரராகிய நிலப் பிரபுவிடம் சென்றான். அப் பிரபுவிடம்,ஐயா தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களது புத்தகத்தைப் பாதுகாப்பாகவே வைத்திருந்தான். எதிர்பாராது பெய்த மழையால்,எங்கள் வீட்டில் ஏற்பட்ட ஒழுக்கு புத்தகத்தை இவ்விதம் ஆக்கி விட்டது என்று அழுதவாறே கூறினர்ன்.

ஆனால் பிரபுவோ சிறுவனை மன்னித்து விட்டார்.இச் சிறுவன் யார் தெரியுமா? அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

## பகிடிவதையில் மாணவர்கள் ஈடுபட்டால் கடும் தண்டனை

### உயர்கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

பகிடிவதைக்கு எதிரான சட்டம் மிகச்சரியாக நடைமுறைப்படுத்தப்படும் என உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பகிடிவதை பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

பகிடிவதைக்காக மாணவர்களுக்கு தண்டனை வழங்கும் சட்டதிட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டத்தை நடைமுறைப்படுத்த முறைப்பாடு அவசியம். பெரும்பாலான மாணவர்கள் இது குறித்து முறைப்பாடு செய்ய பின்வாங்குகின்றனர்.

இருப்பினும், சமகாலத்தில் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. இந்த முறைபபாடுகளுக்கு சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படும்.

உலகில் எந்தவொரு நாட்டிலும் இதுபோன்ற இலவசக் கல்வி முறைமை கிடையாது.

அதேபோன்று, உலகில் எந்தவொரு நாட்டிலும் இது போன்று மாணவர்களை பகிடிவதை செய்வதும் கிடையாது.



நாம் எமது வரலாற்றை அடிக்கடி மீட்டிப் பார்க்கின்றோம். எமது கலாசாரம், பாரம்பரியம் பற்றி பேசுகின்றோம்.

இருப்பினும், எமது நாட்டைப் போன்று உலகில் எந்தவொரு நாட்டிலும் முதலாம் வருட புதிய மாணவர்களுக்கு இதுபோன்ற பகிடிவதை செய்யப்படுவதில்லை.

இது எமது நாட்டுக்கே பாரிய வெட்கக்கேடு எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## பெண்ணின் வயிற்றில் 14 கிலோ எடையுள்ள கட்டி

கெக்கிராவ பிரதேசத்தில் 37 வயதுடைய இரு குழந்தைகளின் தாயின் வயிற்றிலிருந்து சுமார் 14 கிலோ கிராம் எடையுடைய ஒரு கட்டியை அநுராதபுர தனியார் வைத்தியசாலையொன்றின் வைத்தியர்கள் குழுவொன்று சத்திர சிகிச்சையின் பின்னர் வெற்றிகரமாக அகற்றியுள்ளது.

அநுராதபுர வைத்தியசாலையின் மகப்பேற்று மருத்துவநிபுணர்டாக்டர்ஜகத்ஹேறத தலைமையிலான குழுவினர் இந்த சத்திர சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர்.(இ-5)

# தமிழகத்தில் நாளை வாக்குப்பதிவு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

தமிழக சட்டசபை தேர்தலுககான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக இருப்பதாகவும் வாக்குப் பதிவு நடைபெறும் திங்கட்கிழமை மாலை 6 மணி வரை மின்தடை ஏற்படக் கூடாது என்று உத்தரவிடப்பட்டு இருப்ப தாகவும் தலைமை தேர்தல அதிகாரி ராஜேஷ் லக்கானி தெரிவித்தார்.

தமிழக சட்டசபைக்கு ஒரே கட்டமாக வருகிற திங்கட்கிழமை தேர்தல் நடைபெறுகிறது.

தேர்தல் பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது.

234 தொகுதிகளிலும் மொத்தம 3,776 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இவர்களில் 320 பேர் பெண்கள். 1,566 பேர் சுயேட்சை வேட்பாளர்கள்.

இந்த தேர்தலில் 5 கோடியே 82 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்குப்பதிவுக்கான இறுதிக்கட்ட பணிகளில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் மும்முரமாக உள்ளனர்.

இதுகுறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

தமிழகத்தில் இதுவரை 86.44 சதவீத வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு உள்ளன. வாக்குச்சீட்டு கிடைக்காதவர்கள் தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்துள்ள 11 ஆவணங்களை காட்டி வாக்களிக்கலாம்.

தேர்தலுக்காக அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. சட்டசபை தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் மொத்தம் 66 ஆயிரத்து ஒரு வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. வாக்குப்பதிவுக்காக ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 500 மின்னணு இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. இவை தவிர 20 சதவீத இயந்திரங்கள் கூடுதலாக வைக்கப்பட்டு உள்ளன.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேர்தலுக்கு தேவையான மை ஆவணங்கள் உள்பட அனைத்து பொருட்களும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் இரவு வரை அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்படும்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் தற்போது லேசாக மழை பெய்து வருகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளும் கட்டடங்களில்தான் அமைக்கப்பட்டு உள்ளன.

இருந்தபோதிலும் வாக்குப்பதிவு தினத்தன்று மழை பெய்தால் அதை சமாளிக்க வாக்குச்சாவடி முன்பு பிளாஸ்டிக் கூரை போட உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்காக போதிய நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

பதற்றமான வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை, கடந்த தேர்தலை விட இப்போது குறைவாக இருந்தாலும் அவை தீவிரமாக கண்காணிக்கப்படும்.

வாக்குச்சாவடிகளுக்குள் வாக்காளர்கள் தொலைபேசிகளை கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டு உள்ளது. மீறி கொண்டு சென்றால் பறிமுதல் செய்யப்படும். ஆனால் வாக்குச்சாவடி தேர்தல் அதிகாரி மட்டும் தொலை பேசி வைத்துக்கொள்ளலாம். ஆனால் அதையும் வாக்குப்பதிவு குறித்து தேர்தல் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். வேறு யாருக்கும் தகவல கொடுக்க பயன்படுத்தக்கூடாது.

இதேபோல் தேர்தல் முகவர்களும் தொலைபேசிகளைக் கொண்டு செலலக்கூடாது. வாக்குப்பதிவின போது இடையில் அவர்கள் வெளியே வர அனுமதி இல்லை.

வாக்குப்பதிவு தினமான 16 ஆம் திகதி மாலை 6 மணிவரை மின்வெட்டு ஏற்படாமல் கவனமுடன் செயற்படுமாறு மின்வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம என்ற இடத்தில் அரசியல் கட்சியினர் கொண்டு வந்த 50 போலி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு இருக்கின்றன. இவை புதுச்சேரியில் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவை பிரசாரத்துக்காக தான் கொண்டு வரப்பட்டுள்ளன. அது தவறு கிடையாது. ஆனால் அதுபற்றி முன்கூட்டியே தேர்தல் ஆணையகத்துக்கு தகவல் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தகவல் தெரிவிக்காததால் அந்த வாக்குப்பதிவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அந்த இயந்திரங்கள் கொண்டு வரப்பட்ட வாகனத்தில் பிரசாரத்துக்கு தேவையான பொருட்கள் இருந்தன. அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்து வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கடந்த 12ஆம் தேதி ஒரே நாளில் ஒரு கோடியே 43 இலட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு ராஜேஷ் லக்கானி மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 60 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| தக்காளி | 150 | 200 | 150 | 150 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 80 | 50 |
| கோவா | 120 | 140 | 80 | 100 | 120 | 100 |
| கரட் | 80 | 100 | 70 | 80-200 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 | 30 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 100 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 75 | 90 | 100 | 80 |
| பாகற்காய் | 150 | 200 | 120 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 60 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 130 | 100 | 120 | 140 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 140 | 100 | 100 | 180 | 140 | 100 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 200 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 120 | 150 | 200 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 200 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 50 | 50 | 80 | 100 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 500 | 400 | 300 | 450 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 15-30 | 50 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 250 | 140 | 180 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 60 | 80 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 120 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — |

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

05.2016 15

- 1525 - ஜெர்மனியின் பிராங்கென்ஹவுசன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரை அடுத்து விவசாயிகளின் போர் முடிவுக்கு வந்தது.
- 1618 - ஜொஹான்னெஸ் கெப்லர் முன்னர் மார்ச் 8இல் நிராகரிக்கப்பட்ட தனது மூன்றாவது கோள் இயக்க விதியை மீண்டும் நிறுவினார்.
- 1718 - உலகின் முதலாவது இயந்திரத் துப்பாக்கிக்கான காப்புரிமத்தை லண்டனைச சேர்ந்த வழக்கறிஞர் ஜேம்ஸ் பக்கிள் பெற்றார்.
- 1792 - பிரான்ஸ் சார்டீனியப் பேரரசு மீது போரை அறிவித்தது.
- 1796 - நெப்போலியனின் படைகள் இத்தாலியின் மிலான் நகரைக் கைப்பற்றினர்.
- 1851 - நான்காவது ராமா தாய்லாந்தின் மன்னராக முடி சூடினார்.
- 1897 - கிரேக்க துருக்கியப் போரில் கிரேக்கப் படையினர் பெரும் சேதத்துடன் பின்வாங்கினர்.
- 1915 - இந்திய பாதுகாப்புச் சட்டத்தை முன்னிறுத்தி இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் ஷவ்கத அலியும் முகம்மது அலியும் கைது செய்யப்பட்டு சிந்துவாரா சிறையில் அடைக்கப்பட்டனர்.
- 1918 - பின்லாந்து உள்நாட்டுப் போர் முடிவுற்றது.
- 1929 - ஒகைய்யோ மாநிலத்தில் கிளீவ்லன்ட் நகரில் வைத்தியசாலை ஒன்றில் இடம் பெற்ற தீவிபத்தில் 123 பேர் கொல்லப்பட்டனர்.
- 1932 - ஜப்பானியப் படையினர் ஷங்காயை விட்டுப் புறப்பட்டனர்.
- 1932 - ஜப்பானின் பிரதமர் இனுக்காய்த்சுயோஷி அரசுக் கவிழ்ப்பு முயற்சியில் கொல்லப்பட்டார்.
- 1935 - மொஸ்கோவில் சுரங்க தொடருந்து சேவை ஆரம்பமானது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பெரும் போருக்குப் பின்னார் டச்சுப் படைகள் நாசி ஜெர்மன் படைகளிடம் சரணடைந்தனர்.
- 1940 - மக்டொனால்ட்ஸ் தனது முதலாவது உணவகத்தை கலிபோர்னியாவில் ஆரம்பித்தது.
- 1948 - இசுரேல் மீது அரபு நாடுகளான எகிப்து, ஜோர்தான், லெபனான், சிரியா, ஈராக், மற்றும் சவுதி அரேபியா ஆகியன இணைந்து தாக்குதலை ஆரம்பித்தன.
- 1955 - உலகின் ஐந்தாவது உயரமான மக்காலு மலையின் உச்சியை பிரெஞ்சு மலையேறிகள் முதன் முதலாக எட்டினர்.
- 1957 - பசிபிக் பெருங்கடல் பகுதியில் மால்டன் தீவில் பிரித்தானியா தனது முதலாவது ஐதரசன் குண்டை சோதித்தது. ஆனாலும் இது தோல்வியடைந்தது.
- 1958 - சோவியத்தின் ஸ்புட்னிக் 3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1960 - சோவியத்தின் ஸ்புட்னிக் 4 விண்கலம் ஏவப்பட்டது.
- 1963 - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 9 விண்கலம் ஏவப்பட்டது. கோர்டன் கூப்பர் இவ்விண்கலத்தில் பயணித்து விண்வெளியில் ஒரு நாளுக்கு மேல் தங்கிய முதலாவது அமெரிக்கர் ஆனார்.
- 1972 - 1945 முதலை ஐக்கிய அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த ஓக்கினாவா தீவு மீண்டும் ஜப்பானிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 1985 - குமுதினி படகுப் படுகொலைகள், 1985: நெடுந்தீவு மாவலித்துறையில் இருந்து 64 பயணிகளுடன் புறப்பட்ட குமுதினி என்ற படகு இலங்கைக் கடற்படையினரால் வழிமறிக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 36 பேர கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.
- 1991 - ஈடித் கிரெசன் பிரான்சின் முதற் பெண் பிரதமரானார்.
- 2005 - திருகோணமலை நகர் மத்தியில் இரவோடிரவாக புத்தர் சிலை எழுப்பப் பட்டதில் அங்கு கலவரம் வெடித்தது.
- 2006 - வவுனியாவில் நோர்வே அகதிகள் சபைப் பணியாளர் ஜெயரூபன் ஞானபிரகாசம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1859 - பியேர் கியூரி, பிரெஞ்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1906)
- 1912 - இராமசுவாமி ஐயர் (புளிமூட்டை), நகைச்சுவை நடிகர்.
- 1916 - கம்பதாசன் கவிஞர், எழுத்தாளர், தமிழ்திரைப்பட பாடலாசிரியர். (1973)
- 1928 - ஏ. ரி. பொன்னுத்துரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர். இ. 2003)
- 1954 - திருச்சி சிவா இந்திய அரசியல்வாதி.

### இறப்புகள்

- 1978 - றொபேர்ட் மென்சீஸ், அவுஸ்திரேலியாவின் 12வது பிரதமர. (பி. 1894)

## ஏ.ரி.பொன்னுத்துரை இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர்.




கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுததுரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞரும், ஆசிரியரும் ஆவார். பொன்னுத்துரை யாழ்ப்பாண மாவட்டம், தெல்லிப்பழை, குரும்பசிட்டி எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். குரும்பசிட்டி மகாதேவா மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி பயின்று, பின்னர் யாழ்ப்பாணம் பரமேசுவரா கல்லூரியில் இடைநிலைக் கல்வியைக் கற்றார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்று 1955 இல் இலங்கை திரும்பினார். காங்கேசன்துறை நடேசுவராகக் கல்லூரியில் இவர் ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். பின்னர் கல்கின்னை முஸ்லிம் மகா வித்தியாலயம், இரஜவலை தமிழ மகா வித்தியாலயம், கண்டி இந்து மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும பணியாற்றினார். அன்றைய பிரபலமான வானொலி நாடகக் கலைஞர சானா இதனை நெறிப்படுத்தியிருந்தார். 1951 இல் குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் நிதிக்காக விதியின் சதி என்ற நாடகத்தை முதற் தடவையாக தயாரித்து மேடையேற்றினார். 1951 இல் இரசிகமணி கனக. செந்திநாதன் தயாரித்த தாகம் என்ற ஓரங்க நாடகத்தில் மந்திரவாதியாக நடித்துப் பாராட்டுப் பெற்றார். 1952 இல் முதலாளி தொழிலாளி என்ற நகைச்சுவை நாடகத்தையும், 1953 இல் குவேனி என்ற நாடகத்தையும், 1954 இல் ராக்கி மை டியர் என்ற நாடகத்தையும சென்னை கிறித்தவக் கல்லூரியில் படித்த காலத்தில் தயாரித்து மேடையேற்றினார். 1955 ஆம் ஆண்டில் இவர் தயாரித்த நிறைகுடம் என்ற நாடகம் 25 அரங்குகளில் மேடையேறியது. 1956 ஏபரல் 28 இல் இரு மனம் என்ற நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றினார். 1959 இல் தேவன் தயாரித்த கற்புக்கனல் நாடகம் கொழும்பில் மேடையேற்றபட்ட போது அதில் பொன்னுத்துரை வஞ்சிப்பத்தன் என்ற பாத்திரத்தில நடித்தார். 1961 இல் கே.பாலச சந்திரன் தயாரித்து கொழும்பு லயனல் வென்ட் அரங்கில் மேடை யேற்றப்பட்ட பதியூர் ராணி நாடகத்தில் நடித்துப் பலரின் பாராட்டுகளைப் பெற்றார். பொன்னுத்துரையின் அரங்கியல் செயல்பாடுகளைக் கௌரவிக்கும் முகமாக குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஏற்பாடு செய்திருந்த ஒரு விழாவில் கலையரசு க. சொர்ணலிங்கம இவருக்கு கலைப்பேரரசு என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து மோடி-மைத்திரி முக்கிய பேச்சு

(கொழும்பு)

**இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை டில்லியில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினார். அப்போது மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது தொடர்பாக இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை மேற்கொண்டனர்.**



இருநாட்கள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு. பிரதமர் மோடி இரவு விருந்து அளித்தார். அப்போது இரு நாடுகளிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசித்தனர். இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதாகக் குற்றம்சாட்டி இலங்கை கடற்படையினரால் துப்பாக்கியால் சுடப்படுவது, கைது செய்யப்படுவது குறித்து இந்தியத் தரப்பின் கவலையை மோடி தெரிவித்தார். இந்த பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காண்பது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இது தவிர இந்திய உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள், இரு நாடுகள் இடையிலான வர்த்தகம், முதலீட்டை அதிகரிப்பது ஆகியவை குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் கூறியதாவது,

இந்த சந்திப்பின்போது இலங்கையுடனான மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்று பிரதமர் மோடி வலியுறுத்தினார். இலங்கையில் அனைத்து பிரிவினரும் கண்ணியத்துடனும், சம உரிமையுடனும் வாழ மைத்திரி மேற்கொண்டுள்ள முயற்சிகளை மோடி பாராட்டினார். இது தவிர இரு நாடுகளிடையே வர்த்தக, பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது என்றார். (இ-5)

## வான் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது




ஆனமடுவ - புத்தளம் பாதையில் கொட்டகச்சியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் 31 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிளில் வான் ஒன்று மோதியதுடன், பின்னர் அந்த வான் தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த நபர், புத்தளம் வைத்திய சாலையில் அனுமதிக்க கொண்டு சென்ற போது உயிரிழந்துள்ளார்.

அவர் ஆனமடுவ - ரம்பாவெவ பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## இன விடுதலைக்காக போராடிய முன்னாள் போராளிகளின் 3 தலைமுறைகள் பாதிப்பு

தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய புனர்வாழ்வு பெற்ற முன்னாள் பேராளிகளின் மூன்று தலைமுறைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 17 புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.விடுதலைப் போராட்டத்தில் கிழக்கு மாகாணம் பாரிய பங்களிப்பைச் செய்துள்ளதாகக் குறிப்பிட்ட அவர்,

மட்டக்களப்பு படுவான் கரை பிரதேசத்தில் வீட்டுக்கு ஒரு போராளி என்ற நிலை காணப்பட்டதுடன், பல மாவீரர் குடும்பங்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசங்களில் நூற்றுக்கு 99 சதவீதம் மத்திய கிழக்கு நாடுகளிலே வாழ்வதாகவும் இந்த நிலையில் முன்னாள் போராளிகளுக்கு யார் உதவி செய்வார்கள் என்ற நிலை காணப்படுவதாகவும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத்திட்டத்தில் கூட தங்களை இணைத்துக்கொள்வதில் பாரிய சிரமங்களை முன்னாள் போராளிகள் எதிர் நோக்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

## பாடசாலை மாணவ சீருடைக்கான வவுச்சரின் பெறுமதியை உயர்த்த கல்வி அமைச்சு தீர்மானம்

பாடசாலை மாணவ சீருடைக்கான பற்றுச்சீட்டின் பெறுமதியினை அதிகரிக்க கல்வி அமைச்சினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை சீருடைக்கான வவுச்சரின் பெறுமதியை மேலும் 100 ரூபாவினால் அதிகரிக்கவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் 400 ரூபாவாக இருந்த சீருடைக்கான வவுச்சரின் பெறுமதியை 500 ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

பாடசாலை சீருடை வழங்குவதில் நிலவிய திருட்டு மற்றும் மோசடிகளை தடுத்து நிறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீருடைக்கான பற்றுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து கோடிக்கணக்கான ரூபா பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்மூலம் பற்றுச்சீட்டின் பெறுமதியை அதிகரிப்பதற்கு முடிந்துள்ளதாக தெரிவித்த அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இவற்றை இலகுவில் உரிய காலத்திற்குள் விநியோகிக்க முடியும் என்றும் தெரிவித்தார். (இ-5)

## சாரதிகளுக்கு எச்சரிக்கை

மலையகத்தின் பல பாகங்களில் மாலை வேளைகளில் பனிமூட்டம் சூழ்ந்து காணப்படுகின்றது. இதனால் சாரதிகளை அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு, ஹற்றன் மற்றும் நுவரெலியா பிரதான வீதிகளில் பனிமூட்டம் அதிகமாக சூழ்ந்து காணப்படுவதனால் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் பனிமூட்டம் நிறைந்த காலநிலை நிலவிவருகின்ற நிலையில், சாரதிகள் வாகனங்களில் மின்விளக்குகளை (ஹெட்லைட்) எரிய விட்டு வாகனங்களை அவதானத்துடன் செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5)

## மருந்து ஒழுங்குமுறை அதிகார சபைக்கெதிராக வெளிநாடுகளும் புகார்

தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபைக்கு எதிராக வெளிநாடுகளும் புகார் தெரிவித்திருப்பதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். மேலும் குறித்த அதிகாரசபையில் நிர்வாக அறிவு குறைந்தவர்கள் இருப்பதாகவும்,இதனாலேயே இவ்வாறான பிரச்சினைகள் எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தன்னை சந்திப்பதற்காக வருகை தந்த அவுஸ்திரேலிய தூதுவரும் குறித்த மருந்து ஒழுங்குமுறை அதிகார சபைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன் வைத்ததாகவும் தெரிவித்தார். (இ-5)

## நல்லாட்சி அரசு நல்ல முடிபு

படைவீரர் நினைவு நிகழ்வுக்கு செலவிடும்தொகை படைவீரர் குடும்பங்களின் நலனுக்காக செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. படைவீரர்நினைவு நிகழ்வுகளுக்காக செலவிடப்படும்பலகோடிரூபாபணம் அவர்களின் குடும்பங்களது நலன்களுக்காக செலவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

படைவீரர்களின் மனைவியர், பிள்ளைகள், பெற்றோரின் நலன்புரிக்காக இந்த நிதி செலவிடப்படவுள்ளது. கடந்த காலங்களில் நடத்தப்பட்ட படைவீரர் நினைவு நிகழ்வுகளிற்காக பல கோடி ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு படைவீரர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்வி வசதி ஏற்படுத்தல், வைத்திய வசதிகளை ஏற்படுத்தல், வேறு தேவைகளை பூர்த்தி செய்தல், புலமைப் பரிசில்கள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கொழும்பு ஊடகங்களுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

படைவீரர் நினைவு நிகழ்வுகள் இம்முறை எளிமையான முறையில் நடைபெறும் என அவர் தெரிவித்தார்.

போரின் போது உயிர் நீத்து வீரவிபூசன பட்டம் வென்ற 29 படைவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றும் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தெற்கிலிருந்து யாழ். நோக்கி வந்த

# சுற்றுலாப் பேருந்து வவுனியாவில் விபத்து


## 10 பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா பன்றிக்கெய்த குளம் பகுதியில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து, வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களில் மோதி விபத்துக்குள்ளானதில் பத்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து நேற்றுக் காலை வேகக்கட்டுப்பாட்டை இழந்து, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு வாகனங்களின் மீது மோதியதில் ஒரு வாகனம் முழுமையாக சேதமடைந்ததுடன் மற்றைய வாகனமும் விபத்தை ஏற்படுத்திய பேருந்தும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறித்த விபத்தில், பேருந்தில் பயணித்த 7 பேரும் வீதியில் நின்றிருந்த வாகன சாரதிகள் உள்ளிட்ட மூவரும் படுகாயமடைந்த நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இந்த



விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் சிவில் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் சிறுவர், பெண்கள் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் கிளிநொச்சி மக்களின் பொதுநலம் சார்ந்த பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சியில் உள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள் மதத் தலைவர்கள், பிரஜைகள் குழு உறுப்பினர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (இ-15-312)

# அனுமதியின்றி கடலட்டை பிடித்தோருக்கு அபராதம்

கிளிநொச்சி, பூநகரி கல்முனை கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை அனுமதியின்றி கடலட்டை பிடித்த 6 மீனவர்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராசா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தார். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடலட்டைகளை அழிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார். குருநகரைச் சேர்ந்த மேற்படி 6 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்து, கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைத்தனர். இதையடுத்து, குறித்த மீனவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-5)

# இளம் குடும்பப் பெண்ணின் சடலம் பாழடைந்த கிணற்றிலிருந்து மீட்பு

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி வசந்தநகர் பகுதியில் பாழடைந்த கிணற்றிலிருந்து இளம் குடும்பப் பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் அதே கிராமத்தை சேர்ந்த வசந்தராசா வீனக் என்ற 27 வயதுடைய 2 பிள்ளைகளின் தாய் என அடையாளம்காணப்பட்டுள்ளது. குறித்த பெண்ணின் மரணம் தொடர்பிலான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்த வருகின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் வீட்டிலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவிலுள்ள பாழடைந்த கிணற்றிலேயே சடலம் காணப்பட்டுள்ளது.

பெண்ணின் மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்பதுடன், சடலம் தொடர்பான நீதவான் விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (இ-15)

BLOOMING BUDS
The Wisdom of Children

BLOOMING BUDS
International E CAMPUS

PV 94034

ENGLISH MEDIUM TEACHER TRAINING DIPLOMA PROGRAMME
பயிற்சியின் மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்

12 Months

தகைமைகள்

- க.பொ.த. (சா/த) 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த. (உ/த) கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களுக்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30-5.00 வரை வேலைநாட்களாகும்.

மேலதிகமாக

சிங்களக் கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா , சிங்கள டிப்ளோமா (பேசும் ஆங்கிலம் அடங்கியது) ஆங்கில இலக்கிய டிப்ளோமா , சுயதிறன் விருத்தி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்

ஐந்து வருடங்களாய் சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுனர் ஆசிரியர்களை பயிற்றுவித்து எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைப்பாடுகள் நிவர்த்திசெய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ள முன் வந்துள்ளோம்

பயிற்சியின் பின்னர் மாதாந்தக் கட்டணம் 34,000 ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

கற்கை நெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிகடன் ஏற்பாடு செய்து தரப்படும்
(நிபந்தனைக்கு உட்பட்டது )

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சி பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45.00 மேல் மூலையில் 01-11 ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி officer.
Blooming Buds International E Campus . Teacher Training School .178, Thavadi Rd , Suthumalai south Manipay
021 225 6641. 071 566 9641

378/3, Nelson Building
Kandy Road, Dhulukama,
Kalaniya. 011 305 4641

No.390/2/1, Baseline Road
Dematagoda
Colombo- 9 . T.P : 011 267 7641
071-5669641,077-1529731

(C-4614) www. blooming budse campus.com

எல்லோரும் நீதியை விரும்புகின்றனர்...
ஆனால் அடுத்தவர் விஷயத்தில் மட்டும்.
-ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

## தமிழ் மக்களின் மனநிலையை திசை திருப்பும் உபாயம் காண்மினே!

தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை படையினர் அபகரிக்கும் செயற்பாடுகள் அடிக்கடி நடந்து வருகின்றன.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை படைத்தரப்புக்கு எனக்கூறி காணிகளை அளக்க முற்படுவதும் பொதுமக்கள் திரண்டு அதனைத் தடுப்பதும் என்ற செயற்பாடுகள் இன்று வழமையாகி விட்டன.

பொதுமக்களின் காணிகளை படையினர் அபகரிக்கும் நோக்குடன் அளக்க முற்பட்டாலும் அல்லது படையினருக்கு காணி சுவீகரிப்பு என்ற பெயரில் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை அளக்க முயன்றாலும், பொதுமக்கள் திரண்டு அதனைத் தடுப்பர்.

இதனால் அவர்களின் தொழில் முயற்சிகளும் நாளாந்தப் பணிகளும் தடைப்படும். இது அவர்களின் பொருளாதார நிலைமைகளில் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் மக்களைக் குழப்புவதற்காக அங்கும் இங்குமாக காணி அளப்பு நடக்கிறதா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

எங்கள் காணிகளை படையினர் எங்காவது அளக்கின்றனரா அவ்வாறு அளந்தால் அதனைத் தடுப்பதற்காக நாம் ஒன்றுகூட வேண்டும் என்ற நினைப்புக்களை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தி அவர்களின் மனநிலையைத் திசை திருப்பும் திட்டத்தை அமுல்படுத்த காணி அளக்கும் காரியத்தை படையினர் செய்கின்றனர் என்று கூறும் அளவிலேயே நிலைமை உள்ளது.

கடந்த 12 ஆம் திகதி பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் கடற்படையின் தேவைக்கு என தேவாலயக்காணி ஒன்றை அளக்க முற்பட்ட போது பொது மக்கள் திரண்டு அதனைத் தடுத்துள்ளனர்.

இவ்வாறு பல இடங்களில் படையினரின் காணி அளப்பும் அதனைப் பொதுமக்கள் தடுப்பதுமான நிகழ்வுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன.

இவ்வாறு நடப்பதென்பது படைத்தரப்பு சட்டத்தை மதிக்கவில்லை என்றே பொருள்படுத்தும்.

இருந்தும் காணி அளக்கின்ற நடவடிக்கையும் காணி அபகரிக்கின்ற முயற்சிகளும் படையினரால் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது எனில்,

வட பகுதியில் இருக்கக் கூடிய படையினர் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களுக்கு துன்பம் இழைத்துக் கொண்டே இருக்கவேண்டும் என்ற நியதியைச் செய்து கொண்டு இருப்பது போலவும் உணரமுடிகிறது.

எது எவ்வாறாயினும் படையினருக்கான காணி அளப்பு என்ற விடயத்தை நல்லாட்சி முடிவுறுத்த வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சொத்திழந்து, சொந்தங்களை இழந்து, செய்தொழில் இழந்து, அடுத்த நேர உணவுக்கு என்ன செய்வது என ஏங்குகின்ற தமிழ் மக்களிடம் யுத்தத்தில் அங்கவீனமாகிப் போனதால் எங்கள் எதிர்காலம் எப்படியாகுமோ என்று ஏங்குகின்றவர்களிடம் போய் அவர்களின் காணியை அளக்க முற்பட, அவர்கள் தங்கள் முயற்சிகளையும் கைவிட்டு காணி அளக்கும் நடவடிக்கையைத் தடுக்க,

அதனால் காணி அளப்பதைக் கைவிட்டு வெளியேறுவது போல படையினர் காட்டாப்புக் காட்டுவதை நிறுத்துவது நல்லது.

சிங்கள படையினர் என்றால் அவர்கள் எக்காலத்திலும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற நினைப்பை தொடர்ந்து ஏற்படுத்தாமல்,

நடந்தது நடந்தாயிற்று இனி படையினர் உங்களுக்கு உதவுவார்கள் என்றவாறு படைத்தரப்பு நேர் மனப்பாங்குடன் செயற்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் படையினர் இவ்வாறு நடந்து கொண்டால் உள்ளத்தைச் சுட்ட புண்கள் தற்காலிகமாகவேனும் ஆறிக் கொள்ளும்.

# கச்சதீவில் அமையவுள்ள தேவாலயம் குறித்து ஜெயலலிதா மோடிக்கு கடிதம்

கச்சத்தீவில் தேவாலயம் கட்டும் முயற்சியை தடுக்க கோரி இந்தியப் பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளார். கச்சத்தீவில் பழைய தேவாலயத்தை இடித்துவிட்டு புதிய தேவாலயத்தை அமைப்பதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. கச்சத்தீவு தேவாலயம் செல்லும் தமிழர்களின் ஆலோசனையை இலங்கை அரசு கேட்கவில்லை எனவும் கடிதத்தில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து தேவாலயத்தை புதுப்பிக்கலாம் என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர்களை ஆலோசிக்காமல் இலங்கை தேவாலயம் கட்டுவது பதற்றத்தை ஏற்படுத்தும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். தமிழக மீனவர்களின் ஒப்புதலை பெற்று தேவலாயத்தை கட்ட மோடிக்கு ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். (இ-5)

## 4 ஆடுகளுக்கு 8 ஆயிரம் அபராதம் விதித்த நீதிமன்று

நான்கு ஆடுகளை பெட்டி ஒன்றினுள் வைத்து மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற நபர்ஒருவருக்கு 8 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம். கடந்த 11ஆம் திகதி நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் இருந்த போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் நான்கு ஆடுகளை பெட்டி ஒன்றினுள் வைத்து மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்று கொண்டிருந்தார்.

இதன்போது பொலிஸாரினால் இடைமறிக்கப்பட்ட அந்நபரிடம் விசாரணைகள் நடத்தப்பட்ட போது ஆடுகள் திருடிச் செல்வது பொலிஸாருக்கு தெரிய வந்தது.

உடனே பொலிஸார் அந்நபரை கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளையும் ஆடுகளையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்காக அந்நபர் ஆஜர்படுத்தப்பட்ட போதே 8 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-5-60)

### குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

வினா இல.29
(அத்:2.ஸ்லோ:57)
எந்த மனிதனின் புத்தி ஸ்திரமானது?
விடை: எந்த மனிதன் அனைத்திலும் பற்று வைக்காமல் நல்லதை அடைந்து மகிழாமல் கெட்டதை அடைந்து வெறுக்காமல் இருக்கிறானோ அவனுடைய புத்தி ஸ்திரமானது.

வினா இல.30
(அத்.2:ஸ்லோ.68)
எந்த மனிதனின் புத்தி ஸ்திரமானது?
விடை: எந்த மனிதனுடைய புலன்கள் புலன்களுக்குரிய போகப்பொருட்களிலிருந்த முற்றும் அடக்கப்பட்டு இருக்கின்றனவோ அவனுடைய புத்தி ஸ்திரமானது.

ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி
எழுத்துப்பரீட்சை
காலம்:22.05.206 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் 11 மணி வரை
இடம்: யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை
அனைத்து வடமாகாண பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-தீவகம் வேலணை மேற்கூர் பெரியபுலம் திருவருள் மிகு மஹா கணபதிப்பிள்ளையார்கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றதுடன் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய 18 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 19ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 830 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து வவுனியா பிரதேசத்தில ஆதி விநாயகர் கோவில் பிரதேசம், வெளிக்குளம் பிரதேசம் ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

# தொடுவானங்களை, கானல் நீரை, விலகி ஓடும் நிழல்களை நாம் துரத்தாமல் தூய ஆவியாரை வாழ்வில் துரத்தி பிடிப்போம்

. 'என் பெயரால் கடவுள் அனுப்பபோகிற தூய ஆவி யானவராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்" என்று இயேசு தம் சீடருக்கு கூறிய பைபிள் வார்த்தைகள் தூய ஆவியானவரின் பெருவிழாவாகிய இன்று எமக்கு தரப்படுகின்றன. இப்பெருவிழாவை, 'பெந்தக்கோஸ்து" என்றும் அழைக்கிறோம் 'பெந்த கோஸ்து" என்ற சொல்லுக்கு, 'ஐம்பதாம் நாள்" என்றும் பொருள்.

கடவுளில் மூன்றாம் ஆள் என்கிறது கத்தோலிக்க விசுவாசம். தூய ஆவி உயிர்த்த இயேசுவின் கொடை. மூவொரு கடவுளுடனான ஒன்றிப்பிற்கு நம் விசுவாசத்தின் மூலம் அழைத்துச் செல்பவர். தூய ஆவியானவர் நமக்கு வாழ்வை வழங்குபவர். நாம் அனைவருமே உண்மையான வாழ்வையும், அழகு, அமைதி மற்றும் அன்பின் முழுமையையும் அதிகம் அதிகமாக விரும்புகிறோம். நம் இதயங்களில் குடியிருக்கும் தூய ஆவியானவரே, உயிருள்ள தண்ணீரின் உண்மையான ஆதாரம்.

## பரமபிதா காட்டிய பாதை

இயேசு தம் சீடர்களுக்கு இறுதி அறிவுரை வழங்கும் போது, 'மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு தந்தையிடம் கேட்பேன்" என்கிறார். அந்தத் துணையாளர் தாம் தூய ஆவியானவர் "துணையாளர்" என இங்கே குறிப்பிடப்படுகின்ற சொல்லுக்கு இரு பொருள்கள் உண்டு. எபிரேய மரபில் இதற்குத் 'தேற்றுகிறவர்", 'ஆறுதல் அளிப்பவர்" என்பது பொருள். மற்றொரு பொருள் உரோமைப் பின்னணியிலிருந்து பெறப்படுகிறது. இதற்குப் 'பரிந்துபேசுபவர்", 'சார்பாக வாதாடுபவர்", அருகிலிருந்து 'உதவி செய்பவர்" என்பதாகும். தூய ஆவி நம் உள்ளங்களில் எழுப்புகின்ற நல்ல சிந்தனைகள் நம் வாழ்வுக்குத் துணையாகும். கடவுளின் ஆவியே நமக்குச் சார்பாக இருக்கும்போது நாம் எந்தச் சக்திக்கும் அஞ்சவேண்டியதில்லை என இயேசு நமக்குக் கற்பிக்கிறார்.

எனவே தூய ஆவியானவர் முழுமையான கடவுள். மூவொரு

'நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிபபவருக்குள் பொங்கி எழும ஊற்றாக மாறி நிலை வாழ்வு அளிக்கும்" எனசமாரியப்பெண்ணை நோக்கி இயேசு வாக்களித்த அதே உயிருள்ள தண்ணீரின் ஆதாரமே தூய ஆவி. தந்தையிடமிருந்து இயேசுவால் அனுப்பப்பட்ட தூய ஆவியானவர் நம்மைத் தூய்மைப்படுத்தி, புதுப்பித்து, மாற்றியமைக்கிறார. அவர் நமக்கு எல்லாவகையான கொடைகளை வழங்குவதோடு நம் தந்தையாம் கடவுளின் குழந்தைகளாகவும் நம்மை மாற்றுகிறார். நம்மீது இறைவன் கொண்டிருக்கும் அளவற்ற அன்பை உணர்ந்து கொள்ளவும், அதே அன்பை நம் சகோதர, சகோதரிகளோடு பகிர்ந்து கொள்ளவும் தூய ஆவி இப்போதும் நமக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறார்.

தூய ஆவியானவர் எம்மோடிருந்தாலும் எம் வாழ்வுப் பயணத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள எத்தனையோ நன்மைகளை உணராமல், நமக்குள் புதைந்திருக்கும் சக்திகளை தெரிந்துகொள்ளாமல் தாகத்தில், தேவையில் துடிக்கிறோம். நம்முள் ஊற்றெடுக்கும் நன்மைகளைப் புரிந்துகொள்ளாமல், தொடுவானங்களை, தூரத்துக் கானல்நீரை, விலகி ஓடும் நிழல்களை நாம் துரத்துவதால, வாழ்வின் பெரும் பகுதியை நாம் வீணாக்குகிறோம். பல நேரங்களில் இந்தப் பொய்யான மாயைகளைப் பெறுவதற்கு நம்மிடம் உண்மையாய் இருப்பனவற்றை விலை பேசுகிறோம். நம் குடும்பம், தொழில், நண்பர்கள் என்று நம்மைச் சூழ்ந்துள்ள நல்லவைகளை இழந்துவிட்டு, பின்னர் வருந்துகிறோம். நமக்குள் இருக்கும் நல்லவற்றை நமக்குத் தெளிவுபடுத்தும் அணையாத ஒளியாக, நமக்குள் நல்லவற்றை ஒவ்வொருநாளும் பிறப்பிக்கும் வற்றாத ஊற்றாக நம்முள் எப்போதும் உறைந்திருக்கும் இறைவன், தூய ஆவியானவர தூய ஆவியின் பெருவிழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில், தூய ஆவி நம்முள் உறையும் இறைவன் என்பதை முழுமையாக நம்புவோம.

நாம் தூய ஆவியானவர் பெருவிழா உட்பட பல விழாக்களை கொண்டாடுகின்றோம். கொணடாட்டம் எதற்காக என்பதை விட, கொண்டாட்டம் எப்படி இருக்கவேண்டும் என்பதிலேயே அதிக கவனம் செலுத்துகின்றோம். எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்பதைப்பொறுத்தே எம் விழாக்களின் முக்கியத்துவம் பிறருக்குத் தெரியவரும் என பெருமிதம் அடைகிறோம். பகட்டு, பிரமிப்பு, பிரமாண்டம் இவைகளே எம்விழாக்களின் உயிர் நாடிகளாய் உள்ளன. இந்த



விழாக்கள் எதற்காக கொண்டாடப்பட்டன என்று அடுத்த நாள் கேட்டால்கூட நமக்கு ஒன்றும் நினைவிருக்காது. அல்லது, அவர்கள் செய்த ஆர்ப்பாட்டமே நமது நினைவில் நிறைந்து, நமக்கு எரிச்சலூட்டும். உலகக் கொண்டாட்டங்களின் இலக்கணம் இது. எனவே உள்ளங்களை மாற்றுவோம். பணத்திலும் அதிகாரத்திலும் நம்பிக்கை வைப்போர் பெறுகின்ற தற்காலிக நிம்மதிகளை விட தூய ஆவியானவரை, வாழ்வில் வரவேற்போர் பெறுகின்ற அமைதி உறுதியானது. பணமும், அதிகாரமும் தரும் அமைதி எந்நேரமும் அழிந்து போகலாம், ஆனால் தூய ஆவியானவர் வழங்கும் அமைதியோ நிலையானது. உலோகம் துருப்பிடிபபது போலவும், பங்குச்சந்தை சரிவது போலவும் செல்வம் திடீரென்று மறைந்து போகலாம், அதிகாரம் தரும் அமைதி கூட ஆட்சிக் கவிழ்ப்புகளால் மறைநது போகலாம், ஆனால இறைவன் தரும் அமைதியான, தூய ஆவியார் எனும் கொடை என்றும் மறைந்து போகாது.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# வடமாகாண வல்லவன் தொடர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வெற்றி







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்டத் தொடரில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற இரண்டாவது போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.க.எதிர்த்து அராலி ஜேம்ஸ் வி.க. மோதியது.

போட்டியின் 6 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் வி.கவீரர் முதலாவது கோலினை அடித்து பார்வையாளரைபரவசப்படுத்தினார்.

தொடர்ந்து 15 ஆவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற மூலை உதையினை நவஜீவன்ஸ் வீரர் கௌதமன் தலை யால் முட்டி கோலாக மாற்றி மேலும் அணிக்கு வலுச்சேர்த்தார்.

மேலும் ஆட்டத்தின் 49 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் வீரர் உஷானந் மேலும் ஒரு கோலினைப் பெற்றார். அராலி ஜேம்ஸ் வீரர்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பின்கள வீரர்கள் அதனை முறியடித்தனர்.

ஆட்ட நேர முடிவில் நவஜீவன்ஸ் வி.க. 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக நவஜீவன்ஸ் தர்சன் தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பணப் பரிசு மற் றும் பதக்கத்தினை கழக நலன் விரும்பி இ.ஞானகரன் வழங்கினார். (கு)

## ஊரெழு றோயலை வென்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழகம்



தெல்லிப்பழை நாமகள் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது. இப்போட்டியில் ஊரெழு றோயல் வி.கழகத்தினை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

போட்டி ஆரம்பித்து றோயல் அணியினரின் கால்களுக்கு இடையிலான பந்து பரிமாற்றம் SHOT PASS நவஜீவன்ஸ் அணியினரை நிலைகுலைய வைத்தது. ஆனாலும் போட்டியின் முற்பாதியில் றோயல் அணியின் ஆதிக்கமே மேலோங்கி காணப்பட்டது.முற்பாதி நிறைவில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை. போட்டியின் பிற்பாதி தொடங்கி 29 ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் உஷானந் நேர்த்தியான கோல் ஒன்றினை பெற்றுக் கொடுக்க ஆட்டம் வீறு கொண்டெழுந்தது.றோயல் அணியினர் நவஜீவன்ஸ் அணியினரின் கோல் பிராந்தியத்தினை ஆக்கிரமித்தபோதும் நவஜீவன்ஸ் அணியின் பின் கள வீரர்கள் அவர்களின் செயற்பாட்டினை முற்று முழுதாக முறியடித்தனர்.போட்டியின் பிற்பாதி ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியின் 3 வீரர்களிற்கு இலகுவாக கோல் போடும் சந்தர்ப்பம் கிடைத்ததும் நழுவ விட்டனர்.ஆட்டநேர முடிவில் றோயல் அணியினை நவஜீவன்ஸ் அணி 1:0 என்ற ரீதியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. (கு)

## டயமன்ஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

இமையாணன் மத்திய வி.கழக உதைபந்தாட்ட தொடரில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இமையாணன் மத்திய வி.கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் கடந்த வியாழன் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி டயமன்ஸை எதிர்த்து விளையாடிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் இறுதிவரை கடுமையாகப் போராடி இறுதி நிமிடத்தில் வெற்றி இலக்கை தவறவிட்டது. 2:3 என்ற அடிப்படையில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது. (கு)

## கடற்கரை கரப்பந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ். மாவட்ட செயலகத்தின் விளையாட்டுப்பிரிவினால் நடத்தப்படும் இருபாலாருக்குமான கடற்கரைக் கரப்பந்தாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்கள் பிரிவில் முதல் சுற்றில் கோப்பாய் அணியை எதிர்த்து கரைநகர் அணியும் சண்டிலிப்பாய் அணியை எதிர்த்து நல்லூர் அணியும் தெல்லிப்பழை அணியை எதிர்த்து நெடுந்தீவு அணியும் கரவெட்டி அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை அணியும் உடுவில் அணியை எதிர்த்து சங்கானைஅணியும்மோதவுள்ளன.

பெண்கள் பிரிவில் முதல் சுற்றில் சாவகச்சேரி அணியை எதிர்த்து கரவெட்டி அணியும் தெல்லிப்பழை அணியை எதிர்த்து உடுவில் அணியும் கோப்பாய் அணியை எதிர்த்து நெடுந்தீவு அணியும் சண்டிலிப்பாய் அணியை எதிர்த்து நல்லூர் அணியும் மோதவுள்ளன. (கு)

## தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இன்றாகும்



மானிப்பாய் ரெட் றேஞ்வர்ஸ்



பலாலி விண்மீன்



சாவற்காடு மகாத்மா



உடுப்பிட்டி நவஜீவன்ஸ்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் 53 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகங்களுக்கிடையே நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் கழக தலைவர் நா.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் லீக் மட்டும் நடத்தும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாவற்காடு மகாத்மா விளையாட்டுக கழகமும் தொடர்ந்து மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

மேற்படி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சின்னத்துரை தவராசா கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## இன்றைய போட்டி


பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கு மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் றீகல் ஸ்டார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

சிவார்ப்பணம்

## அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

# ஓராண்டு நினைவுதனில்...







அன்னையின் மடியில்
25.02.1950

ஆண்டவனின் நிழலில்
26.05.2015

அமரர்

# நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

(ஜெகதா ஹாட் வெயர்ஸ் ஸ்தாபகரும் உரிமையாளரும் - கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்)

திதி : வளர்பிறை நவமி (15.05.2016)

தாயுமானவரே!
அங்கணன் நாமம் கொண்டு அமுத சுரபியானீர்
அத்தி முகத்தோனின் அன்பரே!
ஆரா அமுதமாய் அனைவரையும் ஆதரித்தீர்
ஆகுலம் களைந்து ஆண்டகையாய்!
இல்லறம் தனை நல்லறமாய் இயற்றினீர்
இல்லாளுடன் இன்புற வாழ்ந்து!
ஈட்டம் செய்து இல்லோர்க்கு ஈந்தீர்
இணைந்தோரை ஈடேற்றி!
உத்தமராய் வாழ்ந்து உதாரம் கொண்டீர்
உற்றோரை உய்வித்து!

[illegible]மை தனை உள்ளத்திருத்தினீர்
ஊரவர்க்கும் ஊருணியாய் நிலைத்திருந்து!
எழுழ்வலி கொண்டு எல்லோர்க்கும் எம்மானானீர்
என்றும் பிறர்க்கென எண்ணி!
ஐயனாக இரு மக்கட்கும் ஏற்ற வழிகாட்டினீர்
எம் வாழ்வுதனில் நல் ஏற்றம் கண்டு உவந்து!
ஒளி தரும் ஞானப் பரிதியானீர்
ஏற்ற ஒருமைப்பாடும் அன்புடன் போதித்து!
ஓங்கு புகழடைந்து ஓதிமமாய் நாமிருக்க
ஒளிசேர் ஓவியமாய் ஆனதேனோ!

ஔடதம் கேட்கின்றோம்
உமை இழந்த எம் வலிக்கு!
அஃது தான் கிடைக்குமோ அகிலத்தில்
இனி வரும் எம் வாழ்வு தனில்!

ஐயனே!
உங்கள் விழுதுகள் பெருகும் பொழுது
தங்கள் நல்வழிகளும் தொடரும் என
அக்கினிப் பிளம்பெனக் கொதித்து வழியும்
எம் விழி நீரை சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்.

35/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(4571)

ஈரவிழிகளுடன்,
குடும்பத்தினர்.

நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் நடமாடும் மிருக வைத்திய தேவைக்கு
தொடர்பு :- Dr.K.கிருபாகரன்
0779738802 / 0212242502
மாலை :- 3 - 5
446, நாவலர் வீதி, நல்லூர்.
(4565)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062
(C-4605)


# தியாகத்தால்...

உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியின் ஒத்துழைப்புடன் யாழ்.குடாநாட்டில் தற்போது நிலவும் வன்முறைகளை விரைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவோம் என நம்புகின்றோம்.

உலக வரலாற்றில் யூத இனத்திற்கு தனியிடம் உண்டு. அவர்கள் தமது நாட்டினை பெற்றுக்கொள்வதற்காக எந்தளவு தயாகம் செய்து இஸ்ரேல் எனும் தேசத்தை கட்டியெழுப்பினார்களோ? அதே போன்ற ஒரு அர்ப்பணிப்புக்காக உயிர் விட்ட சமூகம் இன்று தனது நண்பர்களை வாளால்வெட்டுகின்றது.

இது தொடர்பில் ஆராய வேண்டும். எமது தியாகங்கள் அர்ப்பணிப்புக்கள், வரலாறுகள், ஒழுங்காக பதிவு செய்யப்படுமாக இருந்தால், அதனை பார்வையிடும் இளைஞர்கள் ஒரு போதும் வழி தவறி போகமாட்டார்கள் என நீதவான் யூட்சன் தெரிவித்தார். (செ-)


வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணத்தை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் தங்கக் கூடிய வீடு வாடகைக்கு உடன் தேவை.
0772814020
(4582)

கார்கள் வாடகைக்கு உண்டு
Axio, Premio, N16, N15, DAEWOO
தொடர்புகளுக்கு
077 996 1250
(4572)

முந்துங்கள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின
யாழ் - கொழும்பு முன்னணி ஹொட்டேல் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
Business & Hotel Management
UK Certified
BATCH 1 - Entry Level
- Introduction to Tourism & Hospitality Management
- Food & Beverage Management
- English For Beginners & Personality Development
BATCH 2 - Diploma Level
- Front Office Management
- House Keeping Management
- Special Hospitality English Program
100% JOB/VISA Guaranteed
இன்றும் சொற்ப வெற்றிடங்களே
ஏமாற்றத்தை தவிர்க்க அழையுங்கள்
077 3616 798 021 222 0011
www.sikaram.lk Sikaram Academy
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(C-4608)

வீடியோ எடிட்டிங் வேலைகள் செய்து தரப்படும்

பிறந்தநாள், மஞ்சள் நீராட்டு, திருமணம் போன்ற அனைத்து விழாக்களும். மிகத் தரமாக வீடியோ எடிட் செய்து தரப்படும். (HD வீடியோக்கள் மட்டுமே எடிட் செய்யப்படும்)
தொடர்புகளுக்கு:
Creative Desk,
146, Parameswara Junction, Thirunelvely.
T.P: 077 777 8529
(4390)





யாழ் மண்ணில் கடந்த 12 ஆண்டுகாலமாக மக்களின் நன்மதிப்பைப்பெற்று அன்றும் இன்றும் கல்விச் சேவையில் சிறந்து விளங்கும் உங்கள் நம்பிக்கைக்குரிய
IDM Nations Campus Since 1981 இல்
UK பட்டப்படிப்பு
University UGC Recognized Awarded Degree
O/L, A/L தகமையுடன் புதிய பயிற்சி நெறிகளில் இணையும் வாய்ப்பு ....
இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்

LLB (Hons) BRITISH DEGREE | ELIGIBLE TO SIT ATTORNEY-AT-LAW EXAMINATION
இலங்கைச்சட்டக் கல்லூரியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (Sri Lanka Law College)

B.Sc (Hons) SPORTS SCIENCE & COACHING
இலங்கையில் முதல் முறையாக அறிமுகம் செய்யப்பட்ட பயிற்சிநெறி விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கும் மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

B.A (Hons) BUSINESS MANAGEMENT
வங்கி ஊழியர்கள், காப்புறுதி உத்தியோகத்தர்கள், விற்பனைப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு உகந்த பயிற்சி நெறி.

குறிப்பு
அனேக உத்தியோகத்தர்களின் வேண்டுகோளிற்கு இணங்க கிழமைநாட்களில் மாலை 6 மணிதொடக்கம் 8 மணிவரையும், சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே உள்வாங்கப்படுவதனால் உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

IDM Nations Campus Since 1981
216, Navalar Road, Jaffna.
(இலுப்பையடி சந்திக்கு அருகில்)
Tel: 021 222 9901
HOTLINE 077 441 9901
(C-4611)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French - FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1095 மாணவர்கள் French கற்றுள்ளனர்.
DELF A1, A2, B1 வகுப்புக்கள் ஆரம்பம் உடன் பதியுங்கள்.
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம்: 28.05.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 30.05.16 Mon@ 4pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC
(C-4610)





புதிய பிரிவுகள் ஆரம்பம்
LONDON METROPOLITAN COLLEGE
IELTS
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration
IELTS LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
APPLIED SPOKEN ENGLISH (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
DIPLOMA IN ENGLISH
Duration: 60 hours (Week, Weekends)
COMPUTER COURSES
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing
LONDON METROPOLITAN COLLEGE
No.136, palali road, parameswara junction, Jaffna.
HOTLINE : 0714150995 | 021 753 8395
(C-4609)





DELL
"உலகின் மிகச்சிறந்த Dell Laptop களுக்கு விசேட கொடுப்பனவுகள்"
4 வருடங்கள் வரை நீடித்துக் கொள்ளக்கூடிய உத்தரவாதம்
4G டொங்கல் இலவசம்
SINGER
வட்டி இன்றி
DELL - NB - I3 (DELL Inspiron 3543)
★ Intel i3 - 5005U, 2.0GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
ரூ.71,999/-
விசேட விலை ரூ.65,999/-
மாதாந்தம் ரூ.4,333/- X12
DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
★ Intel Dual Core 1.5GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
ரூ.62,999/-
விசேட விலை ரூ.57,999/-
மாதாந்தம் ரூ.3,999/- X12
இலவசம்
(C-4606)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) | 021-2225408 | பருத்தித்துறை | 021-2263411 | முல்லைத்தீவு | 021-2290180 | கொடிகாமம் | 077-7858232 |
| யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) | 021-2216320 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி | 021-2270197 | கிளிநொச்சி | 021-2280199 |
| நெல்லியடி | 021-2264937 | சுன்னாகம் | 021-2240555 | மானிப்பாய் | 021-2255343 | | |

SINGER Plus


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2047 | 15.05.2016 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 65





# நீதி கேட்கும் நினைவேந்தல்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. இப்போது அகவணக்கம் செலுத்துவோம் என்று பண்டிதர் அறிவித்ததும் ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து அகவணக்கம் செலுத்தினர்.

வழமையில் இறைவணக்கம் என்று அறிவிக்கும் பண்டிதர் இன்று அகவணக்கம் என்று அறிவித்ததிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல். அதனால்தான் பண்டிதர் அகவணக்கம் என்று அறிவித்தார்.

அகவணக்கம் நடந்த போது விதானையார் விஸ்வலிங்கம் விம்மி விம்மி அழுவது கேட்டது.

விதானையாரின் விம்மல் ஆலடியில் இருந்தவர்களை நெகிழ வைத்து விட்டது.

அன்றே எந்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் குன்றே அணையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ... என்ற திருவாசகத்தை வாத்தியார் வைத்திலிங்கம் பாடினார்.

மோகன ராகத்தில் வாத்தியார் திருவாசகம் பாடிய போது ஆலடி கண்ணீரால் நனைந்து கொண்டது.

தொடர்ந்து மூப்பர்... உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசமாய் இருப்பவர் இறப்பிலும் வாழ்வார் என்ற வாசகத்தை கூறிவிட்டு மௌனமானார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்;

அகவணக்கம் ஆலடியில் கடும் நிசப்தத்தை ஏற்படுத்த மௌனம் கலைக்கும் பொருட்டு பண்டிதர் குரல் கொடுத்தார். வன்னி பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரில் உயிரிழந்தவர்களுக்கு எங்கள் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

அவர்களுடைய ஆத்மா சாந்தியடையட்டும். ஈழத் தமிழர்களாகப் பிறந்ததால் அவர்கள் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச தொண்டு அமைப்புக்கள் இருந்தும் தமிழர்களுக்கு எந்தப் பயனும் இல்லாமல் போனது தான் பெரும் வேதனை.

சர்வதேச அமைப்புக்கள் நினைத்திருந்தால் எங்கட மக்களை நிச்சயம் காப்பாற்றி இருக்க முடியும்.

என்ன செய்யிறது எங்கட இலங்கை அரசும் சர்வதேசமும் சேர்ந்து பழி தீர்த்துப் போட்டினம். பரவாயில்லை. என்றோ ஒருநாள் இதற்கான பாவத்தை இவர்கள் அனுபவிக்காமல் விடப்போவதில்லை.

என்றும் இல்லாதவாறு பண்டிதர் பரமலிங்கம் உணர்ச்சிவசப்பட்டு பேசினார்.

பண்டிதரின் ஆவேசத்தோடு மாநாட்டு உறுப்பினர்கள் அமர்ந்து கொண்டனர். விதானையார் விஸ்வலிங்கம் தன் தோளில் கிடந்த உத்தரியத்தால் கண்களை ஒற்றிக் கொண்டார்.

முள்ளிவாய்க்காலில் இறந்து போன தன் மகனை



நினைந்து நினைந்து விதானையார் கண்ணீர் வடிக்காத நாளில்லை. இப்படி ஒரு இழப்பு எனக்கு ஏன்...? முதுமையை முதுமையாக்கும் அந்த வேதனையில் இருந்து விதானையார் இன்னமும் விடுதலையாகவில்லை.

விதானையாரின் சிந்தனையை திசை திருப்பும் பொருட்டு கங்காணியார் பேசத் தலைப்பட்டார்.

**கங்காணி:** என்ன இருந்தாலும் மகிந்த ராஜபக்ஷ ஒரு சிறந்த தலைவர் என்ற தோற்றப்பாட்டை எங்கட ஆட்களாவது தவிர்த்திருக்க வேணும்.

(கங்காணியார் திடீரென இவ்வாறு கூறியதும் மாநாட்டில் இருந்த ஒருவருக்கும் விளங்கவில்லை)

**மூப்பர்:** என்ன கங்காணியார் என்ன சொல்லுறியல். சொல்லுறதை தெளிவாச் சொல்லுங்களன்.

**கங்காணி:** இஞ்சே மூப்பர், அதிபர் நியமனம் பெற்றவர்களுக்கு முன் சேவைப் பயிற்சி நடக்குதல்லோ. அதில சிறந்த தலைவர்கள் அதிலும் ஆளிடைத் தொடர்புடைய சிறந்த தலைவர்கள் என்றொரு பட்டியலை சிங்கள கல்வியியலாளர்கள் தயாரித்திருக்கினம்.

அதில அமெரிக்க நாட்டு ஜனாதிபதி ஜோர்ச் புஷ்... என்ற சிறந்த தலைவர்கள் பட்டியலில இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின்ர பெயரையும் சேர்த்திருக்கினமாம்.

**விதானையார்:** அப்ப, சிறந்த தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்று சிங்கள புத்திஜீவிகள் சொன்னதை எங்கட புத்திஜீவிகள் இஞ்ச கொண்டு வந்து புதிய அதிபர்களுக்குச் சொல்லிக் கொடுக்கினமாமோ.

**வாத்தியார்:** சரி அவங்கள் மகிந்தவின்ர பெயரைச் சேர்த்தாங்கள் எண்டால் நாங்கள் அந்தப் பெயரை விலத்தியிருக்கலாமல்லோ.

எங்களுக்கு ஏற்றமாதிரி நாங்கள் ஒரு உதாரணத்தை முன்வைப்பதுதானே நல்லது. தமிழர்களில சிறந்த தலைவர்கள் இல்லையோ?

**மூப்பர்:** சிறந்த தலைவர் மகிந்த ராஜபக்ஷ எண்டால் அவரை திரும்பவும் ஜனாதிபதியாக்குவதற்கு மைத்திரிபால சிறிசேன விடாதது எதற்காம்.

மகிந்தவின் ஆட்சியில் தன்ர பிள்ளையளுக்கு மரணத்தை ஏற்படுத்துவதற்குக் கூட முயற்சி நடந்தது என்று சந்திரிகா அம்மையார் சொல்லுறார்.

தேர்தலில வெற்றி பெற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ! நான் தேர்தலில் தோற்றிருந்தால் என்ர குடும்பமே அழிந்திருக்கும் என்கிறார்.

அப்படியானால் இப்படியானவர் தானோ சிறந்த தலைவர்.

**பண்டிதர்:** மூப்பர் அதுகள் ஒரு பக்கம் இருக்கட்டும் எங்கட வன்னியில நடந்த கொடூரம் தெரியாதோ.

போர்க்குற்றவிசாரணை நடந்திருந்தால் மகிந்தவிற்கு மின்சார நாட்காலியில் இருத்தி தண்டனை வழங்கப்பட்டிருக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனீவாவில வைத்துச் சொன்னவர்.

இதுக்குப் பிறகும் சிறந்த தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்று சிங்கள புத்திஜீவிகள் இனங்காட்டியிருக்கினம் என்றால் விடுதலைப் புலிகளை தோற்கடித்தவர் என்ற ஒரே காரணத்திற்காக என்பது தெரியுதல்லோ.

**வாத்தியார்:** பண்டிதர் சொல்லுறது முழுக்க முழுக்க சரி. விடுதலைப் புலிகளை வென்றது என்பதை ஒருபுறம் வைத்து விட்டு, எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பதை சிங்கள புத்திஜீவிகள் ஒருக்கால் பார்ப்பினமாக இருந்தால், மகிந்த ராஜபக்ஷவை சிறந்த தலைவர் என்ற பட்டியலில் சேர்த்து அதனை புதிய அதிபர்களுக்கு சொல்லிக்கொடுக்குமாறு செய்திருப்பினமோ என்ன?

**விதானையார்:** வாத்தியார் சிறந்த தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்று சிங்கள அதிபர்களுக்குச் சொல்லிக் கொடுத்தால், அதை அவர்கள் தங்கட மாணவர்களிட்டையும் பெற்றோர்களிட்டையும் பிரசாரம் செய்வினம்.

அடுத்த தேர்தலில மகிந்தனார் வெல்லுறதற்கு இது ஒரு நல்ல செற்றப்பல்லோ. அந்த முயற்சி தான் நடக்குது. இதெல்லாம் நல்லாட்சிக்கு எங்க தெரியப்போகுது.

**கங்காணியார்:** என்ன இருந்தாலும் சிறந்த தலைவர் மகிந்த ராஜபக்ஷ என்பதை தமிழ் கல்வியியலாளர்கள் நீக்கி விட்டிருக்க வேணும்.

சிங்கள கல்வியியலாளர்கள் சொல்லுறதை அப்படியே சொல்ல வேணும் என்று இல்லைத்தானே. இனிமேலாவது எங்கட கல்வியியலாளர்கள் தங்கட இனத்தின்ர நலன் கருதியும் செயற்படுவது நல்லது.

**விதானையார்:** சிங்கள புத்திஜீவிகள் சொல்லுறதை அப்படியே நாங்கள் ஏற்றுக் கொள்வதால்தான் எங்கள ஒன்றும் தெரியாதவர்கள் எண்டு அவையள் நினைக்கினம்.

இந்த வங்கிகளைப் பாருங்களன். எந்தக் கணக்கை அறிமுகப்படுத்தினாலும் சிங்களப் பெயர்! ஏன்? தமிழ் பெயரிலும் ஒரு கணக்கை அறிமுகப்படுத்தலாம் அல்லது சிங்களப் பகுதியில இயங்குகிற வங்கிகளில சிங்களப்பெயரிலும் தமிழ்ப் பிரதேசங்களில இயங்குகிற வங்கிகளில தமிழ்ப் பெயர்களிலும் கணக்குகளை ஆரம்பிக்கலாம்தானே.

**வாத்தியார்:** இதைச் சொல்லுறதற்கு எங்கட வங்கி முகாமையாளர்கள் முன்வர வேணுமே.

நாங்கள் இதைச் சொல்லப் போய் எங்கட புறமோசனுக்கு இழுக்குத் தேடி விடுவானேன் என்று நினைத்தால் என்ன செய்யிறது.

எங்கட ஆட்கள் எந்தப் பதவியில இருந்தாலும் தமிழ் பற்றோட இருக்க வேணும் பாருங்கோ!

தமிழ்ப் பற்றில்லாமல் சிலர் நடிக்கினம். என்றோ ஒரு நாள் அவையின்ர கொட்டம் அடங்கும். அப்பயெல்லாம் தெரிய வரும். இப்படி வாத்தியார் சொல்ல அதை ஆமோதிப்பதுபோல ஆலடி பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# வடக்கு மாகாண சபையில் எழுந்த கூச்சல், குழப்பங்கள் எதற்காக?




10.05.2016 அன்று நடந்த வடக்கு மாகாண சபையின் கூட்டத்தில் பெரும் கூச்சல், குழப்பம். வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய இளம் உறுப்பினர்கள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தனர்.

வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ். குடாநாட்டில் நடக்கின்ற கொள்ளை, வாள்வெட்டு, போதைவஸ்து ஆகியவை தொடர்பில் பொலிஸார் கட்டுப்படுத்தவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தின் இயல்பு நிலைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்ற சமூக அக்கறையுடன் கொதிப்படைந்த வடக்கு மாகாண சபையின் இளம் உறுப்பினர்கள் ஆவேசமாகப் பேசுகின்றனர் என்று நினைத்தால் அதுதான் இல்லை.


அரசியலில் நுழைந்த எங்கள் இளம் செல்வங்கள் அடுத்த தேர்தலில் தங்களுக்கு இடம் கிடைப்பதற்காக ஆடிய சன்னதம்தான் அது என்பது பின்னர் தெரியவந்தது.

வடக்கு மாகாண சபை தயாரித்த தீர்வுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தரிடம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கையளிக்காமல், அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவரும் சபாநாயகருமான கரு ஜயசூரியவிடம் தீர்வுத்திட்டம் கையளிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இளம் உறுப்பினர்கள் ஆவேசமாகக்கத்திக் குளறினர். இதில் இளம் உறுப்பினர் ஒருவர் தமிழ் மக்கள் பேரவைக்காகவே இரா. சம்பந்தரிடம் தீர்வுத் திட்டம் கையளிப்பதை முதலமைச்சர் தவித்தார் என்று குற்றஞ் சுமத்தினர்.

ஒரு இளம் சட்டத்தரணி ஏலவே ஆசிரியராக இருந்த ஒருவர் இத்துணை தூரம் அபத்தமாகச் சிந்தித்தார் எனும் போது அவரிடம் இருந்த சுயநல அரசியல் கரிசனை எவ்வளவு தூரம் வெளிப்பட்டது என்பதை உணர முடிந்தது.


உண்மையில் வடக்கு மாகாண சபை தீர்வுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் தான் தமிழ்மக்கள் பேரவைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டது.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்ட தமிழ்மக்கள் பேரவை இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்ட வரைபொன்றைத் தயாரித்திருந்தது. தமிழ்மக்கள் பேரவை தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கிறது என்பதைக் கண்ட வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் ஒன்றுகூடி கொழும்பில் இருந்து கிடைக்கப்



## அரசியல் அமைப்புக் குழுவிடம் தீர்வை கையளித்தது தவறா?

பெற்ற ஆலோசனையின் அடிப்படையில், வடக்கு மாகாண சபையும் தீர்வுத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக்



கொண்டு வந்தனர்.

தமிழ்மக்கள் பேரவைக்கு எதிராக தாமும் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பது நோக்கமேயன்றி தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற மன விருப்பத்தோடு வடக்கு மாகாண சபை தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை என்பது தெட்டத் தெளிவு.

முதலமைச்சரைத் தலைமையாகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவை தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பது போல வடக்கு மாகாண சபையும் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தால் தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டம் இரண்டாம் இடத் திற்கு தள்ளப்பட்டு விடும் என்பது வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரின் முடிவு.

அதுமட்டுமன்றி வடக்கு மாகாண சபை தயாரிக்கின்ற தீர்வுத் திட்டமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கையளிப்பதுடன் அந்த அத்தியாயத்தை முடிவுறுத்தி விடுவதும் குறித்த சில உறுப்பினர்களின் திட்டம்.

அதாவது தமிழ்மக்கள் பேரவைக்குப் போட்டியாக தயாரித்த தீர்வுத் திட்டத்தை கூட்டமைப்பின் தலைவரிடம் கையளிப்பதோடு அந்தக் கையளிப்பு நிகழ்வு அடங்கி விடவேண்டும்.

அதன் பின்னர் அந்தத் தீர்வுத் திட்டத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கிடப்பில் போட்டு விடுவார்.

தொடர்ந்து அந்தத் தீர்வுத் திட்டம் யாருடைய கைக்கும் செல்லாமல் எல்லாம் சம்பந்தர் ஐயா பார்த்துக்கொள்வார் என்று கதையை முடித்துவிடுவதே நோக்கம்.

ஆக, வடக்கு மாகாண சபை தீர்வுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள்

♦ தமிழ்மக்கள் பேரவைக்குச் சவாலாகத் தீர்வுத் திட்டத்தை தயாரித்தல்.

♦ தயாரித்த தீர்வுத் திட்டத்தை முதல்வரைக் கொண்டே சம்பந்தரிடம் கையளித்தல்.

♦ தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை வேறு யாரிடமும் ஒப்படைக்கா மல் சம்பந்தர் தன்னுடன் வைத்திருப்பது என்ற அடிப்படையிலேயே திட்டம் தீட்டப்பட்டது.

இருந்தும் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதில் முனைப்புடன் இருந்தவர்களுக்கு இந்த உள்வெட்டுச் சதி பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை.

இவர்கள் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து அரசிடமும் கையளிக்க வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

அதனடிப்படையில் அவசர அவசரமாக புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் குறித்து மக்கள் கருத்தறியும் குழுவிடம் இத்தீர்வுத் திட்டத்தை கையளித்தால் மட்டுமே அவர்கள் மேற்கொள்கின்ற அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் போது இத்தீர்வுத் திட்டம் குறித்து கவனம் செலுத்தப்படும் எனக் கருதிய முதலமைச்சர் அதனை வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவுடன் இணைந்து சபாநாயகரிடம் கையளித்தார்.

ஒரு நல்ல நோக்குடன் செயற்பட்டதைப் பொறுக்க முடியாதவர்கள் வடக்கு மாகாண சபையின் முக்கியமான கூட்டத்தொடர் நேரத்தைப் பாழ்படுத்தி விட்டனர்.

சபையில் எழுந்த கூக்குரல்கள், குழப்பங்களைக் கட்டுப்படுத்த அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் முயற்சித்தாராயினும் அவரின் முயற்சி தோற்றபோது அவருக்கும் சீ... இதென்ன என்ற மனச்சலிப்பு ஏற்பட்டதைக் காணமுடிந்தது. என்னசெய்வது தங்கள் நலனுக்காக பின்லேடனை அமெரிக்கா உருவாக்கியதாயினும் அமெரிக்காவுக்கு எதிராகப் பின்லேடன் திரும்பியபோதுதான் அமெரிக்கா பின்லேடனை கண்டு கொண்டது.

இத்தகையதொரு நிலைமை வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருக்கும் ஏற்பட்டதைக் காண முடிந்தது.

கூச்சல்கள், குழப்பங்கள் முதலமைச்சருக்கு எதிராக இருந்தபோது அதனைக் கட்டுப்படுத்தாமல் நடக்கட்டும் நடக்கட்டும் என்றிருந்தவர்களுக்கு தாமும் இருந்து கடுமையாகப் பாடுபட்டு தயாரித்த தீர்வுத் திட்டத்தை கூச்சலிட்டு இவர்கள் குழப்பி அர்த்தமற்றதாக்கி விட்டார்களே என்றபோது இவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று நினைத்தாலும் கட்டுப்படுத்தல் சாத்தியமில்லை. அடுத்த தேர்தலில் மக்கள் இவர்களிடம் நியாயம் கேட்டால் மட்டுமே உண்டு என்பதாக நிலைமை முடிந்து போனது.

விதுரன்




# தேவதையின் தீர்ப்பு

அது ஓர் அழகிய பனிக்காலம்.

ரவியும் சீதாவும் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தனர். இருவரும் ஒரே வகுப்பு. படிப்பில் கெட்டிக்காரர்கள். ஆனால் அவர்களுக்குள் அடிக்கடி விவாதங்கள் வருவதுண்டு. காரணம், அவர்களில் யார் பெரியவர் என்று. அதை நிரூபிக்க, இருவரும் போட்டி போட்டுக் கொண்டு படிப்பதும் உண்டு.

அன்றும் அப்படித்தான் ரவியும் சீதாவும் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கிடையே விவாதம் முற்றியது.

ரவி சொன்னான், "நான்தான் உன்னை விட அறிவில் சிறந்தவன்" என்று.

ஆனால் சீதாவோ அதை மறுத்தாள். "நிச்சயமா இல்லை நான்தான்" என்றாள் ஆணித்தரமாக. அதற்குச் சான்றாக அவரவர் தங்கள் பிரதாபங்களை சுட்டிக் காட்டிக்கொண்டிருந்தனர். இதே ரீதியில் பேச்சு வளர்ந்து கொண்டிருந்தது.

அப்போது திடீரென அவர்கள் முன் தோன்றியது ஓர் அழகிய தேவதை. தேவதையைக் கண்ட இருவரும் செய்வதறியாமல் திகைத்தனர். பின் இருவரும் சுதாகரித்துக்கொண்டு. "நீங்கள் யார்?" என்றனர்.

தேவதை அவர்களிடம், "நான் தேவலோகத்து மங்கை. இந்த வழியாகத்தான் தினமும் பறந்து உலா செல்வேன் இன்றும் அவ்வாறு போகும்போது உங்களது வாக்குவாதம் கேட்டது. பொறுக்கமுடியாமல் இறங்கி வந்தேன்" என்றது.

பின், "உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள். முடிந்தால் தீர்த்து வைக்க முயற்சிக்கிறேன்" என்றது.

உடனே ரவி, "தேவதையே! இவளைவிட நான்தான் அறிவில் சிறந்தவன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டேங்கிறா" என்றான்.

"ஒண்ணும் கிடையாது நான்தான் இவனை விட அறிவாளி" என்று சீதா சொல்ல, ரவி மறுக்க, சூடான விவாதம் மீண்டும் தொடங்கியது.

இதைக் கண்ட தேவதை வருந்தியது. ஒரு கணம் யோசித்தது.

"சரி, சரி உங்கள் சண்டையை சற்று நிறுத்துங்கள். இதற்கு நான் ஒரு வழி செய்கிறேன்" என்று கூறியது.

"உங்கள் இருவருக்கும் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெற்றி பெறுகிறீர்களோ, அவர்தான் அறிவில் சிறந்தவர்" என்று கூறி, "உங்களுக்கு இதில் சம்மதமா?" என்று கேட்டது.

ரவியும் சீதாவும் "சம்மதம்" எனத் தலையாட்டினர்.

உடனே போட்டி என்ன என்பதை தேவதை அவர்களிடம் சொல்ல ஆரம்பித்தது. "நான் உங்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒரு குடுவை தருகிறேன். இது பனிக்காலம் அல்லவா? அந்தக் குடுவையில் இரவு முழுவதும் பனித்துளிகளைச் சேமிக்க வேண்டும். இருவரில் யார் அதிகம் சேமிக்கிறீர்களோ அவர்தான் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்" என்று கூறியது.

"ஆனால் ஒரு நிபந்தனை. இத் தருணத்திலிருந்து போட்டி முடியும் வரை நீங்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ளவோ பேசிக் கொள்ளவோ கூடாது. நான் நாளை மாலைதான் மீண்டும் வருவேன். இதே மைதானத்தில் எனக்காகக் காத்திருங்கள்" என்று கூறி, மூடியில்லாத இரு குடுவைகளை அவர்களிடம் கொடுத்துவிட்டு மறைந்தது.

இருவரும் குடுவையுடன் அவரவர் வீடுகளுக்குச் சென்றனர். செங்கதிர் சூரியன் மறைந்து, பால் ஒளி வீசும் இரவு ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் பனியும் கொட்ட ஆரம்பித்தது. ரவி குடுவையை எடுத்துக்கொண்டு தோட்டத்துக்கு வந்தான். திறந்தவெளியில் வைத்தான். பின் உறங்கச் சென்றான். ஆனால் உறக்கமே வரவில்லை. அடிக்கடி சென்று குடுவையில் பனித்துளிகள் சேர்ந்துள்ளதா எனப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

சீதாவும் அவளது வீட்டின் முன்புறம் உள்ள புற்தரையில் குடுவையை வைத்தாள். இடையிடையே பனித்துளியின் அளவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். "நாளை எப்படியாவது ரவியை ஜெயிக்கணும்' என்ற சிந்தனையிலேயே அவள் தூங்கிப்போனாள்.

மறுநாள் பொழுது புலர்ந்தது.

சீதாவும் ரவியும் சென்று அவரவர் குடுவையைப் பார்த்தனர். ஓரளவுக்கு இருவரது குடுவையிலும் பனி நிறைந்திருந்தது. ஆனால் ரவியின் குடுவையில் இதை விட அதிகம் இருக்குமோ என்று சீதாவும், சீதாவின் குடுவையில் அதிகம் இருந்தால் என்ன செய்வது என்று ரவியும் நினைத்தனர்.

மதியத்துக்கு பின் இருவரும் மைதானத்துக்கு தேவதையைப் பார்க்கக் கிளம்பினர். அப்போது மற்றவரது குடுவையில் அதிகமாக இருந்தால் நாம் தோற்றுவிடுவோமே என்று இருவருமே நினைத்ததால், குடுவை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துச் சென்றனர்.

மைதானத்தில் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளாமல் குடுவையை மறைத்துவைத்தபடி காத்திருந்தனர். மாலை ஆனதும் தேவதை வந்தது.

"சரியாக வந்துவிட்டீர்களே! எங்கே உங்கள் குடுவையைக் காட்டுங்கள்" என்று குடுவைகளை வாங்கிப் பார்த்தது.

பின்னர் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தது தேவதை. இதைக் கண்ட இருவரும் புரியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். பின்பு ரவி கேட்டான்,

"ஏன் இப்படிச் சிரிக்கிறீங்க?" என்று.

அதற்குப் பதில் சொல்லாமல் மீண்டும் சிரித்த தேவதை, "சாதாரணமாக பனித்துளி என்பது என்ன தெரியுமா? மேலே உள்ள நீராவியின் மேல் குளிர்ந்த காற்றுப்படும் போது, அது பனித்துளியாக மாறுகிறது. அந்தப் பனித்துளி மீது நல்ல வெயில் படும்போது, அது மீண்டும் நீராவியாகி விடும். அப்படிப் பார்த்தால் நீங்கள் மதியத்திலிருந்து இங்கே காத்திருக்கிறீர்கள். என்னதான் குடுவையில் பனித்துளி சேர்ந்திருந்தாலும் இந்த வெயிலில் சிறிதளவாவது ஆவியாகியிருக்கும். மீதி கொஞ்சம்தான் குடுவையில் தங்கியிருக்கும். ஆனால் உங்கள் இருவரது குடுவையும் நிரம்பி வழிகிறதே! இது எப்படி? இதைக் கண்டு சிரிக்காமல் என்ன செய்வது?" என்று கூறியது.

"இப்போது சொல்லுங்கள். உங்களில் அறிவில் 'சிறந்தவர் யார் என்று?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டது தேவதை.

இருவரும் என்ன செய்வது என்று தெரியாமல் தலைகவிழ்ந்து நின்றனர்.

"பார்த்தீர்களா? இது நம் வாழ்வில் தினமும் நிகழும் ஒரு சாதாரண நிகழ்வு. இதைக்கூட நாம் தெரிந்துகொள்ளவில்லை. உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்த உலகில் எல்லாமே தெரிந்தவர்கள், புத்திசாலிகள் என்று எவருமே இல்லை. இந்த உலகத்தில் உள்ளவர்கள் கற்றுக்கொண்டது வெறும் கையளவு மட்டுமே. கற்றுக்கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ உள்ளன. அவற்றைத் தெரிந்துகொள்ளத்தான் நீங்கள் முயற்சிக்க வேண்டுமே தவிர, இப்படி வீண்விவாதங்கள் செய்து நேரத்தை வீணடிப்பது எவ்வகையில் சிறந்ததாகும்?" என்று கேட்டது தேவதை.

அதைக் கேட்ட இருவரும் தம் தவறை உணர்ந்து, "எங்களை மன்னித்துவிடுங்கள். நாங்கள் இனிமேல் இதுபோன்ற தவறுகளை எல்லாம் செய்யமாட்டோம்" என்று கூறினர்.

பின் தேவதை அவர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது பரிசு தர விரும்புகிறேன். என்ன வேண்டும்? கேளுங்கள்" என்றது.

"நீங்கள் கொடுத்த இந்த அறிவுரையே எங்களுக்கு விலைமதிக்க முடியாத பரிசு" என்று ஒரே குரலில் இருவரும் கூறினர்.

"உங்களது இந்தப் பரிசை எங்களது மற்ற நண்பர்களுக்கும் கொடுத்து, அவர்களையும் நல்வழிப்படுத்துவோம்" என்றாள் சீதா.

"மாணவர்களாகிய நீங்கள்தான் இந்த பூலோகத்தின் தூண்கள். தன்னம்பிக்கையும் தன்னடக்கமும் கொண்டு வெற்றி பெற வாழ்த்துகள்" என்று கூறி மகிழ்ச்சியுடன் மறைந்தது தேவதை.

ரவியும் சீதாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர் உண்மையான நட்புடன்.



# நீதி கேட்கும் நினைவேந்தல்



பச்சிளம் குழந்தைகள் முதல் பாகுபாடின்றி பல பத்தாயிரம் உயிர்களைப் பறிகொடுத்த தமிழினம் இன்றும் நீதிகோரி நிற்கிறது. ஆனால் நீதியை நிலைநாட்டுவார்கள் என்று நம்பிக்கெட்ட இனமாகவும் தமிழினத்தை மாற்ற சதி நடக்கிறது.

நல்லாட்சி அரசும், சர்வதேச நாடுகளும் முள்ளிவாய்க்காலில் மூச்சையாகிப்போன உறவுகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை.

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கையின் இறுதிக்கட்டமாக நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் படுகொலைகள் என்றும் மறக்க முடியாத ஆழமான காயங்களை ஏற்படுத்தியுள்ளன.

அப்பாவி மக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்ட முள்ளிவாய்க்காலில் மே 18 ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வை நடத்த ஏற்பாடுகளை வடக்கு மாகாண சபை செய்துள்ளது. அதேவேளை மகிந்த ஆட்சியில் கண்ணீர் விடக்கூட மறுக்கப்பட்ட உரிமைகளை மைத்திரி ஆட்சியில் தரும் சமிக்ஞைகள் தெரிகின்றன.

மே 18 ஆம் திகதி நல்லாட்சியாளர்களின் தமிழர் நலன் சார்ந்த நடவடிக்கைகள் பட்டவர்த்தனமாகும்.

மகிந்த ஆட்சியில் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நீதி கிடைக்க மைத்திரி ஆட்சி வழி வகுக்கும் என்ற நம்பிக்கையில் தமிழர்கள் வாக்களித்தனர்.

மைத்திரிக்கு வாக்களியுங்கள் மகிந்தவை ஆட்சியை விட்டு அகற்ற வேண்டும். தமிழர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்று வாக்குக் கேட்ட தமிழ்த் தலைமைகளும் நீதியை நிலைநாட்டும் பொறிமுறைக்கு மைத்திரி ஆட்சியைக் கொண்டு செல்லாது பாதுகாக்கும் படலத்தை தொடர்கின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான மாகாணசபை தயாராகியுள்ளது.

அதேவேளை வட மாகாண சபை உறுப்பினர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை கடந்த 12 ஆம் திகதி செம்மணியில் சுடரேற்றி ஆரம்பித்துள்ளனர்.

இதில் வடக்கு மாகாண சபை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், உறுப்பினர்கள் எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக நேற்றும் நேற்று முன்தினமும் தாயகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

வல்லாதிக்க நாடுகளின் ஆயுத, படை ஒத்துழைப்புடன் இலங்கை அரசால் வெற்றிகொள்ளப்பட்ட இந்த யுத்தம் யாருக்கெதிராக மேற்கொள்ளப்பட்டது என்பதை சனல் - 4 போன்ற சர்வதேச ஊடகங்கள் நன்கு புடம்போட்டுக்காட்டின.

சனல்-4, அல்ஜெசீரா போன்ற சர்வதேச ஊடகங்கள் வெளியிட்ட காணொலிகள் உலக நாடுகளின் தலைவர்களை தலைகுனிய வைத்ததோடு கண்ணீர் சிந்தவும் வைத்தது.

மனித உரிமைகளை கொஞ்சம் கூட மதிக்காது மானிட தன்மையை இழந்தவர்கள் ஆடிய கோரத்தாண்டவம் இரத்தமும் சதையுமாய் தமிழனம் சின்னாபின்னமாகக்கிடக்க காரணமாக அமைந்தது.

கந்தகக் குண்டுகளையும் கொத்துக் குண்டுகளையும் வீசி கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களில் எஞ்சியோர் கடுங்காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட போது இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்ற உண்மையும் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அப்பாவிப் பொதுமக்களை ஈவிரக்கம் இன்றி கொன்றொழித்தவர்களுக்கு எதிராக விசாரணை நடத்த வேண்டும். மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மக்களின் நினைவு கூரலுடன் வெளிப்படுத்தி நிற்கிறது.

உலக நாடுகளின் தலைவர்களின் மனச்சாட்சியை உலுக்கிய முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் ஏழாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் 18 ஆம் திகதி தாயகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

ஏழாவது ஆண்டை அடைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது இன்னும் எழுபது ஆண்டுகளைக் கடந்தாலும் ஏன் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளைக் கடந்தாலும் நினைவு கூரப்படும்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நிராகரித்தவர்களால் கூட முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களை தமிழர்கள் நினைவு கூருவதைத் தடுக்க முடியாது.

இந்த உலகத்தின் கடைக் கோடியில் ஒரு தமிழன் வாழும் நிலை ஏற்பட்டாலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் அனுஷ்டிக்கப்படும்.

இலங்கையில் தமிழினம் எதிர்கொண்ட பேரவலத்தின் குறிகாட்டியாக என்றும் மறக்க முடியாத ரணகளத்தை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெளிப்படுத்தும்.

ஈழத்தில் தமிழினத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடும் பாவச் செயலுக்கு நீதிகேட்கும் ஆத்மாக்களின் உரிமைப் போராட்டமாக தீபங்கள் ஒளிரும்.

நீதி மறுக்கப்பட்டு மனித உரிமைகள் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு கொடுங்கோல் ஆட்சியாளர்களின் வன்ம முகம் வெளிப்பட்ட முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் எஞ்சிய தமிழினத்தவரின் மனக்காயங்களை ஆற்ற நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஐ.நா.சபை உள்ளிட்ட உயர் சபைகள் இலங்கையில் மீறப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச நீதிவிசாரணைகளை முன்னெடுத்து போர்க்குற்றவாளிகளைத் தூக்கிலிட வேண்டும்.


போர் தவிர்ப்பு வலயமாக அறிவித்து அப்பாவிப் பொது மக்களை கொத்துக்கொத்தாக கொன்றொழித்தவர்களை தண்டிக்கும் வரை முள்ளிவாய்க்காலில் ஆத்மாக்கள் அலைவதைத் தடுக்க முடியாது.

நீதியை எதிர்பார்த்து தமிழினம் போராடிக்கொண்டிருக்கும் போது நாட்டில் எவ்வளவு முன்னேற்றத்தை அரசு செய்ய முற்பட்டாலும் உய்வு கிடைக்காது.

இலங்கையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலைக்கு நீதியைக் கேட்டு நிற்கும் மக்கள் முள்ளிவாய்க்கால் நினை வேந்தல் நாளில் மண் மீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட மறத்தமிழர்களையும் மறக்காது நினைவு கூர வேண்டும்.

எஸ்.ஆர்.கரன்

# கவிதைக் கலசம்



## பாச ஏக்கம்

நற்றாய் திங்கள் பத்தாய்
பாசத்தோட்டத்தில் பக்குவமாய்
எனைப் பெற்றாய்
சொத்தாய் எனை
நினைத்தாய்- எந்தன்
சோதனையையும் சொந்தமாய்
ஏற்றாய்- உதிரத்தையும்
கொத்தாய் உணவாய்
உரு சிசுவாய் உலகிலே
எனை தரித்தாய்
அம்புலி காட்டி
அன்னம் ஊட்டி-கண்
அயரவைத்தாய்
ஆராரிரோ பாடி
உன் பாசம் சூடி
தாய்மொழி நாடி
நடைபுகட்டினாய்
நடுவிரல் நீட்டி
எனை பெற்றிட்ட
பெருங்கதிரே
உன்னன்பு சுவைக்க அன்று
கிட்டிடவில்லை
என் பருவம்
அன்று ஆராரிரோ பாடிய
நிலவழகே...
உன் மடிசாய
இன்று மண்ணுள்ளும் இல்லை
உன் உருவம் இன்று
கண்ணீரும் வெள்ளத்தில்-பல
கவலைகள் உள்ளத்தில்-உன்
நினைவுகள் எண்ணத்தில்-நீ
நீங்கவில்லையம்மா
என் இதயத்தில்
இன்றும் ஏங்குகின்றேனம்மா
என் தாய்ப் பாசத்தில்

**பீ.கிருஷிகன் பியோ**
**இளவாலை**

## காதலும் கடந்து போகும்

காலங்கள் கடக்கையில்
கண்ணிமையில் கனவான ஏதோ
ஞாபகங்கள் நெஞ்சை ரணமாக்கி
சுற்றி வருகின்றன
யாரோ வந்து சென்ற -தடயங்களை
தாங்கிய படிநெஞ்சுக் கூடு
கனமாகிக் கலங்கி நிற்கிறது
கல்வியைப் பாழாக்கி-போலியான
காதலை வாழ்வின் வேலி என்று
எண்ணி- மோசம் போய்
வேசம் கலைந்து
சிதறுண்ட வாழ்க்கையில்
விடியலின்
விநாடிகள் குறைவுதான்
அர்த்தமன வாழ்வில் ஏதோ ஓர்
மூலையில் விடியல் தோன்றிட
தடயங்களை அழித்தபடி
காதலும் கடந்து போகும்-அன்று தான்
வாழ்க்கையில் வசந்தம் வரும்

**சு.நிஷானா**
**யாழ்ப்பாணம்**

## விடிகாலை பொழுதில்

நான்
வலம்புரி எடுக்கப்போக
விடிகாலையில் கண்டேன்
உன்னை
பச்சை
பஞ்சாபி உடுத்தி
ஞாயிற்றுக்கிழமை எங்கே
போனாய் நீ
உன்னை
ஓவியமாய் வரைய
மட்டுமல்ல
சிலை வடிக்கவும்
வல்லமை உண்டு
எனக்கு
நீ
விழியில் வடிந்தோடும்
கண்ணீர் துளிகளை எடுத்து
ஆராய்ச்சி செய்துபார்
என்
கண்ணீர்த் துளிகளில்கூட
வரையப்பட்டிருக்கும்
உன் அழகு முகம்
உனக்காக நான் எழுதும்
காதல் கடிதமதை
உன் காலடியில் வைக்கின்றேன்
நீ படித்துவிட்டு
கிழித்து எறியாதே
ஏற்கனவே தாறுமாறாய்
கிழிக்கப்பட்டுக்கிடக்கிறது
என் மனம்

**உயிரோவியன்**
**புலோப்பளை**

உயிர் நீத்த உறவுகளுக்காய்
நீ ஒளி ஏற்றவேண்டிய
கட்டாயம் ஏதும் இல்லை
அவர்க்காய் ஒரு சொட்டு
கண்ணீரை அர்ச்சனை செய்
நாம் உறங்கிய போதும்
ஓடி ஆடித் திரிந்த போதும்
உயிருக்காய் மண்
அணைக்குள் கிடந்து
எமக்காய் உயிர் துறந்தவர்'
அவர்தம் நினைவை ஏந்து ஏற்று

மாவை. நா.கஜேந்திரன்

## போற்ற வேண்டிய பொக்கிஷங்கள்

கருவுற்ற நாள் முதல்
உனைச் சுமந்த
அன்னையவளை
உதாசீனம் செய்யும்
சமுதாயச் சூழலிலே
பெற்றோரைப் போற்றிடும்
கலாசாரம்
மாறிவிட்டதா?
இல்லை மறந்துவிட்டதா?
மடி கொடுத்து மழலையை
வளர்த்தெடுத்த தாயவளை
தனியே கொண்டு சென்று
அநாதையென
சேர்த்துவிட்ட சமுதாயச் சூழலிலே
அன்னையவளைப் போற்றிடும்
பிள்ளைகளும் வாழ்கின்றனரோ
இன்றைய பிள்ளைகள்
நாளைய பெற்றோர்கள்
துளிர் இலையும் உதிர்ந்திடும்
உதிர்த்திடும் இலையும் உரமாகும்.

**ரி. விஜி,மயிலிட்டி**



## விந்தை உலகிது

தாய் தந்தை உணவின்றி
தவிக்கின்றனர் அனுதினமும்
சேய்தான் மகிழ்ந்து இன்புறவே
ஓய்வின்றி உழைத்திடும்
தந்தையவன்
நாய் தனுக்கு செலவிடுகிறான்
நாளாந்தம்
என்னே உலகமிது எவர்க்குரைக்க
இன்னே இக்கொடுமைதனை

பொ.புனிதன்
வரியப்புலம்

## நேசக்கரம்

பசியோடு படுத்திருக்கும்
நாய்க்குட்டியில் இரக்கப்பட்டு
பசிபோக்க உணவளிக்கும்
பருவ மங்கையின் பாசமிது
கொடுமையிலும் கொடுமை
வயிற்றுப் பசிக் கொடுமை
அதை நீக்குவது
எமது கடமை
இதைத்தான் செய்கிறாள்
இச்சிறுமியும்
உயிர் வேறுபாடு பார்க்காது

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல்- 301

## அடைக்கலம்

இரும்பு மனம் படைத்த
இன்றைய உலகிலே
இரக்கமுள்ள ஒரு சிலர்
இன்னமும் இருப்பதால்தான்
அநாதரவான ஜீவன்களுக்கு
அன்னந்தண்ணியுடன் கூடவே
அடைக்கலமும் கிடைக்கிறது

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## கற்றுக்கொள்

நன்றியுள்ள ஜீவனுக்கு
நாம் உணவளித்தால்
நாட்கள் பல கடந்தாலும்
நம்மைப் பார்த்தவுடன்
வாலாட்டும்
நன்றி என்னவென்று
கற்றுக்கொள்
நாலுகால் ஜீவனிடத்தில்
நாளை நீயும் நன்றியுள்ள
ஜீவனாய் வாழ்வதற்கு

இளவரசு
ஒட்டுசுட்டான்

## வரம்

பெண்ணே! வறண்டு கிடந்த
என் இதயத் தேசத்தில்
மழையென்ற வரமாய்
நீ வந்தாய்- என் வாழ்வே
இன்று சொர்க்கமானது

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பரிவும் பரிசும்

இந்தப் பரிவும் புரிந்துணர்வும்
தேவையறிந்து செய்யும் சேவையும்
சிறிதளவாயினும்
இனங்களுக்கிடையில்
இருந்திருந்தால்
இலங்கைத் தீவானது
நெறிப்படுத்தலிலும்
தொழில் வளத்திலும்
மனிதவுரிமைகளுக்கு
மதிப்புக் கொடுத்தலிலும்
சிறந்த நாடுகளுக்கான
மதிப்பீட்டுப் பட்டியலில்
நோர்வே சிங்கப்பூரையும்
தோற்கடித்திருக்கும்

க.நாகராசா,நுணாவில்

## இலாபம் தேடும் உலகம்

ஆன்மீகத்திற்கு
அடிநாதமாக
அடுத்தனுக்கு உதவும் பண்பில்
தேறிய இலாபம் தேடும்
இன்றைய வாழ்க்கைச் சாலையில்
தேடியே தெருப்பிராணிக்கு
வெண்டக்கா விரல்கள்
செய்யும் உதவியால்
உயரும் மனிதநேயம்

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## அன்னமிட்ட வீட்டில் கன்னமிடும்

அன்னமிட்ட வீட்டில்
கன்னமிடும்...
நன்றிகெட்ட இளம்
சமுதாயமொன்று
மெள்ள மெள்ள வேகமாக
வேர்பாய்ச்சுவது கண்டுதானோ...!
நன்றியுள்ள ஜீவனுக்கு
உணவூட்டுவது
காலமெல்லாம் தனக்கு
பாதுகாப்பென்று நினைத்தாளோ!
இந்தப் பூங்கொடியாள்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

# மௌனத்தின் தேடல் -302



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 18.05.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# நீடித்த ஆயுள்தரும் உணவுகள்



உடல்நலத்திற்குத்தேவையான உணவுகளைத்தேர்வு செய்து தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நீண்ட நாட்கள் நலமுடனேயே வாழலாம். நீங்கள் அடிக்கடி சாப்பிடும் உணவுகளாக கீழ்க்கண்ட உணவுகள் இருக்க வேண்டும். இதனால் உறுதியான உடற்கட்டும்அழகும்தொடரும்.

இயற்கையிலேயே ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவையான சத்துணவுகள் வெவ்வேறாக மாறுபடுகின்றன. பெண்களுக்குப் பெரும்பாலும் இரும்புச் சத்தும் கல்சியமும் தாராளமாக உள்ள உணவுகளே தேவை. குறிப்பாக கர்ப்பகாலத்தின்போது மார்பகப் புற்றுநோய் வராமல் இந்த இரு உயிர்ச்சத்துக்களும் உள்ள உணவுகளே அதிகம் உதவுகின்றன.

ஆண்களைப் பொறுத்தவரை தசையின் அமைப்பைப் பாதுகாப்பதுடன் புரோஸ்டேட்சுரப்பிப் புற்றுநோயையும தவிர்ப்பதே முக்கிய மான தேவை. அடுத்து இரத்தக் கொதிப்பு, இதயநோய், நீரிழிவு முதலியவற்றை தவிர்க்கத் தினமும் உடற்பயிற்சி, சரி யான உணவுத் திட்டம் எனத தொடரவேண்டும். இதனால பெரியளவில் மனிதர் களைக் கொல்லும் நோய்களிலிருந்து ஆண்கள் தப்பிக்கலாம்.

புரோஸ்டேட் சுரப்பி புற்றுநோயைத் தவிர்க்கவும் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கவும் ஈரிதழ் சிப்பி சாப்பிட்டு வருவது நல்லது. நான் சைவ உணவுப் பழக்கம் உடையவன் என்பவர்கள்இரண்டுவேளை பாசிப்பருப்பு கூட்டு அல்லது பச்சைப்பயறு சுண்டல் சாப்பிட்டு வந்தால் போதும். சிப்பியிலும் பாசிப்பருப்பிலும் உள்ள துத்தநாகம் உப்பு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். ஆண்மைக் குறைவும்பெண்மைக்குறைவும் ஏற்படாமல் தடுக்கும்.

குடற்பகுதி நன்கு செயற்படவும் இரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரோல், பெருங்குடல், புரோஸ்டேட் சுரப்பி கோளாறுகளைத் தடுக்கவும் முழு தானிய உணவுகள் தேவை. கைக்குத்தல் அரிசி, சம்பா, ரவை மூலம் தினமும் பி குரூப் விற்றமின்கள் தாராளமாக நமக்குக் கிடைக்கும். பாசிப்பருப்புக் கூட்டுத் திசுக்களை ஆரோக்கியமாகப் பராமரித்து வரும்போது பி குரூப் விற்றமின்கள் உடலில தாராளமாக உறிஞ்சப்படும்.

பச்சை நிற கோலிபிளவரான பிராக்கோலி இதய நோய்களையும் சிறுநீரகப் பைகளில் தொற்றும் புற்றுநோய்க் கட்டிகளையும் கட்டுப்படுத்தும். எனவே வாரம் 5 வேளை பிராக்கோலி நமது உணவில் தேவை.

மூட்டு வலியையும்இதய நோயையும் மீனில் உள்ள ஒமேகா-3 என்ற கொழுப்பு அமிலம் தடுப்பதால் 3 நாட்களுக்கு ஒருமுறை மீன சாப்பிடலாம். வால்நெட், சோயா மொச்சை, முட்டைக்கோஸ் போன்ற உணவுகளிலும் ஒமேகா-3 தாராளமாக உள்ளது.

தினமும் இரண்டு வாழைப்பழங்கள் சாப்பிட்டால் பக்கவாதம் தடுக்கப்படும். இதன்மூலம் உடனடி சக்தி கிடைத்து இதயம் சீராக இயங்கும். மேலும் வாழைப்பழத்தில் தாராளமாக உள்ள விற்றமின் பி6 நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் அதிகரிக்கிறது. சிவப்பு இரத்த அணுக்களையும் உருவாக்குகிறது. நரம்பு மண்டலத்தையும் ஆரோக்கியமாகப் பராமரிக்கிறது. தினமும் தக் காளி அல்லது பிராக் கோலி இருபாலார்களின் உணவில் இடம்பிடித்தால் புற்றுநோயைத் தவிர்க்க முடியும்.

சிறுநீர்ப் பாதையில் தொற்று ஏற்படாமல் இருக்க குறிப்பாக கர்ப்பகாலத்தில் ஆப்ரிகாட், உலர் திராட்சை, செர்ரி, கிரான்பெர்ரி போன்றவற்றையும் உணவில் சேர்க்கவேண்டும்.

மாதவிலக்குக் கோளாறுகளைத் தவிர்க்கவும், எலும்பு மெலிவு நோயான ஒஸ்ரியோ புரோசிஸ் பிரச்சினையைத் தவிர்க்கவும் பாதாம் பருப்பும் கேழ்வரகும் உணவில் தினமும் இடம் பெறுமாறு பார்த்துக்கொள்ளவும். ஆண்களின் இதயப் பாதுகாப்புக்கும் இந்த இரு உணவுகளும் தவிர்க்க முடியாத அளவில் தினமும் தேவை.

கர்ப்ப காலத்தின்போது ஏற்படும் மலச்சிக்கலைத் தவிர்க்கவும், இரத்தத்தில் ஈமோகுளோபின் போதிய அளவில் உற்பத்தியாவதற்கும் தினமும் ஏதாவது ஒரு கீரையை அளவுடன் சாப்பிட்டு வந்தால் போதும்.

எல்லா வயது ஆண்களும் பெண்களும் கொழுப்பு நீக்கிய பாலோ அல்லது தயிரோ குறைந்தது இரண்டு வேளை சேர்த்துக் கொள்ளவும். இதனால் மூட்டுவலி தவிர்க்கப்படும். இதயமும் தசைப் பகுதியும் சிறப்பாக இயங்க பாலும் தயிரும் மாயமந்திரம் போல உதவி குணப்படுத்துகிறது.

மேற்கண்ட உணவுகளைக் குறைந்த அளவில் தினமும் சேர்த்து வந்தால் ஆரோக்கியமாகவே வாழ்நாள் நீடிக்கும்.

# பந்திக்கு முந்து படைக்குப் பிந்து

**இதன் அர்த்தம் தெரியுமா?**

கல்யாண வீடுகளில் அன்னதான வைபவங்களில் நண்பர்களிடையே இரகசியமாகப் பரிமாறப்படும் பொன்மொழி பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்பதுதான்.

நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக அடுத்த பந்திக்கு அதிக நேரம் எடுக்கலாம். உணவின் தரம் குறையலாம். சாம்பார், பாயாசம் போன்றவை வெந்நீராற் பெருக்கப்படலாம், சாப்பாடு கிடைக்காமலும் போய்விட லாம். இவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரேவழி பந்திக்கு முந்துவதே.

மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் போது நடைமுறைக்குப் பொருத்தமான அன்றாட வாழ்க்கைக்கு இயைந்த உண்மையொன்றையே இப்பழமொழி உள்ளடக்கியிருப்பதாகத் தோன்றும். ஆனால் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் தமிழ்ப் பண்பாட்டின் அடித்தளத்தையே இது ஆட்டங்காணச் செய்வது புலனாகும்.

"சோறு கண்ட இடம் சொர்க்கம்" என்பதுதான் தமிழனின் குறிக்கோளா? நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் படையெடுத்து வரும் எதிரியை எதிர்த்துப் போரிட்டு விரட்டி ஓட்டாமல்முதலில்வயிறாரச் சாப்பிடவேண்டும் என்பதுதான் தமிழ னின் இலட்சியமா? இல்லை என்றால் இப்பழமொழிக்கு வேறு ஏதாவது கருத்து இருக்கிறதா? ஆம் இது ஒரு பழமொழியன்று என்பதை முதலிலே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு விடுகதை. ஒரு நொடி. பந்திக்கு முந்தும் படைக்குப் பிந்தும் அது எது? என்பதுதான். இந்த விடுகதையின்சரியான உருவம் "வலக்கை" என்பது இவ் விடுகதையின் பதில்.

உணவு உண்பதற்காகப் பந்தியில் உட்காருகின்றோம். எமது வலது கை- முன்னோக்கிச் சென்று உணவைப் பிசைந்து வாய்க்குட்போடுகிறனது. அதாவது எமது வலதுகை பந்திக்கு முந்துகின்றது.


பழைய காலத்தில் நம் முன்னோர் அம்பும் வில்லும் கொண்டே போரிட்டனர். வில்லை வளைத்து அம்பை நாணிற பொருத்திப் பின்னோக்கி இழுத்து அம்பை எய்தனர்.

நாண் இழுக்கப்படும் அளவைப் பொறுத்து அமபு வேகத்துடனும் வலிமையுடனும் முன்னே சென்று தன் இலக்கைத தாக்கும். நாணை இழுப்பது வலக்கையின் வேலை.

படைக்குப் பிந்துவது என்பது இப்படிப் பின்னால் இழுப்பதையே குறிக்கும். பந்திக்கு முந்துவதும் படைக்குப் பிந்துவதும் வலதுகைதானே!

விடுகதைகள் மக்கள் மத்தியில் வாய் மொழியாக வழங்கி வருபவை. காலப்போக்கில் சொற்களிலும் அமைப்பிலும் மாறுதல் ஏற்படுவது இயற்கை. இந்த விடுகதைக்கும் இதே கதிதான் நேர்ந்தது என்று கூறி "சாப்பாட்டு ராமர்கள்" என்ற இழி நிலையிலிருந்து தமிழர்களை மீட்டெடுக்கவும் உதவுகின்றதல்லவா?

# மாம்பழமோ மாம்பழம்



இப்போது மாம்பழக் காலம் தொடங்கிவிட்டது. மாம்பழம் என்றாலே யாவர்க்கும் பிடித்தபழம். இந்த மாம்பழத்தில் கறுத்தக் கொழும்பான், அம்ப லவி, விலாட், பாண்டி விலாட், சேலம், செம்பட்டான், பச்சைதின்னி என ஏகப்பட்ட இன மாம்பழங்கள் உண்டு. ஆனால் எங்கள் யாழ்ப்பாணத்துக் கறுத்தக்கொழும்பான் மாம்பழத்திற்கு நிகர் யாழ். கறுத்தக் கொழும்பான் மாம்பழம் தான். வெளிநாடுகளில் பல இடங்களில் இருந்தும் மாம்பழங்கள் வருகின்றன. மிக அழகானது. ஆனால் எமது மாம்பழத்திற்கு நிகர் இல்லை. ஆனால் ருசி குறைவு என்று சொல்வதற்கும் இல்லை. மாம்பழம் என்றால் அடிபட்டு வாங்குவார்கள். அவ்வளவு மாம்பழத்தில் பிரியம் அதிகம். இப்போது வேறு பகுதியில் இருந்து மாம்பழங்கள் வரத் தொடங்கிவிட்டன. ஆனால எமது பழத்தின் சுவையில்லை. இதனால் யாழ்ப்பாணத்திற்கே ஒரு தனிப் பெருமை இந்தக் கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தால்தான் என்றால் மிகையாகாது.

மாம்பழம் முக்கனிகளில் ஒன்று. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் இங்கும் மாம்பழம் முதலிடம் வகிக்கிறது. எங்கு தேடித் திரிந்தும் பஞ்சாமிர்தம் சேர்க்க வாங்கி விடுவார்கள். அப்படிப்பட்ட மாம்பழத்திற்கு ஒரு கதை உண்டு.


ஒருநாள் நாரத மகா முனிவருக்கு ஒரு பழம் கிடைத்தது. அட இந்த மாம்பழத்தை நான் உண்பதைவிட பரமேஸ்வரனுக்கே கொடுத்து விடுவோம் என்று தன் சகாக்களுடன்ஆடிப்பாடி கைலாய மலைக்குச் சென்றார். அங்கே பார்வதி பரமேஸ்வரர் குடும்ப சமேதராக இருக்க பணிந்து வணங்கினார். பின் இந்தப் பழத்தைப் பற்றி சொல்லி இதை தாங்களே உண்ணவேண்டும், பகிரக் கூடாதுஎன்றுஉண்மையைக கூறிக் கொடுக்க, பரமேஸ்வரன் அம்மையிடம் கொடுக்க, பிள்ளைகள் இருக்க எமக்கு எதற்கு என்று கேட்க, எந்தப்பிள்ளைக்கு கொடுப்பது என்ற கேள்வி எழ, யார் முதலில் உலகைச் சுற்றி வருகிறார்களோ அவருக்கே பழம் என்றாகிவிட, முருகன் மயில்மீதேறி பறந்துவர, பிள்ளையார்தாய்தந்தையே உலகம் என்று அவர்களை வணங்கி பழத்தைப் பெற்று விட்டார்.

உலகைச் சுற்றி வந்த முருகன் உடை, ஆபரணம் யாவையும்களைந்து ஆண்டியாக அமர்கிறார். இது ஒரு மாம்பழத்தால் வந்த திருவிளையாடல். இந்தத் திருவிளையாடல் பல கோவில்களில் மாம்பழத் திருவிழாவாக விசேடமாக நடைபெறுகிறது. இது ஒரு சான்று. இந்த மாமபழத்தால்தான்முருகனை ஞானக்கனி, ஞானமுருகன் என்றுகூறுவர். மாம்பழத்தில் விசேட மருத்துவக் குணங்கள் உண்டு. அன்று மெய்ஞ்ஞானிகள் அறிந்தததை இன்று விஞ்ஞானிகள் ஆதாரமாக, மிக விளக்கமாக அறியத் தருகிறார்கள. மாம்பழம் எல்லாக் காலங்களிலும் நிறையக் கிடைப்பது கஷ்டம். ஆனால் சேமிப்பு முறை வந்த ஜாம் கோடியல், ஊறுகாய் வற்றல் எனப் பலபல வந்து கொண்டிருக்கிறது. மாம்பழமே உலகம் என்றாகி விட்டது. விஞ்ஞானிகள், மருத்துவர்கள்கூட மாம்பழத்தின்குணாதிசயங்களை எடுத்து அடிக்கடி கூறுகிறார்கள். ஆகவே நாம் யாவரும் மாம்பழத்தை அதன் தன்மையை அறிந்து தெரிந்து உண்டு மகிழ்ந்து வாழ்வோம்.

**ந.சிவசுப்பிரமணியம், நீர்வேலி**

# உயிரினிடுலே கலந்தவள்

## சிறுகதை



"பிரியா எழும்புங்க இதில கோப்பி வைச்சிருக்கு குடிங்க இண்டைக்கு மோர்னிங் கொஸ்பிட்டல் போகணும் மறந்திட்டீங்களா...? என மனைவியின் நெற்றியிலே முத்தமிட்ட ஆனந்த் கோப்பியை மேசை மீது வைத்தான். மெல்ல கண்களை கசக்கி சிறுகுழந்தை போல "ஏனுங்க எனக்காக நீங்க உங்கட முடிவை மாத்திக்கணும்...! ஏன் உங்க அம்மா ,அப்பா சொன்னது போல ஒரு மறுமணம்செய்து கொள்ளக்கூடாது" என ஆனந்தின் கையைப் பற்றியவளாய் ஏக்கத்துடன் ஆனந்தைப் பார்த்தாள்.

"என்ன வார்த்தை சொன்னீங்க பிரியா எங்க அம்மா,அப்பா போல நீங்களும் என் மனசை புரிஞ்சு கொள்ளவில்லையா? உங்களுக்கு கான்சர் வந்ததால நான் உங்க மேல வைச்ச காதல கொஞ்சமும் குறையாது. அன்று எனக்காக உங்க அம்மா, அப்பா, பணம், பங்களா என உதறி என்னை நம்பி வந்தீங்க. அன்று முதல் சந்தோசமாய் வாழுறம்தானே பிளீஸ் இனி இப்படி எல்லாம் கதைச்சு என் மனசக் கஷ்ரப்படுத்த வேண்டாம்.நான் உங்க ட்ரெஸ் எல்லாம் வோஸ் பண்ணறன்.பாத்ரும்ல வெந்நீர் இருக்கு குளிச்சிடுங்க. கிளினிக் போகணும் ரைம் வேஸ்ட் பண்ண வேண்டாம். எனப் பிரியாவின் கைகளை விலக்கி நெற்றியில் முத்தமிட்டு குளியலறைப்பக்கம் சென்றான்.

இவ்வளவு நல்ல மனசு கொண்ட கணவனை அடைய எவ்வளவு புண்ணியம் செய்திருக்கணும்.ஆனால் யுனிவர்சிட்டியில் காதலைச் சொல்ல வந்த ஆனந்தை என் பணக்காரப் புத்தியினால் எவ்வளவு அவமானப்படுத்தினேன்.இப்ப நினைச்சால் என் கண்களே கலங்குது. என மனதிற்குள் நினைத்தவளின் முகத்தை தென்றல் தழுவ ஜன்னல் ஓரம் அமைந்த வேப்பமரக் கிளையில் காதல் செய்யும் இரு கிளிகளின் சத்தங்களுடன் காதல் நினைவில் புற்றுநோயின் வலியை மறந்தாள்.

பல்கலைக்கழக வளாகத்தினுள் பிரியா முதல் தடவையாக உள்ளே நுழைந்தாள்.பிறக்கும் போதே பேர் சொல்லும் பணக்காரர் ஜேசுதாஸின் மகளாகப் பிறந்தவளுக்கு கஷ்டங்கள் பற்றி ஒண்ணுமே தெரியாது. தந்தையுடன் நகரின் மத்தியில் காரில் இறங்கியவர்கள் முதல் தடவையாக தோழிகளுடன் சாதாரண சுடிதார் அணிந்து தலையில் ரோஜாப்பூவைச் சூடி பைங்கிளி போல தந்தையிடம் விடை பெற்று பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தாள்.

பிரியாவின் அழகும் அவளது நடையும் பார்ப்போரைத் தன் பால் ஈர்க்கும் அழகின் இரகசியத்தை பிரம்மன் பிரியாவில் படைத்திருப்பானோ என சந்தேகிக்கும் அளவில் அனைவரின் பார்வையும் பிரியா மீதுபட பிரதான மண்டபத்தை அடைந்தாள்.வாலிபர்கள் கண்ணால் காதல் வலை விரித்தாலும் அதில் அகப்படாத கன்னிமானாய் பிரியா அமைதியாய் கல்வியில் தனது அக்கறையைச் செலுத்தினாள்.

அன்று முதல் பிரியாவின் காண்ட் பாக்கில் காதல் கடிதங்கள் நிறைந்தது. இறுதியில் பெயர் குறிப்பிடாது இருந்தமையால் அவளுக்கு ஏமாற்றமே மிகுந்தது.காரணம் பிரியா மீது காதல்கொண்ட ஆனந்த் அதனை வெளிப்படுத்த தக்க சமயத்தை பல மாதங்களாய் காதல் நினைவுடனே காத்திருந்தான்.ஓர்நாள் அவனின் காத்திருப்பும் கனிந்தது பல்கலைக்கழக கலை நிகழ்விற்காய் பல்கலைக்கழக வளாகமே புது ஆடையில் மின்னிடும் மாணவர்களாய் களை கட்டியது.

அப்பொழுது பல்கலைக்கழக பூந்தோட்டத்தில் சுடிதார் அணிந்த தேவதை போல தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்த பிரியாவை மெல்ல நெருங்கி "பிரியா ஓர் நிமிசம் உங்கக்கிட்ட ஓர் விஷயம் கதைக்கணும்.... என தழதழத்த குரலில் தயங்கியவனின் குரலைக்கேட்டு தலையில் சூடிய ரோஜா அசைய மெல்லக்கோபம் முகத்தில் படர" என்ன பேசணும் சொல்லுங்க புறோகிறாம் ஸ்ராார்ட் பண்ணப்போகுது...! எனத் தொலைபேசியை தன் பூவிரலால் வருடிய வண்ணம் கூறினாள்.

"அது... பிரியா நீங்க பெஸ்ட் ரைம் இந்த யுனிவர்சிட்டி வரும் முன்னாடியே உங்கள எனக்குத் தெரியும்.ஏலெவல் படிக்கும்போது உங்கள் பெஸ்ட் ரைம் லஞ்சில பார்த்தேன்.அப்பகூட நீங்க என்னோட பேசினீங்க இதோ! நீங்க எனக்கு லஞ்சில தந்த பச்" என தனது உயர்தரத்தில் பிரியா கொடுத்த சின்னத்தை ஆதாரமாய் ஆனந்த் காட்டினான்.

பிரியா முகத்தில் வியப்பு படர்வதைக் கண்டு " அதோட நாம எல்லோரும்பாண்ஸ்பண்ணினோம். அப்போ இந்த இறப்பர் ரோஜா உங்க கூந்தலிலிருந்து நழுவிட்டு அத பத்திரமாய் கொடுத்து என் காதல உங்களுக்கு சொல்ல நினைச்சேன் அதுக்கு அப்புறம் உங்கள நான் மீட் பண்ணல. நான் உங்கள தேடி அலைஞ்சன். அதுக்கு அப்புறம் நீங்க கொழும்பிற்கு போயிட்டீங்க" என உங்கஃபிரண்ட்ஸ் சொன்னாங்க. நிச்சயம் நீங்க யுனிவர்சிட்டி வருவீங்க என எனக்குத் தெரியும் அதால ஏலெவல் நல்லா படிச்சு உங்களிடம் காதலை சொல்ல யுனிவர்சிட்டி வந்தன்.ஆனா நீங்க என்ன மறந்தீட்டீங்க அதால என்னை ஞாபகப்படுத்த நாம் சந்தித்த கணங்களை கடிதமாய் எழுதி காண்ட்பாக்ல நான் தான் போட்டேன்...! பிளீஸ் என் காதலை ஏற்றுக் கொள்ளுங்க எனத்தன் காதல் அடையாளங்களை கையில் வரம் கேட்கும் பக்தனைப் போல ஆனந்த் பிரியாவின் முன் அப்பாவியாய் நின்றான்.பிரியா சற்று நிமிர்ந்து ஆனந்திடம் கோபமாக "ஓகோ...! நீதானா அந்த ராஸ்கல் என் காண்ட்பாக்ல லவ் லெட்டர்ஸ் வைச்சது" என கன்னத்தில் அறைஞ்சு கோபத்துடன் காதல் சின்னங்களைக் கையால் தட்டிவிட்டாள்.ஆனந்தைச் சுற்றிய மாணவர் கள் ஏக்கத்துடன் திகைத்துப் பார்த்தனர்.அமைதியாய் இருந்த பல்கலைக்கழகத்தில் பிரியாவின் கோபத்தொனி மட்டும் எதிரொலித்தது ."எங்க வசதி உனக்குத் தெரியுமா எங்க அப்பா யார் தெரியுமா? உனக்கு எங்க தெரியப்போகுது பிச்சைக்காரன் போல வாழுற உனக்கு எல்லாம் என்னைப்போல பணக்காரப் பொண்ணு தேவைப்படுகிறதோ...! ஏதோ ஏலெவல் லஞ்சில என்னைப் பார்த்தேன் என பஞ்ச் டயலொக் பேசிறாய் மிஸ்டர் நான் நினைச்ச உன்ன இப்பவே டிஸ்மிஸ் பண்ணுவேன் ஏதோ பிளைச்சுப் போகட்டும் என விடுகிறேன்.....!" எனத் தன் கோபத்தை வெளிக்காட்டி காரில் தோழிகளுடன் செல்வதற்கு ஆயத்தமானான்.

நண்பர்கள் கூட்டம் மெல்ல விலகத் தொடங்கினர். ஆனந்த் அவமானத்தின் மிகுதியில் தனித்து விடப்பட்டிருந்தான்.

"பிரியா நீ பேசினது தப்பு ஆனந்த் உன்ன பலவருஷம் காத்திருந்து காதலைச் சொல்ல நீயோ உன் பணக்கார புத்தியைக் காட்டி அவன்ர உண்மைக் காதலை அவமானப்படுத்திவிட்டாய்...இன்று ஆனந்த்.நாளை எனக்கும் இந்த நிலை கட்டாயம் ஏற்படாது என்று எப்படி நம்பிறது நாங்க ஏழை தாம்மா ஆனால்தன்மானம் இருக்கு "எனக் கோபமாய் உயிர்த்தோழி நிலா காரிலிருந்து இறங்கி பேருந்து நிலையம் நோக்கி வேகமாய் நடந்தான். கோபத்துடனேயே ஏதும் பேசாது பிரியா கோபத்துடன் காரைத்தனது பங்களாவிற்கு திருப்பினான். பங்களாவிற்கு வந்த பிரியா தாய்,தந்தையிடம் மம்மி எனக்கு பசிக்கல என்னை டிஸ்ரப் பண்ண வேண்டாம் எனக்கு மூட் சரியில்ல நான் படுக்கணும்" என பெட்ரூம் கதவினை சத்தமாய் சாத்தி மூடினாள்.

தன்மகளின் விநோத செயலைப் பார்த்த பெற்றோர் ஏதும் புரியாது ஆச்சரியத்துடன் இருந்தார்கள்.

ஆனந்தின் செயல் கணம் தோறும் தோன்றி கோபமூட்ட தூக்கம் வராமையினால் தன் மனம் கலங்கும் வேளையில் விரும்பிப் படிக்கும் பகவத்கீதையை எடுத்துப் பார்க்க அலுமாரியைத் திறந்தாள்.

பல வருடங்களாக பிரியாவின் கண்களில் அகப்படாத பொதி ஒன்று தென்பட பலவருடங்களுக்கு முன்பு அன்னை கூறிய வார்த்தை எதிரொலித்தது."பிரியா உனக்கு ஒரு பொதி வந்திருக்கு பிள்ள அதை அலுமாரியிலே வைக்கிறன் பாரம்மா" எனக் கூறக்கேட்டும் ஏலெவல் பரீட்சைக்கு படிக்கும் ஆவலில் அன்னை கூறிய சொற்கள் மறக்க இன்று பிரியாவின் சிந்தனையில் ஆவலைத்தூண்ட பொதியைத் திறந்தாள்.தூசி படிந்ததால் பெயர் விலாசம் அழிந்துபோய் இருந்தது.ஆனால் எங்கோ படித்த கவிதை பொதியில் ரோஜா மலருடன் வதங்கிப் போய் பிரியாவின் இதயத்தை இரணமாய்த்துடிக்க வைத்தது."காதலியின் இதயத்தில்–காதல் நான் குடியேற இதயத்தில் மை எடுத்து –என் இதய வலியை இன்பமாக்க –காதலியே உன் இமைகள் திறந்து படித்திடு– எனக்கு உன் மனதில் இடம் கொடுப்பாயா பதில் கொடுத்திடு தன் இளமைக்காலநினைவுகளை உடன் இருந்து எழுதியது போல் இந்த கவிதை வரிகளுக்கு சொந்தக்காரன் யாராக இருக்கும் என கலங்கிய விழிகளில் ஆனந்த முகமும் காதலியின் சின்னங்களும் இதயத்தில் காதல் சாம்ராஜ்ஜியமாய் தோன்றிட துடிதுடித்து பதற்றமாய் "பாடி நான் நிலா வீட்ட அவசரமாய் போகணும் நான் வரலேட்டாகும் எனக்கூறியவள் காலை நிலா வீட்டிற்கு திருப்பினாள்.அங்கு நிலாவிடம் ஆனந்தை தான் காதலிப்பதாகச் சொல்லி ஆனந்தைச் சந்தித்த பூந்தோட்டத்திற்கு இருவரும் ஆனந்தை தேடினார்கள் பலனேதுமில்லை. இறுதியில் தரையில் சிதறிய காதலின் சின்னங்கள் மனதை கலவரமூட்ட தனது பூவிரலால் எடுத்து ஆனந்தின் ஆழமான காதலை எண்ணி அணைத்து கதறி அழுது பார்த்த நண்பர்களின் விழிகளில் கண்ணீர் கலங்க வைத்தாள்.

பிரியாவின் கண்ணீர்த்துளிகள் காதல் சின்னங்களில் மறையும் முன்பு ஆனந்த் புன்னகையுடன் பிரியா முன் நின்றான். ஓடிச்சென்று ஆனந்தைக் கட்டித்தழுவி பல தடவை மன்னித்துக் கேட்டு அழுதாள்.பிரியாவின் கண்ணீரைத் துடைத்த ஆனந்த் தன் காதலை உண்மையாக்க பிரியாவின் சம்மதத்துடன் பல்கலைக்கழக நண்பர்கள் உதவியுடன் மாங்கல்யத்தை கட்டி பிரியாவின் தாய்,தந்தை முன்பு ஆசீர்வாதத்திற்காய் நின்றான்.நண்பி வீட்டிற்கு சென்ற மகள் புதுமணத்தம்பதிகளாய் நிற்பதைக்கண்டு அதிர்ந்த பெற்றோர்கள் பிரியாவையும் ஆனந்தையும் தம் வார்த்தைகளால் சீண்டி" இனி இந்த பக்கம் வரக்கூடாது என அனுப்பி விட்டனர்.

வாழ்வில் இன்பம், துன்பம் இரண்டிலும் இரண்டறக் கலந்த அந்த காதல் ஜோடிகள் வாழ்ந்து வெற்றிகண்டு இருவரும் வேலைபார்த்து சமூகத்தில் வசதியுடனும் அந்தஸ்துடனும் வாழ வழி செய்தான் இறைவன்.

அன்புள்ளம் நிறைந்த வாழ்வில் எப்படி இடி தர இறைவன் நினைத்தான் பிரியாவிற்கு பிளட்கான்சர் இருப்பது தெரிய வந்தது. அழகிய அந்த குருவிக்கூடு கலைந்து விட இடிந்து போனான் ஆனந்த்.

உள்ளேயே உயிர் கொல்லும் கொடிய நோயுடன் போராடி வாழ்வின் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள் பிரியா...

காதல் கிளிகளின் கீச்சிடலில் திகைத்தாள் பிரியா. அவள் கண்களில் கண்ணீர் பெருகியது. அப்போது அந்தக் கண்ணீரை ஆனந்தின் விரல்கள் துடைத்தன.பிரியா ஆனந்தை கட்டித் தழுவினாள்.

"சிரிக்கிறபோது சிரிப்பது தானா காதல் அழுகிறபோது ஆறுதல் தானே காதல்."

வன்னியூர்
எஸ்.ஆர்.ராம்கி
(கிளிநொச்சி)

அன்பு வாசகர்களே
நீங்களும் சிறுகதைகளை
சங்குநாதம் பகுதிக்கு
அனுப்பி வையுங்கள்
தரம் கண்டு
பிரசுரிக்கப்படும்.

"ஆசிரியர்"
சங்குநாதம்
சிறுகதைப்பகுதி
இல.03, 02ஆம் ஒழுங்கை
பிறவுண் றோட ,யாழ்ப்பாணம்.

# வீடு வீடாகவா இருக்கு?



வீட்டை சுத்தப்படுத்துவது ஒரு கலை. அந்த விடயத்தில் பெரிய நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் எப்பேற்பட்ட குப்பையான வீட்டைக் கொடுத்தாலும் சரி பரபரவென்று தேவையற்றவற்றை வெளியேற்றி மீத மிருப்பவற்றை ஒழுங்குபடுத்தி வைத்துவிடுவார்கள். இந்த வீட்டில் இவ்வளவு இடம் இதற்கு முன்னால் இருந்ததா! என்கிற ஆச்சரியமே ஏற்படும்.

இதற்கு நேரெதிராக எனக்குக் கலைக்கத்தான் தெரியும் என்கிறவர்களும் உண்டு.

இவர்களிடம் எத்துணை ஒழுங்கான வீட்டைக் கொடுத்தாலும் சரி அரை மணி நேர்த்தில் அதை மகாமோசமாக மாற்றிவிடுவார்கள். இவர்கள் என்னதான் பெரிய வீட்டில் வசித்தாலும் இடமே போதலை என்பார்கள்.

நம் உலகில் முதல் வகை நிபுணர்கள் குறைவு. இரண்டாம் வகை நிபுணர்கள் தான் அதிகம். ஆகவே வீடுகள், அலுவலங்கள், பயணப் பெட்டிகள், மேசைகள், நூலகங்கள் எங்கே பார்த்தாலும் ஒழுங்கற்ற தன்மை.

இது மாதிரி ஆட்களுக்கென்றே விசேட வகுப்புக்களை நடத்துகிறார்.மேரி கொண்டோ என்ற ஜப்பானிய நிபுணர் Decluttering Expert என்று அழைக்கப்படும்.

இவரிடம் உலகெங்கிலுமிருந்து ஆயிரக்கணக்கானோர் வந்து பயிற்சி பெறுகிறார்கள். எதையும் கச்சிதமாக வைத்திருப்பது, அந்த ஒழுங்கைப் பாதுகாப்பது, அதன் மூலம் தங்களுடைய ஆளுமையை மேம்படுத்திக் கொள்வது போன்றவற்றை தெரிந்து கொள்கிறார்கள்.

இவருடைய ஒழுங்கமைப்புமுறை Konmari Metho எனப்படுகிறது.

தன்னுடைய தனித்துவமான ஒழுங்கமைப்பு நுட்பங்களை மேரி கொண்டே பல புத்தங்களாக எழுதியிருக்கிறார். இப்போது அவை ஆங்கிலத்திலும் வெளியாகத் தொடங்கியிருக்கின்றன. அந்த வகையில் அவரது அட்டகாசமான லெட்டஸ்ட் வெளியீடு Spark Joy.

இந்தப் புத்தகத்தில் வீட்டை ஒழுங்குபடுத்துவதற்காக மேரி கொண்டோ விபரித்திருக்கும் ஆறு கட்டளைகளை ஆண்கள், பெண்கள் எல்லோரும் பின்பற்றலாம். பிறர் மத்தியில் மரியாதையைப் பெருக்கிக் கொள்ளலாம். அவை.

1.ஒழுங்குபடுத்துதல் என்பது தனியே நேரமொதுக்கிச் செய்ய வேண்டிய வேலை அல்ல. அதற்கு உங்கள் மனம் உடன்பட வேண்டும். அதன் பிறகு தினசரி நீங்கள் செய்கிற வேலைகளிலேயே அது கலந்துவிடும்.

அதாவது பொருட்களைக் கண்டபடி போடாமல் வைக்கும் போதே ஒரு பொருளை ஒழுங்காக வைக்க வேண்டும். இதற்கு மனத்தைத் தயார்படுத்த வேண்டும்.

2.எல்லாவற்றையும் ஒழுங்காக அமைத்த பிறகு உங்கள் வீடு அல்லது மேசை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அந்த அழகிய வீட்டை நோக்கித்தான் உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் இருக்க வேண்டும்.

3.தேவையில்லாதவற்றைத் தூக்கி எறியுங்கள். அதைச் செய்யாதவரை உங்கள் வீடு ஒழுங்காகாது.

வீட்டை ஒழுங்காக வைத்துக் கொள்ள நினைக்கின்றவரின் முதல் எதிரி எப்போதாவது பயன்படும் என்கிற நினைப்புத்தான். இதனால் காரணமே இல்லாமல் பல விடயங்களைச் சேமித்து வைத்திருப்பார்கள் இவை வீட்டின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டால் மீதமிருக்கிற இடத்தில் பயனுள்ள பொருட்களை அடுக்கி வைப்பது மிகவும் சிரமம்.

4. ஒவ்வொரு அறையாக ஒழுங்குபடுத்த வேண்டாம். ஒவ்வொரு வகையாக ஒழுங்கு படுத்துங்கள். வீட்டை ஒழுங்குபடுத்துகின்றேனென்று வேலையைத் தொடங்குகின்ற பலர் முதலில் ஓர் அறையில் ஆரம்பிப்பார்கள். அதை ஒழுங்குபடுத்திவிட்டு அடுத்த அறைக்குச் செல்வார்கள். அங்கிருந்து இன்னோர் அறை... இப்படி வேலையை முடித்து விட்டு பார்த்தால் வீடு ஒழுங்காக இருக்கிறது என்கிற எண்ணமே ஏற்படாது. காரணம் அவர்கள் ஓர் அறையில் இருக்கிற குப்பையை இன்னோர் அறைக்குத்தான் கொண்டு சென்றிருப்பார்கள். வீணான எதையும்கண்டறிந்து அகற்றியிருக்கமாட்டார்கள்.

அதற்குப் பதிலாக ஆடைகள் என்று எடுத்துக் கொண்டால் எல்லா அறைகளிலும் இருக்கிற ஆடைகளையெல்லாம் ஒரே இடத்துக்குக் கொண்டுவர வேண்டும். அவற்றை வகைப்படுத்தி சரியான இடங்களில் அடுக்க வேண்டும்.

5. பொருட்களை ஒழுங்குபடுத்தும் போது இந்த வரிசையைப் பின்பற்றலாம்.

ஆடைகள், புத்தகங்கள், ஆவணங்கள் மற்றவை செண்டிமெண்டல் பொருட்கள்.

பல நேரங்களில் வீட்டைச் சுத்தப்படுத்த ஆரம்பிக்கிறவர்கள் எங்கோ பெட்டியில் கிடைத்த ஒரு புகைப்பட அல்பத்தைப் பார்த்து கொண்டு உட்கார்ந்து விடுவார்கள். இதைப்பார்த்து எவ்வளவோ நாளாச்சு என்று வியப்போடு மகிழ்வார்கள்.அந்த மகிழ்ச்சி முக்கியம்தான். ஆனால் இப்போதைய வேலையை அது கெடுத்து விடுகிறதே.

6.ஒவ்வொரு பொருளும் மகிழ்ச்சியைத் தருகிறதா? என்று யோசிக்க வேண்டும்.

Konmari முறையில் முக்கியமான அடிப்படை எந்தப்பொருளை அகற்றுவது என்பதல்ல. எந்தப் பொருளை வைத்துக் கொள்வது என்பதுதான்.

அப்படி நாம் விரும்புகிற நமக்கு மகிழ்ச்சியைத் தருகிற பொருட்களை மட்டுமே நம்மைச்சுற்றி வைத்துக் கொண்டால் வீடும் ஒழுங்காக இருக்கும் வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருக்கும் •

## பேச்சு



இதோ பார் இப்படி அடிக்கடி வந்து என்னைத் தொந்தரவு செய்யாதே. வீடு தேடி வந்த நெருங்கிய நண்பனிடம் எகிறி விழுந்தான் ஏகாம்பரம்.

டேய் மூணாம் மனுஷன் கிட்ட பேசற மாதிரி கத்தாதே. நான் உன் குளோஸ் பிரண்டுடா...இதோ உன் நட்பை குளோஸ் பண்ணிட்டேன்... போதுமா?

பரிதாமாகத் திரும்பிப் போனான் நாற்பது வருட நண்பன். ஏங்க பீச்சுக்குப் போய் ரொம்ப நாள் ஆச்சு . சாயங்காலம் போகலாமா? ஆசையுடன் கேட்ட மனைவியை எரித்து விடுவது போல் பார்த்தான் ஏகாம்பரம். அங்க போய் வாங்கினாத்தான் காத்தா. நம்ம வீட்டு மொட்ட மாடியில போய் நில்லு. அதே காத்து வரும்! அப்பா செஸ் விளையாட வர்றீங்களா? கேட்ட மகனுக்கு முதுகிலேயே ஒன்று வைத்தான்.டேய் ஏன்டா இப்படி எல்லார் மேலேயும் எரிஞ்சு விழுறே? அப்படி என்னதான் உனக்குத் தலை போற வேலை? ஏகாம்பரத்தின் தாய் கேட்டாள். நாளைக்கு ஒரு இடத்தில் ஒரு மணி நேரம் சொற்பொழிவு செய்யறதா ஒப்புதல் கொடுத்துட்டேன். அதுக்காக நிறைய தயாரிக்கணும். யாரும் என்னைத் தொந்தரவு செய்யாதீங்க என்றபடி தன் அறைக்குள் சென்றான். என்ன தலைப்பில் பேசப்போற?

அன்பின் பெருமை என்றபடி படாரென்று கதவைச் சாத்தினான் ஏகாம்பரம் •




அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பொலிஸாரிடம் ஒன்று கேட்கின்றேன்... நான் பேசஆரம்பித்ததும் போக புறப்பட்ட நபர்களைப் பிடித்து அமர்த்த வக்கில்லையா உங்களுக்கு..?

தலைவரைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்ற காரணத்தால் அவரைப் பற்றி நான்கு கிசுகிசுக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன் முதலாவதாக...





மந்திரி போருக்கான ஆயத்தப் பணிகள் எப்படி நடக்கின்றன? குழி ரெடி மன்னா!

மன்னர் ஏன் மகாராணிகளை வரிசையில் நிற்க வைத்து எண்ணிக்கொண்டு இருக்கிறார்! நகர் வலம் சென்று வருவதற்குள் நடுவுல கொஞ்சம் மகாராணிகளைக் காணோமாம்!





ரொம்ப நாள் கழிச்சு உன் வீட்டுக்கு வந்திருக்கேன் வெறும் ரீ மட்டும் தானா மச்சி..
பின்ன என்ன செய்யணும்...
கடிக்க ஏதாவது...
நாய் இருக்கு அவிட்டு விடவா...

மன்னா! எதிரி மகாராணியைக் கடத்தி விட்டான்!
என் துயரத்தில் பங்கெடுப்பவன் எப்படி எதிரியாக முடியும்!





டாக்டர்...ஆபரேஷன் முடிஞ்சுதா? பேஷன்ட்டைக் சுவட்டிட்டுப் போலாமான்னு கேக்குறாங்க!
எடுத்துட்டுப் போலாம் என்று சொல்லு!

டாக்டர்...குனிஞ்சா நிமிர முடியலை..
எதுக்குக் குனியுறீங்க...?
குனியலைன்னா என் மனைவி பாத்திரத்தை வீசி எறியும் போது மண்டையில படுமே டாக்டர்...





பக்கத்து வார்டில் இருக்கும் முனியம்மாவைப் பார்த்து நீ முன்னால போ நான் பின்னால வாரேன்னு பாடினீங்களா?
ஆமா டாக்டர்.. ஏன் கேட்குறீங்க?
ஆச்சர்யமா இருக்கே!முதல்ல முனியம்மாவுக்கும் அடுத்ததா உங்களுக்கும் ஆபரேஷன் பண்ணப் போறதை எப்படிக் கண்டுபிடிச்சீங்க...

உங்க அத்தை இருங்காங்களாம்மா?
ம்ம்... இன்னும் இருக்காங்க!






எக்ஸ்ரே படத்தை உங்க நாய் தூக்கிட்டு போகுது டாக்டர்!
எங்க எலும்பு தெரிஞ்சாலும் அது விடாது!



எதற்காக நம்ம தலைவருக்கு வைக்கோல் மாலை போடுறாங்க?
கட்சிக்காக மாடா உழைச்சாராம்!...



# கூட்டத்தோடு ‘கோவிந்தா’ போடுபவரா நீங்கள்?

ஒரு மன்னனுக்கு தன் நாட்டில் பால் கிணறு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஆசை எழுந்தது. அந்தப் பால் கிணற்றை உருவாக்கினால் தன் புகழ் உலகெங்கும் பரவும் என்று எண்ணினான்.

ஏனெனில் அதுவரை அப்படி ஒரு கிணறு வேறு எங்கும் கிடையாது.மந்திரிகளது ஆலோ

**நீங்கள் வெற்றி பெற வேண்டுமானால், தலைமைப் பொறுப்பில் இருக்க வேண்டியது அவசியம்.**

சனையின்படி,ஊரின் நடுவில் ஒரு பெரிய கிணற்றைத் தோண்ட உத்தரவிட்டான்,கிணறு ரெடியானது நாட்டு மக்கள் அனைவரையும் தலா ஒரு செம்பு பாலைக் கொண்டு வந்து அன்று இரவு அக்கிணற்றில் ஊற்ற வேண்டும் என்று உத்தரவிட்டான்.


அந்த ஊரைச் சேர்ந்த ஒருவன் எல்லோரும் பாலை ஊற்றுகிற போது நான் மட்டும் ஒரு செம்புத் தண்ணீரை ஊற்றினால் மன்னனுக்குத் தெரியவா போகிறது?என்று எண்ணி அன்று இரவு அக்கிணற்றில் ஒரு செம்புத் தண்ணீரை ஊற்றினான்.

மறுநாள் விடிந்தது. கிணறு முழுவதும் தண்ணீர் மட்டுமே இருந்தது.

ஆம்! நாம் ஒவ்வொருவரும் தனியாக இயங்குகிறபோது அதன்விளைவு வெளிப்படையாகத் தெரியும் என்பதால் நாம் செய்கிற வேலையில் சரியாக இருப்போம்.

அதேநேரம் கூட்டமாகச் சேர்ந்து ஒரு வேலையை செய்யச் சொன்னால் வேலை செய்ததாக கணக்குக் காண்பித்துவிட்டு தப்பித்துக் கொள்வோம்.இது சராசரி மனிதர்களின் பொதுவான இயல்பு.ஆனால் வெற்றியாளர்கள் அப்படிக் கிடையாது. அவர்கள் குழுவிலும் சிறந்து இயங்கக்கூடியவர் கள், குழுவையும் சிறந்து இயக்கக்கூடியவர்கள்.

ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள்.இது



உங்கள் வாழ்க்கை. உங்கள் முன்னேற்றத்திற்காக நீங்கள் வாழ்கிறீர்கள்.பிறரோடு சேர்ந்து கோவிந்தா போடுவதால் உங்கள் நேரத்தை வீணடிப்பதோடு உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள்.சிலகாலம் கழித்து உங்கள் வாழ்க்கையை திரும்பிப் பார்க்கிறபோது இந்த உண்மையை நீங்கள் உணர்வீர்கள்.

நீங்கள் மனிதனாகப் பிறந்து விட்டால் சம்பாதித்தே தீரவேண்டும். சம்பாதிக்காத மனிதனை இந்த உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை.

இதே விடயத்தை நாம் பொசிட்டிவாகக்கூட பார்க்கலாம். சம்பாதிப்பதைவிட அப்படி என்ன பெரிய கடமை நமக்கு இங்கு இருக்கப்போகிறது? நம் வளர்ப்பும் படிப்பும் உழைப்பும் சம்பாத்தியத்தை நோக்கியே உருவாக்கப்பட்டிருப்பதால் பொருள் ஈட்டுபவருக்கே இந்த உலகம் சொந்தம். இப்போது சொல்லுங்கள் நீங்கள் கூட்டத்தோடு கோவிந்தா போடப்போகிறீர்களா? அல்லது உங்களுக்கென

ஒரு தனித்துவத்தை உருவாக்கி திறம்பட உழைத்து சம்பா திக்கப் போகிறீர்களா?

மனிதனுடைய திறமை அளவிடற்கரியது.எதையும் சாதிக்கும் வல்லமை மனிதனுக்கு உண்டு.

ஒரு விஞ்ஞானி உலகத்திலேயே மிகவும் சக்திவாய்ந்த ரோபோவைக்கண்டுபிடித்தார்.

அந்த ரோபோ பன்முகத்தன்மை கொண்டது.

**நமக்குள் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்த, பன்முகத்தன்மை கொண்ட ரோபோவின் திறன் இருக்கிறது!**

ஆடும், பாடும், சிரிக்கும், பேசும்,நடக்கும்,கொம்பியூட்டரை இயக்கும், ஸ்மார்ட் போனைப் பயன் படுத்தும். வாகனம் ஓட்டும்... இப்படி எல்லா வேலைகளையும் செய்யும் திறமை கொண்டது.

இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப்போன பத்திரிகையாளர் கேட்டனர். அப்படியானால் இனி எதிர்காலத்தில் மனிதனுடைய வேலைவாய்ப்பெல்லாம் பறி போய் விடுமா? என்று.

அதற்கு அந்த விஞ்ஞானி,சிரித்துக் கொண்டே ஆம், உண்மை தான்!

இந்த ரோபோவை விட தாம் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவன் என்பதை மனிதன் உணராதவரை என்றார் கிண்டலாக.

ஆம்!நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஆயிரம் மடங்கு சக்திவாய்ந்த பன் முகத் தன்மை கொண்ட ரோபோவின் திறன் இருக்கிறது. இந்த அருமை தெரியாமல் கூட்டத்தோடு ஒருவராக நாம் காணாமல் போய்க்கொண்டிருக்கிறோம்.

புரிந்து கொள்ளுங்கள் வெற்றியாளர்கள் தன் திறனை உணர்ந்ததால் தான் சாதித்திருக்கிறார்கள்.

நீங்கள் உங்கள் திறனை எப்போது உணரப் போகிறீர்கள்? ●



ஒருவன் ஒருத்தியை விரும்பி தேர்தெடுப்பதை காதல் என்கிறார்கள். வெளித்தோற்றத்திற்காக அல்ல, நிறத்திற்காக அல்ல நீ அழகானவளாக இருப்பினும் நீ எத்தகைய குணம் உடையவள் என்பதற்காகவே நான் உன்னுடன் காதலில் விழுந்தேன்.

நான் விரும்பிய போதெல்லாம் உன்னை சந்திக்க முடிந்ததில்லை. ஆனால் என் இதயத்தின் ஆழத்தில் நீ மட்டுமே இருந்தாய். என்னால் ஒருபோதும் உன்னை வெளியேற்றிவிட முடியாது.

ஒவ்வொரு காதல் கதையும் மிகவும் அழகானது தான். ஆனால் நம்முடைய காதல் கதையே எனக்கு மிகவும் பிடித்தமானது. என்னை சந்திக்கும் வாய்ப்பை தவற விட்டு விட்டாய் என உன் இதயம் உனக்கு உணர்த்தியது தான் நீயும் என்னை விரும்பினாய் என்பதன் காதல் அறிகுறி.

எனக்கு எல்லாமே நீதான் என்பதால் நேசிக்கின்றேன். உன்னை முதலில் சந்தித்த போது எனக்கு உண்மையிலேயே தெரிந்திருக்கவில்லை நீ தான் எனக்கு மிகவும் முக்கியமானவளாக இருக்கப்போகிறாய் என்று.

உனது இடர்பாடுகளை, சிக்கல்களை, சோதனைகளை, சவால்களை நீ தனியாக எதிர்கொள்ள வேண்டாம். நானும் உன்னுடன் சேர்ந்து எதிர்கொள்ள வேண்டும் என உறுதி எடுத்துக் கொண்டேன்.

எனது இதயம் முழுமையானது.குறைவற்றது, களங்கமற்றது. ஏனெனில் நீதானே உள்ளே இருக்கிறாய். உன் புன்னகையை பார்க்கும் போதெல்லாம் எனக்கு உன் மீதான காதல் உணர்வு மெருகேறுகிறது. ஒவ்வொரு தினமும் நீ தான் என் மனத்தில் முதலாவதும் கடைசியுமாய் இருக்கிறாய்.

நீஎன்னுடையதோழி.தோழி மட்டுமல்ல காதலி .காதலி மட்டுமல்ல என் இதயம். என் இதயம் மட்டுமல்ல நீ என் வாழ்க்கை மட்டுமல்ல நீதான் எல்லாமே எனக்கு.

காதலர்கள் எப்போதும் காதலியின் இனிமையான ஹலோ என்ற சொல்லுக்காக ஏங்குகிறார்கள்.




கடுமையானகுட்பை என்ற வார்த்தையில் நொறுங்குகிறார்கள்.

நாள் முழுவதும் உன்னுடன் கழித்த போதிலும் வேலைக்காக வெளியூர் செல்ல புறப்பட நேர்ந்த தருணங்களில் அந்த நிமிடத்தில் உன் பிரிவை எண்ணி ஏங்கியிருக்கிறேன்.

நீ என்னுள் இருக்கிறாய். என்னை சுற்றிலும் இருக்கிறாய். எங்கு நான் சென்றாலும் நான் மட்டுமே பார்க்க முடிகிறது. இந்த உலகத்தில் என்னையும் உன்னையும் தவிர வேறெதுவும் எனக்கு தென்படவில்லை.

என் வாழ்க்கையில் நான் எதையாவது சரியாக செய்து இருக்கிறேன் என்றால் அது என் இயத்தை உன்னிடம் கொடுத்தது மட்டுமே ஆகும்.

நேற்றையதை விட இன்று நான் உன்னைஅதிகம் நேசிக்கின்றேன். நாளை இதையும் விட அதிகமாகவே நேசிப்பேன். நம் எண்ணங்கள் ஒரே மாதிரியானவை. மற்றவர்கள் நம்மைப்பற்றிஎன்ன நினைக்கிறார்கள் என்று ஒருபோதும் கவலைப்பட்டதில்லை.

எல்லா ரணங்களையும் காலம் ஆற்றுகிறது. என் மகிழ்ச்சிக்கு உன்னைத் தவிரவேறு யாருமே காரணமில்லை.நம் வாழ்வை மற்றவர்களுடன் ஒப்பிட்டு பார்த்ததில்லை. என் வாழ்வு மலரத் தொடங்கியது உன்னை கைபிடித்த பின்பு தான்.

நான் உன்னை பார்த்த போது மிகவும் வியப்படைந்தேன். உன் பார்வை என் மேல் விழுந்ததற்காக அல்ல. நான் விரும்பிய அனைத்தும் உண்மையில் உன் வடிவில் என் முன் இருந்ததற்காக.உண்மைக் காதல் பதிலுக்கு எதுவும் காதலியிடம் எதிர்பார்ப்பதில்லை. நிபந்தனை எதுவும் அற்றது தான் உண்மைக் காதல்.

சேர்ந்து வாழ்வதற்காக ஒருவரை கண்டுபிடிப்பது காதல் அல்ல.யார் இல்லாமல் ஒருவரால் வாழவே முடியாதோ அவரை கண்டு பிடிப்பதே காதலாகும். காதலுக்கு கண்ணில்லை என்பர். அது உண்மையல்ல, காதல் பாதுகாப்பு இன்மையையும் எல்லா பயங் களையும் உணர்கிறது. வலி மிகுந்த தருணங்களில் எல்லா சவால்களையும் எதிர்கொள்கிறது.

நாம் மிகப் பெரிய காரியம் எதையும் செய்து விடவில்லை. சிறிய செயல்களில் கூட மிகப் பெரிய காதலை காட்டியதை தவிர நான் உன் காதலன். சண்டைக்காரன் அல்ல. ஆனால் நம் காதலுக்காக நான் யாரிடமும் சண்டை இடுவேன்.

உண்மையில் நாம் ஒருவரை ஒருவர் கவனமாக பார்த்துக்கொண்டு அக்கறையுடன் செயற்படும் போது நமது பணிச்சுமை, குடும்பப் பொறுப்பு எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் ஒரு வழி ஒருநல்ல பாதை அமைத்து விடுகிறது.

நான் உன்னை முடிவில்லாமல்காதலிப்பேன். நான் வாழும் வரை காதலிப்பேன். உண்மைக்காதல் என்பது சேர்ந்து இருப்பவர்களை பிரிக்க முடியாதது மட்டுமல்ல பிரிக்கப்பட்டாலும் எதுவும் மாறிவிடாது என்பது தான்.

எழுநூறு கோடி மக்கள் உள்ள உலகமிது. ஆனால் என் இதயம் தேர்ந்தெடுத்தது உன்னைத்தான். வயதாகிக் கொண்டு இருக்கிறது என்றாலும் முன்னிலும் நீ சற்று கூடுதல் அழகுடனே இருக்கிறாய்.●

# ஏன் இவங்க ஐ.பி.எல். ஆடுறது இல்லை?




ஐ.பி.எல் - பெரிய வீரர்களுக்கென பெயர்போன தொடர். அதேசமயம் இளம் திறமைகளை அடையாளம் காணும் ஒரு பள்ளிக்கூடம். கில்கிறிஸ்ட், கலிஸ், வார்ன், போலக் என எத்தனையோ மிகப் பெரிய ஜாம்பவான்களெல்லாம் ஆடிச்சென்ற ஐ.பி.எல் தொடரின் நடப்பு நாயகர்கள் யாரென்றால் கோலி, வோனர், டிவில்லியர்ஸ், ரஸ்ஸல் போன்றோர்தான். ஆனால் இந்த இரண்டு குரூப்புகளுக்கும் நடுவில் ஒரு சிலர் உள்ளனர். ஐ.பி.எல் தொடரில் மிகப்பெரிய அங்கம் வகித்துவிட்டு தற்போது ஆடும் லெவனில் விளையாட வாய்ப்பில்லாமல் ஏமாற்றமடைந்து வருகின்றனர். "என்னது இவங்கல்லாம் ஆடலையா" என்று அனைத்து ரசிகர்களும் வாய் பிளக்குமளவிற்கு ஆச்சரியம் பொதிந்துள்ளது இந்த 9 ஆவது ஐ.பி.எல் தொடர்.

வீரர்களின் முந்தைய சாதனைகளுக்காகவும், அவர்களது பெயர்களுக்காகவுமே அணியில் தேர்வு செய்த காலமெல்லாம் போய்விட்டது. ஃபார்ம், அணியின் பேலன்ஸ் ஆகியவற்றிற்கே அனைத்து அணிகளும் முன்னுரிமை கொடுக்கின்றன. ஆனால் புனே, மும்பை போன்ற அணிகள் ஒருசில வகையில் அதற்கு விதிவிலக்காக இருக்கின்றன. ஒருசில வீரர்கள் சிறப்பாய் செயற்படாத போதும், அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அவ்வணியிலிருக்கும் பிற திறமைசாலிகளுக்குக் கிடைப்பதில்லை. அப்படி இந்த ஐ.பி.எல் தொடரில் வாய்ப்புகள் அதிகம் கிடைக்காமல் அரங்கு அமர்ந்து ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் வீரர்கள் குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் அலசுவோம்.

**கிறிஸ் கெயில் (பெங்களூர்)**

பவுலர்களின் எமன் கெயிலுக்கே இந்த நிலைமையா? என்று நாம் ஆச்சரியப்படத்தான் வேண்டியுள்ளது. ஆனால் இதற்குக் கெயிலே காரணம். இருபது-20 உலகக் கோப்பையில் இங்கிலாந்துக்கு எதிராக சரவெடியாய் சதமடித்த கெயில், அதன்பிறகு நமுத்துப் போன புஸ்வானம் ஆனார். அரையிறுதி, இறுதி என எந்தப் போட்டியிலும் கெயில் ஒற்றை இலக்கத்தைத் தாண்டவில்லை. சரி ஐ.பி. எல்லிலாவது ஜொலிப்பாரா என்று எதிர்பார்த்தால், விளையாடிய 3 போட்டிகளில் வெறும் 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து மீண்டும் ஏமாற்றமே அளித்தார். வோட்சன், கோலி, டிவில்லியர்ஸ், ராகுல், மன்தீப், சர்ஃப்ராஸ் என மிகச்சிறந்த துடுப்பாட்ட வரிசை கொண்டிருந்ததால் கெயிலை கழற்றிவிட இம்முறை யோசிக்கவில்லை அணி நிர்வாகம். பந்துவீச்சு மிகமோசமாக இருப்பதால் ஒரு வெளிநாட்டு பந்துவீச்சாளரை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவையெல்லாவற்றையும் தாண்டி கெயிலை இன்னும் வெளியிலேயே அமர்த்தியிருப்பது ஆர்.சி.பிக்கான களத்தடுப்புக்குத் தேவை தான்.

**டிரெண்ட் போல்ட் (ஐதராபாத்)**





கடந்த சீசனில் சன்ரைசர்சின் ஆடும் லெவனில் ஸ்டெயினையே ஓரம் கட்டியவர். ஆனால் இம்முறை இன்னும் ஒரு போட்டியில் கூட அணியில் இடம் கிடைக்காமல் தவிக்கிறார். அதற்கு மிக முக்கிய காரணம் வங்கதேசத்தின் முஸ் தாஃபிகுர் ரஹ்மான். ஏற்கனவே நெஹ்ரா, புவனேஷ்வர், பரிந்தர் ஸ்ரன் என அற்புதமான பவுலிங் யூனிட்டைக் கொண்டிருக்கும் அணியில் எக்காரணம் கொண்டும் இரண்டு வெளிநாட்டுப் பந்து வீச்சாளர்களை தேர்வு செய்ய இயலாது. இந்திய துடுப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கைக் குறைவாக உள்ளதால் 3 வெளிநாட்டு துடுப்பாட்டக்காரர்கள் கட்டாயம் தேவைப்படுகிறார்கள். அவ்வகையில், யார்க்கர்களாலும், ஸ்பீடு வேரியேஷன்களாலும் அனைத்து முன்னணி பேட்ஸ்மேன்களையும் அச்சுறுத்தி வரும் முஸ்தா முஸ்தாஃபிசுரிடம் சற்று பின் தங்குகிறார் போல்ட். திறமை இருந்தும் அதற்கான வாய்ப்புக் கிடைக்காதது கொஞ்சம் பரிதாபம் தான்.

**டேல் ஸ்டெயின் (குஜராத்)**

மக்குல்லம், பிராவோ, சுமித், ஃபின்ச், ஃபால்க்னர் என ஏற்கனவே ஐந்து இருபது-20 ஸ்பெஷலிஸ்டுகள். அனைவரும் ஃபார்மில் வேறு உள்ளனர். இப்படியிருக்கையில் தனது பழைய ஃபார்மை இழந்து தவிக்கும் ஸ்டெயினுக்கு அணியில் எங்கு இடம் தருவது? அவர் விளையாடிய ஒரே போட்டியிலும் அவரால் விக்கெட் ஏதும் வீழ்த்த முடியவில்லை. மோசமாக பந்து வீசவில்லை என்றாலும் அணியிலுள்ள நிலைமை அப்படி. குஜராத் அணியைப் பொறுத்தவரை டாப் ஆர்டர் அபாரம். பிரவீன், குல்கர்ணி, சிவில் கௌசிக், தாம்பே, பிராவோ, ஃபால்க்னர் என அசைக்க முடியாத பந்துவீச்சு. அவர்களின் ஒரே பிரச்சினை மிடில் ஆர்டர் பேட்டிங் தான். அதனால் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்பினால் கூட ரெய்னா மிடில் ஆர்டர் பேட்ஸ்மேன் யாராவது ஒருவருக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கக் கூடும். எனவே ஸ்டெயினுக்கு இனி வாய்ப்புக் கிடைப்பது அரிதிலும் அரிதே.

**மார்டின் குப்தில் (மும்பை)**




சிம்மன்சிற்குப் பதிலாக குப்தில் மும்பை அணிக்குக் கையெழுத்திட்டபோது எக்கச்சக்க எதிர்பார்ப்புகள். ஆனால் அவையனைத்தையும் தனது முதல் போட்டியிலேயே தவிடுபொடியாக்கினார் குப்தில். "இவருக்கு துணைக்கண்ட ஆடுகளங்களில் ஆடிப் பழக்கமில்லை" என்றுதான் அனைத்து அணிகளும் ஏலத்தில் இவரைப் புறக்கணித்தன. அதை நிரூபிக்கும் வகையிலேயே இருந்தது 2 ஓட்டங்களில் அவுட்டான அவரது ஆட்டம். ஒரு ஆட்டத்தில் எதையும் முடிவு செய்யக்கூடாது என்றாலும், பேலன்சிங் என்றொரு பிரச்சினை எழுகிறது. பார்த்திவ் பட்டேலின் ஆட்டம் சிறப்பாகவே உள்ளது. அவரை வெளியில் அமர்த்தி அவருக்கு நிகரான ஒரு இந்தியரைத் தேட முடியாது. குப்தில் ஓப்பனிங் இறங்கிய போட்டியில் ரோஹித்தால் மிடில் ஆர்டரில் சரியாக விளையாட முடியவில்லை. எனவே பார்த்திவும் ரோஹித்தும் தான் மும்பைக்கு சரியான தொடக்க ஜோடி. அதேசமயம் சீராக ஆடாத பட்லருக்குப் பதிலாக குப்திலை சேர்க்கலாம். ஆனால் அவர் மிடில் ஆர்டருக்கு எப்படிப் பொருந்துவார் என்பது சந்தேகம் தான். அனைத்துப் போட்டிகளிலும் வெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால், சோதனைகள் செய்து பார்க்க மும்பை அணி விரும்பாது.

இந்த வீரர்களுக்கெல்லாம் வாய்ப்பு கிடைக்காத நிலைமை. ஆனால் பின்வருபவர்களுக்கோ வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன.

**கோரி அண்டர்சன் (மும்பை)**





தொடக்கத்தில் அணியில் ஓரிரு மாற்றங்கள் செய்த ரோஹித், அதன்பின் பல போட்டிகளாக அதே அணியைத்தான் பயன்படுத்தி வருகிறார். அதுவும் பெரிய அளவில் சோபிக்காத பொல்லார்டு, பட்லர் ஆகியோருக்கும் இன்னும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. பேட்டிங் பவுலிங் என இரண்டிலுமே சொதப்பி வரும் பொல்லார்டுக்கு, கோரி நிச்சயம் சிறந்த மாற்றாக இருப்பார். பொல்லார்டோ மிஞ்சிப் போனால் இரண்டு ஓவர்கள் பந்து வீசுகிறார். அதுவும் சுமாராக. ஆனால் கோரி 4 ஓவர்களும் பந்து வீசத் தகுந்தவர். அவரை அணியில் சேர்க்கும் பட்சத்தில் மிடில் ஆர்டரும் வலுப் பெரும். ஆனால் ரோஹித்தோ மாற்றங்களைக் கொண்டு வர பெரிதும் தயங்குகிறார். பிளே ஆஃப் சுற்றுகள் நெருங்கிவிட்ட நிலையில் கோரியை அணியில் சேர்ப்பது மும்பைக்கு மிகவும் அவசியம். (க)



# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: படித்தால் மட்டும் போதுமா
**இசை:** விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்கள்: P.B.ஸ்ரீநிவாஸ்,
T.M.சௌந்தர்ராஜன்
வரிகள்: கண்ணதாசன்
பாடல்:பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை



பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா
பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்லவேண்டுமா

நடமாடும் மேகம் நவநாகரிகம்
அலங்கார கிண்ணம் அலை போல மின்னும்
நடமாடும் செல்வம் பணிவான தெய்வம்
பழங்கால சின்னம் உயிராக மின்னும்
துள்ளி வரும் வெள்ளி நிலா
துள்ளி வரும் வெள்ளி நிலா
துவண்டு விழும் கொடியிடையாள்
துவண்டு விழும் கொடியிடையாள்
விண்ணோடு விளையாடும்
பெண் அந்த பெண்ணல்லவோ
சென்றேன் அங்கே
கண்டேன் இங்கே வந்தேன்

பெண் ஒன்று கண்டேன் பொன் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா

நான் பார்த்த பெண்ணை நீ பார்க்க வில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்க வில்லை
நீ பார்த்த பெண்ணை நான் பார்க்க வில்லை

உன் பார்வை போலே என் பார்வை இல்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை
நான் கண்ட காட்சி நீ காணவில்லை

என் விழியில் நீ இருந்தாய்
என் விழியில் நீ இருந்தாய்
உன் வடிவில் நான் இருந்தேன்
உன் வடிவில் நான் இருந்தேன்

நீ இன்றி நானில்லை நான் இன்றி நீயில்லையே
சென்றேன் ம்ஹும்
கண்டேன் ம்ஹும் வந்தேன்

பொன் ஒன்று கண்டேன் பெண் அங்கு இல்லை
என்னென்று நான் சொல்லலாகுமா
என்னென்று நான் சொல்லவேண்டுமா

பூ ஒன்று கண்டேன் முகம் காணவில்லை
ஏன் என்று நான் சொல்லலாகுமா
ஏன் என்று நான் சொல்லவேண்டுமா

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்பவர்கள்**

**ரட்ணம் குடும்பம்- உரும்பிராய், சிவகுமார், யோகேஸ்வரன் குடும்பம்- மானிப்பாய், யோகலிங்கம், விஜயகுமார்- தெல்லிப்பழை, சந்திரன் குடும்பம் -நல்லூர்**

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.


# ஈழத்து சினிமா

## பந்து குறும்படம்-ஓர் விமர்சன நோக்கு

பந்து குறும்படம் மதிசுதாவினால் எழுதி நெறிபடுத்தப்பட்ட குறும்படமாகும். இக்குறும்படமும் நாவலர் குறும்பட விருதுப்போட்டியில் தேர்வாகியதுடன் சிறந்த சிறார் நடிகருக்கான விருதையும் பெற்றிருக்கின்றது. நீண்ட நாட்களுக்குப்பின் இயக்குநர் மதிசுதாவினால் உருவாக்கப்பட்ட இக்குறும் திரைப்படம் சிறார்களின் வாழ்வியல் எண்ணங்களை அவர்களின் பார்வையில் பேச விளைந்திருக்கின்றது.

புலம்பெயர் தேசத்தில் சிறார்கள் விளையாடுவதைப் பார்க்கும் ஒருவரின் அகத்தில், தன் பால்யகாலத்தின் எண்ணங்கள் காட்சிகளாக விரிகின்றன. இக் காட்சியின் ஒளிப்படிமம் குறும்படமாக விரிகின்றது.

வறுமையான குடும்பத்தில் பிறந்த இரு சகோதரர்கள், அதில் ஒருவர் தினமும் பந்து ஒன்றை வேண்ட வேண்டும் என்ற ஆவலில் இருக்கின்றார். டெனிஸ் பந்தின் விலையின் மிரட்சி அப்பந்தை வேண்டுவதை தவிர்க்கின்றது. தினமும் பந்தின் எண்ணங்களில் வாழ்கிறார். மற்றைய சகோதரர் பந்துவேண்டுவதில் ஆர்வம் இல்லாதவராக, அம்மா கொடுக்கும் பணத்தில் யூஸ் வாங்கிக்குடித்துக்கொண்டு இருக்கின்றார். பந்து வேண்ட விரும்பும் சிறுவன் தினமும் அம்மா செலவுக்கு கொடுக்கும் சிறிய தொகையை பந்துவேண்ட சேமிக்கிறான். சேமிக்கும் காலப்பகுதியில் பந்தின் மேலே இருக்கும் தீராக்காதலில் கடையில்சென்று பந்தின் விலையைக் கேட்கிறான். கடைக்காரரும் சளைக்காமல் தினமும் அவனுக்குச் சொன்னாலும், ஒரு கட்டத்தில் சினமடைகிறார்.




மெல்ல மெல்ல பணம் புரட்டும் சிறுவன், கடைக்காரர் சொன்ன பணத்தின் பெறுமதியை அடைந்துவிடுகிறான். ஓடிச் சென்று பந்து வாங்க மிகுந்த மகிழ்ச்சியுடன் செல்ல, அவனுக்கு அதிர்ச்சி காத்திருக்கின்றது. பந்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது. மீண்டும் சோகத்துடன் வீடு செல்கிறான்.

வீட்டில் இருக்கும் சகோதரன் இன்னுமொரு இக்கட்டில் இருக்கிறான். பாடசாலையில் தவறுதலாக தொலைத்த நண்பனின் கொம்பாஸ் பெட்டிக்கு பணம் செலுத்தவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறான். அவனின் துன்பத்துக்கு செவிசாய்த்து அவனிடம் தான் சேர்த்த பணத்தைக் கொடுக்கின்றான். அவன் பணத்தை திரும்பி விரைவில் தருவதாக உறுதியளிக்கின்றான். நாட்கள் கரைகின்றன.

சில காலங்களின் பின், அவனுக்கு பந்து ஒன்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அது எவ்வாறு கிடைக்கின்றது என்பதை குறும்படத்தில் பார்த்து தெரிந்துகொள்க. கிடைத்த பந்தில் நண்பர்கள் எல்லோரும் இணைந்து கிரிக்கெட் விளையாடச் செல்கிறார்கள். அங்கு சம்பவிக்கும் சம்பவமே படத்தின் இறுதிப்பகுதியை நகர்த்துகின்றது.

மதுசுதாவின் குறும்படங்களில் இருக்கும் தனித்துவமும், கிராமத்து அழகியலும் இக்குறும்படத்தில் செறிவாக இருக்கின்றது. மிக எளிய கதைக்கு சுவாரசியமான இயல்பான திரைக்கதையை மதிசுதாவும் கதையின் உரிமையாளர் யாழ்நிலவன் ஷாம்சனும் இணைந்து எழுதி படமாக்கியிருக்கின்றார்கள்.

இக்குறும்படத்தின் கதையை எழுதியதுமன்றி அதனை தயாரித்தவர் யாழ்நிலவன் ஷாம்சன். இது அவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்த உண்மைக் கதை என்பதும் குறிப்பிடத்தக்கது. அரங்கவடிவமைப்பும் வசனமும் இயல்பாக ஈழத்தின் வாசனையை ஸ்பரிசிக்க விடுகின்றது. ஒளிப்பதிவு ஆகச்சிறந்த செய்நேர்த்தியை இக்குறும்படத்துக்கு வழங்கியிருக்கின்றது. பின்னணி இசையும் படத்தின் காட்சித்தொகுப்பும் குறும்படத்தை இன்னும் வலுப்படுத்துகின்றன.

**அனோஜன் பாலகிருஷ்ணன்**

# பதவி! பதவி! பதவி!

இன்றைய மக்களிடையே காணப்படும் பேராசைகளின் பதவி ஆசையானது மிகவும் மோசமாக உள்ளதைக் காணலாம். நம்முன்னோர்கள் மண்ஆசை,பெண்ஆசை,பொன் ஆசை மூன்றையுமே மனிதரிடம் காணப்படும் மோசமான ஆசைகளாகவும் இதனால்தான் பஞ்சமகாபாதகங்களும் ஏற்படுவதாகவும் கூறுவார்கள்.

ஆனால் இன்றைய உலகில் ஆசைகளில் கொடிய ஆசையாகப் பதவி ஆசை தலைவிரித்தாடுகின்றது. இந்த ஆசை ஏற்பட்டவர்களுக்கு வயது, அறிவு,சூழல்யாவுமே தெரிவதில்லை. இதனைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் இந்தப்பதவி எனும் மூன்றெழுத்தின் அதிகாரம் மற்றைய மண்ணாசை,பொன்னாசை,பெண்ணாசை மூன்றையும் இலகுவில் அடையவும் தம் பரம்பரைக்கு தொடர்ந்து அனுபவிக்க வாய்ப்பையும் ஏற்படுத்தவும் இது பக்கபலமாக இருப்பதேயாகும்.

பதவிகள் பலதுறைப்பட்டவையாயிருப்பினும் இன்றைய நாளில் அரசியற்பதவி என்பது படுமோசமாகப் பீடித்திருப்பதைக் காணலாம். நம்நாட்டிலும்சரி அயல்நாடான பாரதத்திலும் சரி பெரியவர்கள், முதியவர்கள், அறிவாளிகள் எனப் பாமர மக்கள் என்னும் சிலரே இந்த அரசியற் பதவிக்காகப் படும்பாட்டையும் செயல்களையும் பார்க்கும்போதும் கேட்கும் போதும் நல்ல பாமர மக்கள் வெட்கித்தலைகுனிய வேண்டியுள்ளது.

அட!கடவுளே தள்ளாத வயதிலும் பெரும் பணம் புகழ் பெற்றிருந்தபோதிலும் மென்மேலும் தொடர்ந்து பதவி,பதவி எனப் பல்லைக் காட்டுவதும் படுமோசமான செயல்களில் ஈடுபடுவதும் அரசியற்பதவி எனும் பேராசை எத்துணை இழிவானதென்பதை நாம் உணரலாம்.

மேலும் பதவி,பதவி எனத் தவிக்கும் பல பேர் பதவி கிடைத்தபின் நாட்டில் நடத்தும் பஞ்சமகாபாதகங்கள் வாய்விட்டுச் சொல்ல முடியாதனவாகும். பதவிகள் கிடைக்கும் வரை பாவம் போல் தெரிபவர்கள் பதவி கிடைத்தபின் மகாபாவிகளாகச் செயற்படத் தொடங்கிவிடுவார்கள். அப்பாவி மக்களை ஏமாற்றி தத்தம் பரம்பரைக்கே சொத்து,சுகம்,பாவம் யாவும் தேடிவிடுவார்கள். அந்தப் பலத்தை வைத்து மற்றவர்களை ஆட்டிப் படைத்து விடுவார்கள்.

இன்றும் என்றும் இந்தப் பதவிகட்கு அப்பாற்பட்டவர்களாக இருப்பவர்கள் ஆன்மீகவாதிகளேயாவர். எனினும் இன்று ஆன்மீகவாதிகள் எனப்பணிவுடன் மக்கள் வணங்கும் பெரியார்கள் சிலரும் அரசியல் சூதாட்டப்பதவிக்குப் பணிவதைப் பார்க்கும்போதும் கேட்கும்போதும் இது எமது சமயப்படி சிந்தித்தால் கலியுகத்தின் பிறழ்வு என்றும் கால மாற்றத்தின் சீர்கேடு என்றும் எண்ண வேண்டியுள்ளது.

பாரிற்பணி செய்து வாழவேண்டும் எனும் தூய எண்ணம் கொண்டவர்களுக்குப் பதவிகள் எதுவும் செய்துவிடாது தேவையுமில்லை எனலாம்.

''என்கடன் பணி செய்து கிடப்பதே''
என்பதனை மனத்திருத்துவோமாக.

நீர்வைமணி

## சில பொழுதுகள்...!

துயர்வந்து
என் கதவைத் தட்டும் போது
என்னருகில் நீயிருந்து
கதை சொல்லச் சென்ற
பொழுதுகளின்,நினை வவிழக்
கதவு திறக்காதால்
துயர் விலகும்!

## கடவுளுக்கு...!

மூடிக்கிடக்கின்ற
சொர்க்கத்தின் கதவுகளைத்
திறந்து விட்டால்...
மண்ணின் குரலுமக்குக்
கேட்கக்கூடும்!
கீழிறங்கி
புழுதி மண்ணின்மேல்
நடந்து வந்தால்,
மானிடத்தின்–
எழுச்சிகளை வீழ்ச்சிகளை
முற்றுமுழுதாக
நீரறிதல் கூடும்–கூட
நீர்...வருவீரா?


## வா

எரிகின்ற– குறுமெழுகு வரிசை
ஒளி நிழலில் ஒப்பாரிக் குரல் கேட்டு
இந்தப் பெட்டிக்குள்
நீயேன் கிடக்கின்றாய்? முகம் மூடும்
துப்பட்டி நீக்கி...
எழுந்து விடு!
என்கூட வந்துவிடு!

அ.யேசுராசா,
அறியப்படாதவர்கள் நினைவாக
ஈறும் நூலில் இருந்து

திரை விமர்சனங்கள்

# உன்னோடு கா



**மாயா** என்ற வெற்றிப் படத்தை கொடுத்த நம் மனதில் பதிந்தவர் ஆரி. இவர் நடிப்பில் இன்று வெளிவந்துள்ள படம் தான் உன்னோடு கா.

இப்படத்தை ஆர்.கே. இயக்க பிரபு, தென்னவன், ஊர்வசி, மாயா என ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது.

### கதைக்களம்

காலம் காலமாக பிரபு, தென்னவன் குடும்பத்திற்கு இடையே பகை, இரண்டு குடும்பங்கள் பேசாமல் இருந்தாலும், பிரபுவும், தென்னவனும் ஒருவரை ஒருவர் சந்தித்து தனியாக பேசிக்கொள்ளும் நண்பர்கள்.

ஊருக்குள் இருந்தால் நம்மால் நம் நட்பை தொடர முடியாது என இருவருமே சென்னை வந்து எதிரெதிர் வீட்டில் இருக்கின்றனர். பிரபுவின் மகனாக ஆரி, தென்னவனின் மகளாக மாயா.

இவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்து விட்டால் குடும்பப் பகை தீர்ந்துவிடும் என்று கணக்குப்போடுகிறார்கள்.

ஆனால், இவர்களோ டாம்& ஜெர்ரி போல் சண்டைப்போடுகிறார்கள், பிறகு இவர்கள் திருமணம் நடந்ததா? இரண்டு குடும்பமும் இணைந்ததா? என்பதை கலகலப்பாக கூறியுள்ளனர்.

### படத்தை பற்றிய அலசல்

ஆரி இதில் கலகலப்பான கதாபாத்திரம், நெடுஞ்சாலை, மாயா என சீரியஸ் கதாபாத்திரம் மட்டும் நடித்தவர். இதில் ஜாலி பையனாக கலக்குகிறார். மாயாவும் நடிக்க முயற்சி செய்திருக்கிறார்.

வழக்கம் போல் பிரபு-ஊர்வசி கலக்கி எடுத்துள்ளனர். மன்சூர் அலிகான், மனோ பாலா, எம்.எஸ். பாஸ்கர் என அனைவரும் நன்றாக நடித்துள்ளனர்.

குடும்ப ஓடியன்ஸை மட்டுமே இயக்குநர் டார்க்கெட் செய்து எடுத்துள்ளார். அதில் ஓரளவு வெற்றி பெற்றுவிட்டார்.

### க்ளாப்ஸ்


இரண்டாம் பாதியில் வரும் காமெடி காட்சிகள், பிரபு அனுபவ நடிப்பில் அசத்தியுள்ளார். ஆரி-மாயா காதல் காட்சிகள் குறும்பாக ரசிக்க வைக்கின்றது.




### பல்ப்ஸ்

முதல்பாதியில்பல காட்சிகள்சிரிக்க வைக்க முயற்சி செய்து தோற்று விட்டார்கள்.

மொத்தத்தில் எந்த ஒரு லாஜிக், மேஜிக் எதிர்ப்பார்க்காமல் ஜாலியாக பார்க்க வேண்டும் என்றார் செல்லலாம் உன்னோடு கா.



# கோ 2



**த**மிழ் சினிமாவில் அரசியல் சார்ந்து பல படங்கள் வந்துள்ளன. இதில்அமைதிப்படை, முதல்வன், கோ என ஒரு சில படங்களே நிகழ் கால அரசியலை தைரியமாக மக்களுக்கு கூறிய படம்.

இதில் **கோ** கடந்த தேர்தலின் போது வெளிவந்து மிகப்பெரும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் தொடர்சியாக இந்த தேர்தலுக்கு கோ 2 வெளிவந்துள்ளது.

### கதைக்களம்

கோ படத்திற்கும் இந்த படத்திற்கும் சம்பந்தமே இல்லை. ஆனால், டைட்டில் வைத்ததற்காகவே சிறகுகள் கட்சி வீழ்ச்சியடைந்து மீண்டும் பிரகாஷ்ராஜ் முதல்வரானார் என்ற வசனம் வருகின்றது. அறிமுக இயக்குநர் சரத் இப்படத்தை இயக்கியுள்ளார்.

பாபி சிம்ஹா படத்தின் ஆரம்பத்திலேயே தமிழகத்தின் முதலமைச்சர் பிரகாஷ்ராஜை கடத்துகிறார். தமிழகமே பதற்றமாக பொலிஸ் படையுடன் பாபி இருக்கும் இடத்தை வந்து சேர்கிறது.

உங்களுக்கு என்ன வேண்டும்? எதற்கு முதலமைச்சரை கடத்தினீர்கள்? என்று கேட்க, பாபி மிகவும் சிறுபிள்ளைத்தனமாக காரணங்களை சொல்கிறார். அது அரசாங்கத்திற்கு சிறுபிள்ளைத்தனமாக இருந்தாலும், பெரிய விடயத்தை சிம்பிளாக பாபி சொல்ல முயற்சிக்கிறார்.

இதை தொடர்ந்து பல திடுக்கிடும் உண்மைகளை பாபி முதலமைச்சரை தன்கட்டுப்பாட்டில்வைத்துவெளிக் கொண்டு வருவதே மீதிக்கதை.


### படத்தை பற்றிய அலசல்

பாபி சிம்ஹா தேசிய விருது நாயகன், அழுத்தமான கதாபாத்திரத்தில் தான் நடிப்பார் என்று எதிர்ப்பார்த்தால் அவரும் கமர்ஷியலுக்குள் குதித்துவிட்டார்.

நாட்டில் நடக்கும் சின்ன சின்ன விடயங்களுக்கும் பெரிய காரணம் இருக்கு என்பதை முதலமைச்சரிடம் விளக்கும் காட்சியில் அப்லாஸ் அள்ளினாலும், ரொமான்ஸ், டூயட் எல்லாம் கொஞ்ச நாளைக்கு வேண்டாம் ப்ரோ.

பிரகாஷ்ராஜ் அவரே மொத்த படத்தையும் தாங்கி நிற்பார் என்று எதிர்ப்பார்த்தால், கொஞ்சம் ஏமாற்றம் தான். இத்தனை பெரிய நடிகரை ஒரு சேரில் உட்கார வைத்து பேச மட்டும் வைத்துவிட்டார்கள். நிக்கி கல்ராணியும் ஒரு ப்ளாஷ் பேக் டூயட், அவ்வப்போது மைக் பிடித்து பேசுகிறார், பெரிதாக நடிக்க வாய்ப்பில்லை.

முதலமைச்சரை கடத்த இவர்கள் போடும் ப்ளான் அதற்கு உதவி செய்யும் பாலசரவணன் என பல லாஜிக் மீறல்கள். அதிலும் பாலா




சொல்லும் ப்ளாஷ்பேக் காட்சிகள் எல்லாம் படத்திற்கு தேவை தானா?.

ஆனால், எது எப்படியோ பல காட்சிகள் பிரபல கட்சிகள் செய்யும் கலாட்டாவை வெளுத்து வாங்கியுள்ளது. இதற்கு எல்லாம் தனி தைரியம் வரவேண்டும், அதற்காக மனம் திறந்து பாராட்டலாம். அதிலும் இளவரசு ஒரு அமைச்சரை நம் கண்முன் கொண்டு வருகிறார்.

படத்தின் ரியல் ஹீரோ இசையமைப்பாளர் லியோன் தாமஸ் தான், பின்னணி பாடல்கள் என அனைத்திலும் கலக்கியுள்ளார். இன்னும் பல படங்கள் பணியாற்ற வாழ்த்துக்கள் சார்.

கோ படத்தில் மக்களின் மொத்த பிரச்சினைக்கும் போராடுவது போல் இருக்கும், இதில் தனிப்பட்ட ஒருவரின் பிரச்சினையை வைத்து மையக்கதையை நகர்த்தியிருப்பது கொஞ்சம் யதார்த்தத்தை விட்டு தள்ளி நிற்கின்றது.

### க்ளாப்ஸ்

வசனம், அரசாங்கத்திற்கு சாட்டையடி அதிலும் தேர்தல் நேரத்தில்.

படத்தின் இசை, இரண்டாம் பாதி, கருணாகரன் முதன் முதலாக காமெடி தவிர்த்து சிறிது நேரம் வந்தாலும் ஈர்க்கிறார்.

இளவரசு வாயிலாகவே அரசாங்கத்தை பற்றிய கிண்டல் கேளிகளை பாபி சிம்ஹா வெளியே கொண்டு வரும் காட்சி. காமெடியை விட அனைவரும் கவனிக்க வேண்டிய இடம்.

### பல்ப்ஸ்

படத்தின் முதல் பாதியில் வரும் தேவையற்ற ப்ளாஷ்பேக் காட்சிகள்.

லாஜிக் மீறல்கள், முதலமைச்சரை கடத்துகிறார் என்று கூறும் போதே அத்தனை சீரியஸான விடயத்தை இன்னும் கொஞ்சம் வேகமாக கொண்டு சென்றிருக்கலாம்.

மொத்தத்தில் இதுவரை சினிமாவில் கூட கேட்க முடியாத சில கேள்விகளை முதன் முறையாக தைரியமாக கேட்டதற்காகவே ஒரு முறை சென்று வரலாம்.

# பென்சில்




**இ**சையமைப்பாளராக இருந்து நடிகராக மாறியுள்ள ஜி.வி.பிரகாஷ், ஸ்ரீதிவ்யாவுடன் இணைந்து நடித்திருக்கும் பென்சில் படம் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

### கதைக்களம்

ஜி.வி.பிரகாஷ் ஒரு பாடசாலையில் பன்னிரண்டாம் வகுப்பு படித்து வருகிறார், படிப்பில் சிறந்து விளங்கும் ஜி.வி அவர் வகுப்பில் படிக்கும் ஸ்ரீ திவ்யாவை இரகசியமாக காதலித்து வருகிறார்.

இதனிடையில், ஜி.வி.பிரகாஷ் வகுப்பில் ஹாசன் சேர்கிறார். ஹாசன் வகுப்பு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும் தலைவலியாக திகழ்கிறார்.

திடீரென ஒரு நாள் ஹாசன் பாடசாலையில் மர்மமான முறையில் உயிரிழந்து சடலமாக கிடக்கிறார். பின்னர், ஹாசன் கொலைக்கு காரணம் யார் என்பதையும், அதற்கான காரணம் என்ன என்பதை ஜி.வி.பிரகாஷூம் ஸ்ரீதிவ்யாவும் இணைந்து




கண்டுபிடிக்க முடிவு செய்கின்றனர்.

அவர்கள், இந்த மர்மக் கொலை பற்றி எப்படி விசாரணை நடத்தி உண்மையை வெளி உலகிற்கு தெரியப்படுத்துகின்றனர் என்பது மீதிக் கதை.

### க்ளாப்ஸ்

படத்தின் இறுதி வரை சஸ்பென்ஸ் நீடிப்பது சிறப்பு. படத்தின் திரைக்கதை படத்திற்கு மாபெரும் வலுச் சேர்த்துள்ளது. ஜி.வி.பிரகாஷ் அவரது சிறப்பான நடிப்பை வெளிப் படுத்தியுள்ளார். படத்தில் க்ளைமாக்ஸ் டிவிஸ்ட் அற்புதம்.

### பல்ப்ஸ்

அனைத்து மர்மமான காட்சிகளும் பாடசாலை வளாகத்திலே நடப்பது ஒரு லாஜிக் இல்லாத தன்மையை உண்டாக்குகிறது ,

பாடல்கள் படத்தின் கதை ஓட்டத்திற்கு இடையூறாக இருக்கிறது.

மொத்தத்தில் பாடசாலையை மையமாக கொண்டு, அதில் திகிலூட்டும் பல கமர்சியல் யுக்தியை ஓரளவுக்கு உபயோகித்து 2 மணி நேரம் போர் அடிக்காமல் கொண்டு சென்றுள்ளார் இயக்குநர் மணி நாகராஜ் .

# ராஜீவ்காந்தி கொலை

## நேரடி சாட்சி உயிரோடு!



ஹரிபாபு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்டன. படுகொலைக்குக் காரணமானவர்கள் என சி.பி.ஐ யால் சொல்லப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ராபர்ட் பயஸ், ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் தங்களது விடுதலையை எதிர்நோக்கிக் காத்துக் கிடக்கிறார்கள்.

ராஜீவ் காந்தி படுகொலையின் மிக முக்கிய ஆவணம்என ஜெயின், வர்மா கமிஷன் விசாரணைகளில் குறிப்பிடப்பட்டது சம்பவ இடத்தில் போட்டோகிராபர் ஹரிபாபு எடுத்த புகைப்படங்களைத் தான்.

சர்வதேச அரங்கையும் இந்தப் புகைப்படங்கள் உலுக்கியது. "ஸ்ரீபெரும்புதூர் குண்டுவெடிப்பில் ஹரிபாபு இறந்துவிட்டாலும், அவர் எடுத்த புகைப்படங்களால் தான் குற்றவாளிகளை நெருங்க முடிந்தது" என பெருமைப்பட்டுக் கொண்டார் சி.பி.ஐ. இயக்குநராக இருந்த கார்த்திகேயன்.

இந்நிலையில், போட்டோகிராபர் ஹரிபாபு இறந்துவிட்டார் என அதிகாரிகள் சொல்வது சுத்தப் பொய். அவர் உயிரோடுதான் இருக்கிறார். அவரை வேண்டுமென்றே அதிகாரிகள் தப்ப வைத்தார்கள்.

சம்பவ இடத்தில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டது அவருடைய கமராவும் அல்ல. அத்தனையும் நாடகம் என அதிர வைக்கிறார்கள் இரண்டு மருத்துவர்கள். தடய அறிவியல் ஆய்வு அறிக்கை, ஹரிபாபுவின் போஸ்ட் மார்ட்டம் அறிக்கை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் ஆவணங்கள் என எட்டு ஆண்டுகளாக இதற்காகப் பயணித்து, பல புது தகவல்களைக் கண்டறிந்திருக்கிறார்கள்.

எதிர்வரும் மே 21 ஆம் திகதி ராஜீவகாந்தி படுகொலை தினத்தன்று "பைபாஸ்" என்ற தலைபபில், ஆவணப்படத்தை வெளியிட இருக்கிறார்கள். கோவையைச் சேர்ந்த மருத்துவர் ரமேஷ் மற்றும் கல்பாக்கம் மருத்துவர் புகழேந்தி ஆகிய இருவரும் தான், ஹரிபாபுவை நோக்கிக் காய்களை நகர்த்தியவர்கள்.

**கல்பாக்கம் மருத்துவர் புகழேந்தியிடம் பேசினோம்...**

**ஹரிபாபுவை நோக்கிப் பயணிக்கும் யோசனை எப்படித் தோன்றியது?**

எங்களுக்குத்தொடக்கம்முதலே ராஜீவ்காந்தி படுகொலையின் தடய அறிவியல் அறிக்கை, போஸ்ட் மார்ட்டம் உள்ளிட்ட பல விடயங்களில் சந்தேகம் இருந்தன. கோவையைச் சேர்ந்த என்னுடைய நண்பர் மருத்துவர் ரமேஷ், படுகொலை வழக்கின் ஆவணங்களைத் தேடும் முயற்சியில் இறங்கினார். ஜெயின் கமிஷன், வர்மா கமிஷன் ஆகிய இரண்டிலும், "குற்றத்தைப் பற்றிய விடை தெரிவதற்கு மிக முக்கியமான காரணம், ஹரிபாபு எடுத்த கமராவும் படங்களும்தான் முழு வழக்கையும் முடிவுக்குக் கொண்டுவந்தது" என்றது.

எங்களுடைய கேள்வியெல்லாம், "ஹரிபாபு இறந்துவிட்டார். ஆனால், அவருடைய கமரா மட்டும் எப்படி பாதிப்படையாமல் போனது?" என்பதுதான். "தாமரை பூ வடிவில் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது" என்கிறது புலனாய்வு அறிக்கை. அப்படி வெடிக்கும் போது கமரா பாதிப்படையாமல் இருக்காது என சந்தேகப்பட்டோம். அப்போது எங்களுடைய சந்தேகங்களுக்கு விடை கிடைகக வில்லை. இதுதொடர்பான ஆவணங்களைப் பெறுவதற்கே மிகவும் கஷ்டப்பட்டோம்.





2008 ஆம் ஆண்டு ராஜீவ் படுகொலை வழக்கைக் கையாண்ட தடய அறிவியல் துறை பேராசிரியர் சந்திரசேகர், "ஃபர்ஸ்ட் ஹியூமன் பாம்" என்ற புத்தகத்தை எழுதினார். அதில் பல கேள்விகளுக்கு விடை கிடைத்தன. "கமரா எப்படி பாதிப்படையாமல் கிடைத்தது?" என்ற கேள்விக்கு பதில் சொல்லும் சந்திரசேகர், "பூகம்பம் நடக்கும்போது அதிர்ஷ்டவசமாக சிலர் இடிபாடுகளுக்கு நடுவிலும் பாதுகாப்பாக வெளிவந்திருக்கிறார்கள். அதைப் போலத் தான் கமராவும் கிடைத்தது" என்கிறார்.

ஆனால், "கிரைம் சீன் இன்வெஸ்டிகேஷன்களில் இது போன்ற உவமைகள் எடுபடாது, சம்பவ இடத்தின் நிலவரத்தைப் பொறுத்து அறிவியல் ரீதியாகப் பேச வேண்டும்" என அமெரிக்கா வன்டாபெர்ட் வழக்கின் புலனாய்வு வழிமுறைகள் சொல்கிறது.

டாபெர்ட் வழக்கின் புலனாய்வு முறைகளைச்சரியாகக் கையாண்டிருந்தால், இந்த வழக்கின் போக்கே திசைமாறியிருக்கும். அப்படி எதையும் புலனாய்வுத் துறை செய்யவில்லை. நாங்கள் டாபெர்ட் நடைமுறைகளைக் கையாண்டு விசாரணையைத் தொடங்கினோம்.

**ஹரிபாபு சாகவில்லை என்பதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?**

"ஹரிபாபுவின் போஸ்ட் மார்ட்டம் அறிக்கையைத் தேடினோம். அந்த அறிக்கையில், "இறந்த நபருக்கு சுன்னத் செய்யப்பட்டிருக்கிறது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. "வன்னிய சமூகத்தைச் சேர்ந்த ஹரிபாபு எப்படி சுன்னத் செய்வார்?" தவிர, "அந்த சடலத்தின் வயது-30" என்கிறார்கள். ஹரிபாபுவுக்கு 22 வயதுதான் ஆகிறது. ராஜீவ் காந்தியை படம் எடுக்கும்போது, அவர் நடந்து வரும் கார்பெட்டின் இடதுபக்க மூலையில் இருந்திருக்கிறார் ஹரிபாபு. அங்கிருந்துதான் போட்டோ எடுத்தார். ஆனால், அவரது உடலை வலது பக்கம் இருந்து எடுத்ததாகச் சொல்கிறார்கள். குண்டு வெடித்தாலும் உடல் வலது பக்கம் வந்து விழுவதற்கு வாய்ப்பே இல்லை.

"உங்கள் மகனின் உடல் இது" என பொலிஸார் சொன்னதைக் கேட்டு, அவரது அப்பா சுந்தரமணி உடலைக் கையெழுத்து போட்டு வாங்கியிருக்கிறார். "சடலத்தை எரிக்கக் கூடாது, புதைக்க வேண்டும்" எனப் பொலிஸார் கூறியிருக்கிறார்கள். ஆனாலும், ஹரிபாபு குடும்பத்தினர் அன்றைக்கே உடலை எரித்துவிட்டார்கள். வைத்தியர்கள் அந்த சடலததில் இருந்து தலையை வெட்டி எடுத்திருக்கிறார்கள். அவர் முகம் முற்றிலும் சிதைந்துவிட்டது எனச் சொல்கிறார்கள். சடலத்தில் இருந்து கை ரேகை மட்டும் எடுதத வர்கள், டி.என்.ஏ சாம்பிள் எடுக்கவில்லை. வைத்தியர்களும், ஏன சுன்னத் செய்யப்பட்டிருக்கிறது?" எனவும் கேள்வி எழுப்பவில்லை.

ஹரிபாபுவின் அக்கா விஜய ரேவதி சொல்லும்போது, "கிரீம் கலர் சட்டை அணிந்திருந்தான்" என்கிறார். ஆனால்,பொலிஸோ, "பச்சை கலர் முழுக்கை சட்டை" எனச் சொல்கிறார்கள். இதையெல்லாம் யாரும் கேள்வி எழுப்பவில்லை.

**அப்படியானால், பொலிஸார் காட்டும்சடலம யாருடையது?**

"அதற்கும் எங்களுக்கு விடை கிடைத்தது. ஸ்ரீபெரும்புதூரில் சுலைமான் சேட் என்று ஒருவர் இருக்கிறார். அவர்தான் ராஜீவ் காந்தி நடந்து வரும்போது பூ தூவுவதற்காக இருவரை ஏற்பாடு செய்திருந்தார். அவர்கள் இருவரும் முஸ்லிம்கள். கண்டிப்பாக இந்த இருவரில் ஒருவரைத் தான் ஹரிபாபு எனக் காட்டியிருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. இரண்டு பூக்கூடைகள் சம்பவ இடத்தில் இருநதன என புலனாய்வு அறிக்கை சொல்கிறது. சுப்பிரமணியன் சுவாமியும் இரண்டு பூக்கூடை இருந்ததாகச் சொல்கிறார்"

**இந்த விவகாரத்தில் தவறு செய்தது யார்?**

"கிரைம் சீன் இன்வெஸ்டிகேசன் என்பதே இந்த வழக்கில் முற்றிலும் மீறப்பட்டிருக்கிறது. முன்னுக்குப்பின் முரணான தகவல்களைச் சொல்கிறார் தடய அறிவியல் பேராசிரியர் சந்திரசேகர். சம்பவ இடத்திற்கு மறுநாள் முற்பகல் 11 மணிக்குப் போனதாகச் சொல்லியிருக்கிறார்.

ஆனால், கே.ராமசுந்தரம் என்ற ஃப்ரீலான்ஸ் நிருபர், தன்னுடைய பிளாக்கில், "மே 22ஆம திகதி எனக்குப் பேட்டி கொடுத்தார் சந்திரசேகர். ராஜீவ்காந்தியின் ஷூ, மனித வெடிகுண்டு தனுவின் தலையில் இருந்த கனகாம்பரம், பச்சை கலர் சல்வார், ஒரேஞ்ச கலர் பாட்டம், வெடிகுண்டுக்கு பயன்படுத்திய சுவிட்ச் ஆகியவற்றைக் காட்டினார் சந்திரசேகர். நான் அதை வீடியோ எடுத்தேன். சம்பவ இடத்திற்கு முதல்நாள் இரவே சந்திரசேகர் போய்விட்டார்" என எழுதியுள்ளார். இந்த வீடியோப் பதிவுகள் லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் மற்றும் கனடாவின் டொரண்டோ ஸ்டார் ஆகியவற்றில் வெளியானது"

**இப்படிச் செய்ய வேண்டிய அவசியம் என்ன?**

"இந்த வழக்கின் மிக முக்கியமான கேள்வி இது. சம்பவ இடத்தில் இருந்து காயத்தோடு ஹரிபாபுவை மீட்டவர்கள், அவரைத் தப்பியோட வைத்துவிட்டார்கள். இதற்குப் பின்னால் ஏராளமான மர்மங்கள் இருக்கின்றன"

**அப்படியானால், ஹரிபாபு இப்போது எங்கே இருக்கிறார்?**

"அவர் இப்போது பக்கத்து மாநிலம் ஒன்றில் சாமியார் வேடத்தில் இருக்கிறார். அவரைத் தப்பவிட்டது யார்? என்பது உள்ளிட்ட பல கேள்விகளுக்கு அவரிடம் விடை இருக்கிறது. அவரது குடும்பத்தினர் சென்னையில் குடியிருந்தார்கள். இப்போது வேறு இடத்திற்குப் போய்விட்டார்கள்"

**ஆவணப்படம் எப்போது வெளியாகும்?**

"ராஜீவ்காந்தி படுகொலை தினத்தன்று வெளியிடத் திட்டமிட்டிருக்கிறோம். தவறான நீதியால் ஏற்பட்ட விளைவுகளைச் சொல்லும் சிலப்பதிகாரக் கதை நடந்த பகுதிகளில் படப்பிடிப்பை நடத்தியிருக்கிறோம். ஒரு மணி நேரம் ஓடக் கூடிய படம் இது. வழக்கின் பல மர்மங்களை அவிழ்க்கும் மிக முக்கியமான ஆவணப்படமாகவும் இது இருக்கும்!" என விரிவாகப் பேசி முடித்தார் வைத்தியர் புகழேந்தி.

ராஜீவ்காந்தி படுகொலை வழக்கு பற்றிய விவாதம் வரும் போதெல்லாம், "உண்மைக் குற்றவாளிகள் அரசு பதவிகளில் அமர்ந்து கொண்டு உலா வருகிறார்கள். தவறே செய்யாதவர்கள்இளமையைத்தொலைத்துவிட்டு, நோயோடு சிறைகளில் வாடுகிறார்கள்"என்பார்கள். அது உண்மைதானோ!?

**- ஜூனியர் விகடன்**

# facebook

## காதல் (கொன்று) விடு

நேரமாயிடிச்சிடி நான் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு வேகமாய் வீட்டுக்கு போய்க் கொண்டிருந்தாள் நித்யா.

என்னடி ஒரு நாள் நம்ம டீம் கூட டின்னர் சாப்பிட்டு போகக் கூடாதா? என்று இடைமறித்தாள் தோழி.

"இல்லடி அப்பா எனக்காக சாப்பிடாம இருப்பார். நாங்க ரெண்டு பெரும எப்பவுமே ஒன்றாக இருந்து தான சாப்பிடுவோம். அது எங்க ரெண்டுபேருக்குமே பழகிடிச்சி என்று சொன்னாள் நித்யா.

அப்போ அவளுக்கு வாட்சப் மணி அடித்தது.

பாருடி இந்த மெசேஜ் கூட என் அப்பா கிட்ட இருந்து தான் வந்திருக்கும் என்று சொன்னாள் நித்யா.

நித்யா சொல்லி வைத்தது மாதிரி அப்பாவின் மெசேஜ் தான். அம்மாடி ஒபிஸ்ல இருந்து போட்டியா? என்று வோய்ஸ் மெசேஜ் கேட்டது.

போயிட்டேன்ம்பா" என்று நித்யாவும்வோய்ஸ்மெசேஜ் அனுப்பினாள்.

சொன்னேன்ல... பார்த்தியா. சரி நான் போகிறேன். நீங்க என்ஜோய் பண்ணுங்க என்று சொல்லிவிட்டு விர்ரென்று வீட்டுக்குப் போக புறப்பட்டாள் நித்யா.

நித்யாவின் அம்மா நித்யாவுடைய சிறு வயதிலேயே நோய்வாய்ப் பட்டு இறந்து விட்டார். ஆனால் அந்த குறை சிறிதும் தெரியாமல் வளர்த்தார் நித்யாவோட அப்பா பாலகுமார். நித்யாவுடைய அப்பாவுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. நித்யா தான் அவருக்கு டச் போன் வாங்கி கொடுதது அதில் வாட்சப் இன்ஸ்டோல் செய்து அதில் எப்படி வோய்ஸ் மெசேஜ் அனுபபனும் என்று மட்டும் சொல்லி கொடுத்திருந்தாள். அதனால் எப்பவும் நித்யாவும் அவளுடைய அப்பாவும் வோய்ஸ மெசேஜ் தான் அனுப்பிப்பார்கள்.

நித்யாவுடைய டீமுக்கு புதியதாய் ஒரு டீம் லீட் சேர்ந்தான். அவனுடைய அழகும், பேச்சும், திறமையும் இவளை பெரியதாய் கவர்ந்தது. அவனுக்கும் இவள் மேல் ஒரு ஈர்ப்பு இருந்ததால் இவர்கள் இருவரும் விரைவில் காதலில் விழுந்தார்கள்.

அவனுக்காக ஒபிசிலேயே அதிக நேரம் உட்கார்ந்து செலவழிக்க தொடங்கினாள் நித்யா.

வீட்டுக்கு சென்றாலும் அவளுடைய றூமுக்குள் சென்று கதவை அடைத்துக கொண்டு போனிலே செலவழிக்க தொடங்கினாள் நித்யா.

அதனால் அப்பாவுக்கும் இவளுக்குமான இடைவெளி கொஞ்சம் கொஞ்சம் பெரியதாய் ஆனது.

வழக்கம் போல அன்றைக்கும் தாமதமாய் வீட்டுக்கு வந்தாள் நித்யா. அவளுக்காக பாலகுமார் தூங்காமல் காத்துக் கொண்டிருந்தார்.

அம்மாடி அப்பா உன்கிட்ட கொஞ்சம் பேசணும் என்று சொன்னார் பாலகுமார்.

"என்னப்பா என்கிட்ட போய் இப்படியெல்லாம் கேக்குறீங்க" என்று சொன்னாள் நித்யா.

இல்லம்மா நீ கொஞ்சம் பெரிய பொண்ணாயிட்டா போல தோன்றிச்சு. அதான் கேட்டேன் என்றார் அப்பா.

நித்யா அப்பா அருகில் வந்து

அப்படியெல்லாம் இல்லப்பா. எப்பவுமே நான் சின்ன குழந்தை தான் உங்களுக்கு. சொல்லுங்கப்பா ஏதோ சொல்லனும்னு சொன்னீங்க.

இல்லம்மா. இப்பயெல்லாம் நீ அப்பாகூட உட்கார்ந்து சாப்பிடுறது இல்ல. சரியா பேசுறது இல்ல. அப்பயெல்லாம் அப்பா கூட வந்து பேசுவ, விளையாடுவ அதெல்லாம் இப்ப இல்ல. நீ எப்பவுமே அப்பா மடியில கொஞ்ச நேரம் தூங்குவ. இப்பவெல்லாம் வந்ததும் றூமுக்கு போயிடுற. எப்பவுமே போனிலேயே இருக்கிறாய. நீ வேலை விசயமா அதிகம் உழைக்கிறாயென்று விட்டுட்டேம்மா. ஆனா அப்பா அநாதையாய் ஆகிட்டேன் போல தோன்றிச்சும்மா. அப்பா மடி உன் தலைக்காக ஏங்குதம்மா என்று அப்பா கண்களில் லேசான கண்ணீரோடு வெள்ளந்தியாய் சொன்னார்.

அப்பாவின் பேச்சைக் கேட்டு ஆடிப் போய்விட்டாள் நித்யா. நித்யாவின் கண களிலும் லேசாய் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"அப்படியெல்லாம் இல்லைப்பா. கொஞ்சம் வேலை அதிகமா இருந்ததப்பா. அதான் அப்படி நடந்திச்சு" என்று பொய் சொல்லிவிட்டு "இனிமேல நடக்காம பார்த்துக்குறேன்ம்பா" என்று வாக்குக் கொடுத்தாள்.

அவர் கண்ணை துடைத்துக் கொண்டே சரி சரிம்மா... அப்பாவும் அதைத்தான் நினைச்சேன். இருந்தாலும் மனசுல பட்டதை சொல்லிடணும்னு சொன்னேம்மா. அப்பாவ தப்பா நினைக்கலையே என்றார் லேசாய் புன்னகையுடன் பாலகுமார்.

சேச்...சேச்.... அதெல்லாம் ஏதும் நினைக்கலப்பா" என்றாள் நித்யா.

கொஞ்ச நேரம் அப்பாவின் மடியில் படுத்துவிட்டு அவனுடன் பேச அவளுடைய றூமுக்குள் சென்று விட்டாள் நித்யா. பாலகுமார் நடந்ததையெல்லாம் யோசித்துக்கொண்டே இருந்ததால் அவருக்கு சோகம் அதிகமாகி நெஞ்சை அடைப்பது போல் ஒரு வலி ஏற்பட்டது.

பாலகுமாருக்கு புரிந்தது தனக்கு ஏதோ நேரப் போவதாய். வலி அதிகமாகிக்கொண்டே இருந்ததால் அவரால் நடக்க முடியாமல் கீழே விழுந்து விட்டார்.

தன் மகளை கத்திக்கத்தி கூப்பிட்டார். அவள் கதவை அடைத்துக் கொண்டு போனில் பேசிக்கொண்டி



ருந்ததால் இவருடைய கத்தல் அவளுக்கு சரியாய் கேக்கவில்லை.

அவர்சட்டை பொக்கெட்டில்மொபைல இருந்ததால் அவளுடைய தொலைபேசிக்கு அழைத்தார். அழைப்பு வெயிட்டிங்கிலிலேயே சென்றது. அவள் ஆர்வமாய் பேசியதாலோ எனனவோ அப்பாவின் அழைப்பை கவனிக்கவில்லை. அப்பாவுக்கு புரிந்து விட்டது தன கக்கு ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று.

உடனே வாட்சப்பை எடுத்தார். ஏதோ ரெகோர்ட் பண்ணி தன் மகளுககு அனுப்பிவிட்டு மயக்கமடைந்தார்.

சில நிமிடங்கள் கழித்து போனை வைத்துவிட்டு பார்க்கும்போது அப்பாவிடம் இருந்து போன்வந்ததை அப்போது தான் பார்க்க நேரிட்டது. ஏன்..? இவர் இந்த நேரத்தில போன் செய்தார் என்ற குழப்பத்துடனே றூமை விட்டு வெளியே வந்தாள்.

அப்பா ஹோலில் மயக்கமடைந்த சூழ்நிலையில் இருந்தார். பதறியபடி ஓடி வந்து அப்பாவை எழுப்பினாள் நித்யா. அவர் எழுந்திருக்கவில்லை. தண்ணி தெளிச்சும் அவர் எழுந்திருக்கவில்லை. உடனே அம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றாள் நித்யா. வைத்தியசாலையில் பரிசோதித்த டாக்டர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். அதிர்ச்சியில உறைந்ததால் அவளுக்கு அழுகையே வரவில்லை. அவர் இறந்ததற்கு காரணம அவர் சரியாக உணவு சாப்பிடாததும் மாத்திரையை உட்கொள்ளாததும் என்று தெரிவித்தார் டாக்டர்.

ஈமக் கடமைகளை முடித்து விட்டு ஒவ்வொருத்தராய் வீட்டில் இருந்து சென்று விட்டார்கள். தற்போது வீடே வெறுமையில் சூழ்ந்து இருந்தது.

தன் தொலைபேசியை பார்க்க இரண்டு நாட்களுக்கு பிறகு தான் அவளுக்கு நேரம் கிடைத்தது.

எடுத்து பார்க்கும்போது அப்பாவிடம் இருந்து ஒரு வாட்சப் ரெகோர்ட் மெசேஜ் இருந்தது.

அதில் "அம்மா நான் போறேம்மா. அப்பா திரும்பி வரமுடியாத இடத்துக்கு போறேமமா. வேள வேளைக்கு சாப்பிடு. வீட்டுக்கு நேரத்தோட வந்திடு. அப்பா ஏதோதோ இன்சூரன்ஸ் போட்டு வசசிருக்கேன். அதெல்லாம் கேட்டு வாங்கி உன் கல்யாணத்துக்கு வச்சுக் கோம்மா. நல்ல பையனா..." என்று தொடங்கும் போது வாட்சப் ரெகோர்டரகட் ஆகி விட்டது.

"நான் காதலை விட்டுட்டேனப்பா. நீங்க திரும்பவும் வாங்க" என்று அநத ரெகோட்டுக்கு பதில் சொல்லி கதறி அழுதாள். "என் காதலை வச்சு உங்களை கொன்றுட்டேனப்பா. நீங்க வந்திடுங்கப்பா. வாங்கப்பா... நீங்க வந்திடுங்கப்பா..." என்று கதறினாள்.

ஆனால் இறந்தவர்கள் திரும்ப வரப்போவதில்லை என்று அவளுக்கு தெரிந்தும் அவள் மனம் அதை உணர மறுத்துக் கொண்டிருந்தது. அவளுடைய அழும் குரல் அந்த வீடு முழுவதும் ஒலித்துக்கொண்டே இருந்தது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 721

காமாச்சி





மது



அச்சு




கொக்குவில் போஸ்



மாணிக்கவாசகர் கஜிந்




ராகுலன் பாலா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 33

## அநாவசியக் கட்டுப்பாடுகள் ஆரோக்கியத்தை பாதிக்கும்

பகுதி–5

ஒருவருக்கு உயர்குருதி அமுக்கமோ அல்லது நீரிழிவு நிலையோ ஏற்பட்டு விட்டால் அவருக்கு பால், முட்டை என்பன கொடுக்கக் கூடாது என்று அவர் மீது சமூகத்தினால் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. அத்துடன் இவை ஆபத்தான உணவு வகைகள் எனக் கூறி அவர் பயமுறுத்தப்படுகிறார்.

இதனால் அவர் "நான் பயந்து பால், முட்டை என்பன உண்பதில்லை" என சொல்லத் தலைப்படுகிறார். இந்த உன்னதமான நிறை உணவுவகைகளை அவர் தவிர்த்து விடுவதால் அவரின் உடல் நிலை மேலும் பலவீனம் அடைகிறது.

நாம் எமது நாளாந்த வாழ்விலும் "இங்கே குப்பை போட வேண்டாம்" " இங்கே துப்ப வேண்டாம்", "இங்கே சிறுநீர் கழிக்க வேண்டாம்", "அழ வேண்டாம்", "சத்தமிட்டு சிரிக்க வேண்டாம்" , "உப்பு, இனிப்பு, உறைப்பு, புளிப்பு எதுவுமே வேண்டாம்" என பற்பல கட்டுப்பாடுகளால் கட்டுண்டு கிடக்கிறோம் என்பது வேதனையானதே.

குப்பைத் தொட்டி ஒன்றை வைத்து "இங்கே குப்பை போடவும்" என அறிவுறுத்துவது கூடிய பயனைத் தரும். அதேபோல அருகில் எங்கே மலசலகூடம் இருக்கிறது என்பதை எழுதி வைப்பது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

நடைமுறைப்படுத்த முடியாத அல்லது நடைமுறைப்படுத்துவது, கடினமான கட்டுப்பாடுகளை விதிப்பது எதிர்மறையான விளைவுகளை தோற்றிவிக்கலாம். ஒருவர் வாழும் காலம் நீண்டதாக இருக்க வேண்டும் என்று சிந்திப்பது எவ்வளவு முக்கியமானதோ அதேயளவு முக்கியத்துவம் அவர் எவ்வளவு மகிழ்ச்சியாக, திருப்தியாக, நிறைவாக வாழ்கிறார் என்பதற்கும் கொடுக்கப்பட வேண்டும். அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் ஒருவரின் வாழ்க்கைத் தராதரத்தை பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"கிரந்தி உணவுகள் கூடாது, குளிர் உணவுகள் ஆபத்தானவை, இரவில் இலைவகைகள் உண்ணுவதை தவிர்க்க வேண்டும், சூடான உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும்" இதுபோன்ற கட்டுப்பாடுகளும் மனிதன் சுதந்திரமாக, ஆரோக்கியமாக உண்ணுவதில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி நிற்கின்றன. ஒருவருக்கு ஒரு வகையான உணவு ஒத்துக் கொள்ளுமாயின் ஒரு ஒவ்வாமை விளைவுகளும் ஏற்படாதவிடத்து அந்த உணவு வகைகளை அவர் உண்ண முடியும். அநாவசியமான உணவு வகைகளை வகைப்படுத்தி தவிர்த்து விடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஆரோக்கியமற்ற உணவு வகைகளை குறைத்துக் கொள்வது நல்லது.

தொடரும்...

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

## நோயையும் நோவையும் தவிர்த்துக்கொள்வது எப்படி?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" இது நம் முன்னோர் மொழிந்து சென்ற நல்வாக்கு. இந்த நோயினால் "நோவும்" நோவினால் **(Pain)** நோயும் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. நோ/வலி என்றால் பல உணர்வுகளால் உடற்றொழிலியலால் கலக்கப்பட்ட விரும்பத்தகாத ஒரு உணர்வே ஆகும். இது பல வடிவங்களால் இணைந்து உருவாக்கப்பட்டது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் வலி / நோ அனுபவிக்கப்பட்டிருக்கும். இது பலமுறை, சில முறை உணரப்பட்டிருக்கலாம். இது பல வகைப்படும். அத்துடன் இதன் உணரும் தன்மையும் **(Degree)** மாறுபடலாம்.

### நோவின் தன்மை / இயல்பு :-

- ஒவ்வொருவராலும் உணரப்படக்கூடியது.
- ஒருவருடைய நோவை இன்னொருவரால் உணரமுடியாது.
- ஒருவரின் அனுபவத்தால் **(Experience)**, தாங்கும் இயல்பால் **(tolerance)** இதன் விளைவுகள் வெளிக்காட்டப்படும்.
- இந்த நோ ஒரு வகையில் உடற்றொழிலியலில் ஏற்படும் வேண்டாத மாற்றத்தை முற்காட்டும் அறிகுறி அல்லது எச்சரிக்கை சமிக்ஞை ஆகும்.

### நோவின் கூறுகள் / அடங்குபவை

*இதனுள் ஐந்து பிரிவுகள் உண்டு*

1. நோவினால் ஏற்படும் மன எழுச்சி **(Emotion)**
2. நோவினால் ஏற்படும் நடத்தை மாற்றம் - **(Behavioural)**
3. நோ பற்றிய நம்பிக்கை, நடத்தை, மதிப்பிடும் தன்மை அதன் விளைவுகள்.
4. நோ எவ்வாறு உணரப்பட்டு மூளைக்கு / மைய நரம்பு தொகுதிக்கு கடத்தப்படுகிறது.
5. நோவால் உடலில் ஏற்படும் மாற்றம்.

### நோவால் உடற்றொழிலில் ஏற்படும் செய்முறை (Pain Process)

*இது மூன்று படிநிலைகளைக் கொண்டது. அவையாவன,*

1. ஏற்றல்
2. உணரல்
3. விளைவு ஏற்படல்

### நோவை பாதிக்கும் காரணிகள்

i. நிலைமை / **Situation** - தனிமையில், வைத்திய சாலையில், நண்பர்கள் மத்தியில், குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில்

ii. கலாசாரம் / **Culture** - சிறுமி, சிறுவன், இளவயதினர், முதியோர்

iii. வயது / **Age** - சிறுவர் / வயதானோர் / முதியவர்

iv. பால் **Sex** - ஆண்கள் / பெண்கள்

### நோவின் அர்த்தம்

நோவின் தாக்கம் / விளைவு ஒருவரில் ஏதாவது ஒரு வகையில் வெளிக்காட்டப்படும். அதனால் போலும் எம் முன்னோரின் வாக்கு ஒன்று உண்டு. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று. இந்த வகையில் இது பின்வரும் காரணிகளால் உணரப்படலாம். அவையாவன: பயம், இழப்பு, தண்டனை, எதிர்நோக்கல் போன்றனவாகும். உதாரணமாக பெண் ஒருவருக்கு குழந்தை பிறக்கும் போதுள்ள நோவும் பெண் ஒருவரின் வயிற்றை சத்திர சிகிச்சையின் போது ஏற்படும் நோவும் வேறுபடும். நோவானது உடலியல், உளவியல் சார்ந்த கலவையாலானது.

நோவின் அர்த்தத்தைப் பாதிக்கும் காரணிகளாவன,

I. பயம் / **Anxiety** பயம் அதிகமுள்ளவர்களினால் நோவும் அதிகளவாக உணரப்படும். உளவியல் ரீதியாக சமான நிலையில் இருப்பவர்களுக்கு நோவை தாங்கும் சக்தி **(Tolerance)** அதிகமாக இருப்பதால் நோ உணரப்படும் அளவும் குறைவு.

II. களைப்பு /**Fatigue** :- களைப்பான நேரத்தில் நோ உணரப்படும் அளவு அதிகமாக காணப்படும்.

III. கவனம் / **Attention** :- ஒருவருக்கு கிடைக்கும் கவனத்திற்கு ஏற்ப நோவின் தீவிரமும் அதிகமாகும்.

IV. முன் அனுபவம் / **Previous Experience** :-ஒவ்வொருவருக்கும் நோ பொதுவானது. ஒரு தடவை ஏற்பட்ட நோவின் அனுபவமானது அடுத்த தடவை ஏற்படும் போது தீவிரம் குறைவாக உணரப்படும்.

V. சமாளிக்கும் ஆற்றல் :- ஒருவர் நோவை எதிர்கொள்ளும் விதம், அதனை தாங்கும் சக்தி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தீவிரம் உணரப்படும்.

VI. குடும்ப சமூக ஆதரவு :- பெற்றோர் , குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் குறிப்பிட்டவர்களின் (நண்பர்) ஆதரவு, உதவி என்பன நோவின் தீவிரத்தை மாற்றக்கூடியது.

### நோவின் வகை / Types Of Pain

பலவிதமான அடிப்படை காரணிகளைக் கொண்டு நோவை வகைப்படுத்தலாம். அவற்றுள் அடங்குபவையான.

- ஆரம்பிக்கும் விதம் - சத்திர சிகிச்சைக்கு பின்
- காலம் - திடீரென / நாற்பட்ட
- தீவிரம்
- கடத்தும் விதம்
- இடம்
- காரணம் - நரம்பு பாதிப்பால் / உளவியல் ரீதியாக
- காரணத்தை உண்டாக்கும் விசை - தானாக ஏற்பட்டதா? வேறுகாரணிகளால்

### நோய் காரணமாக ஒருவரில் ஏற்படும் மாற்றங்கள் :-

I. பயம்
II. அறிவில் குறைவுபடல்
III. போசணை நிலை மாறுபடும்
IV. உடலில் மாற்றம்
V. மலச்சிக்கல்
VI. உடலசைவு குறைவுபடும்
VII. குடும்பத்தவருடன் சமாளிக்கும் இயல்பு குறையும்
VIII. தன்னைத்தானே சமாளிக்க முடியாமை
IX. வலுவற்ற தன்மை
X. குடும்ப செயன்முறை மாறுபடும்
XI. தம் வகிபாகங்களில் மாற்றம்

- களைப்பு
- தன்னைத்தான் கவனியாமை
- பயம்
- பாலியல் மாற்றம்
- மனக்குறை / மனத்தாங்கலிற்குட்படல்
- நித்திரையில் மாற்றம்
- சமூக தனிமைப்பாடு
- சிந்தனை மாற்றம்

### நோவிலிருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகள். அடிப்படையாக இரண்டு வகைப்படும்.

1. உடலை துளைக்காத / மருந்துகள் பயன்படுத்தப் படாத முறை

இம்முறை அதிகளவு நோவை கையாள / பராமரிக்க பயன்படுத்தப்படுகிறது. இவற்றுள் அடங்குபவை.

a) நம்பகத்தன்மையான சிகிச்சைக்குரிய உறவு முறை - இங்கு வலியுடன் இருப்பவரின் உளநிலைக்கு ஏற்ப அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமான முறையில் அவருடன் பராமரிப்பில் அவரையும் இணைத்துக் கொள்ளல்.

b) பயத்தை போக்கல்

இதனை எப்படி செய்யலாம்? அருகில் நிற்றல் / இருத்தல்

-உணர்வை பயத்தை கதைக்க அனுமதியளித்து அவரால் அதை வெளிப்படுத்துவதை செவிமடுத்தல்.

-தொடர்பாடலின் போது விருப்புடன் அவர் கூறுவதை கேட்டல்.

-நோவைக் குறைக்கும் வழிகளை விளக்கிக் கூறல்.

உ+ம் -தியானம், நல்ல தொடுகை, தடவி விடல், குளிரூட்டல்

c) நோவின் மீதுள்ள கவனத்தை இன்னொரு திசைக்கு மாற்றுதல்

தியானம், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்,பயனுள்ள கலந்துரையாடல், கை வேலை செய்தல் போன்றன செய்யலாம்.

d) உடலியல் பராமரிப்பு வழங்கல் - மசாஜ், குளிர், சூடு ஒத்தணம், சிறிதளவு அழுத்தம் கொடுத்தல் போன்றன செய்யலாம்.

ஒருவருக்கு ஏற்படும் நோவின் காரணமாகவே அதிகமானோர் சுகாதார சேவையை **(Health Care)** பராமரிப்பை நாடுகின்றனர். எனவே இந்த "நோவை" ஒரு நல்ல அறிகுறியாகக் கொண்டு நாம் எம்மிடம் உள்ள ஒரு நோயினை முன்கூட்டியே அறிந்து கொண்டு எமது உடல் நிலையை ஆரோக்கியமாக வைப்போம். உதாரணமாக தலையிடி, நெஞ்சு நோ, வயிற்று நோ, மூட்டு நோ போன்றவற்றை சாதாரணம் என்று நினைக்காது இவை தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் இருந்தால் வைத்திய ஆலோசனை பெறுவது எம் ஆரோக்கியத்திற்கு நல்ல ஒரு விடயமே.

இந்த நோவை கையாள்வதே சுகாதார பராமரிப்பாளர்களின் / அங்கத்தவர்களின் பெரும் சவாலுமாகும். இதனைக் கையாள்வதில் பெருமளவு பங்குவகிப்பவர்கள் இந்த சவாலை எதிர்கொள்பவர்கள் தாதியர்களும் களநிலை வைத்தியர்களும் அவர்களது குழு அங்கத்தவர்களுமே. இதற்காக இவர்களில் பலர் நோ பற்றிய போதிய அறிவும் அதனை முகாமைப்படுத்தும் ஆற்றல் என்பவற்றில் தேர்ச்சியுடையோராகி உள்ளனர். இப் பராமரிப்பு அங்கத்தவர்கள் நோவை நீக்கி, புரிந்து கொள்ள, நோவிலிருந்து விடுவிக்க அவர்கள் நோவை கையாள பயிற்றுவிக்கும் ஆற்றல் உள்ளோராக இருக்கின்றார்கள்.

உள நோ, உடல் நோ இரண்டிற்கும் சிகிச்சை /பராமரிப்பு உண்டு. உள நோவை ஆற்றுப்படுத்தி தியானத்துடன் இறைவனுடன் கதையுங்கள் தீர்வு உண்டு. உடலியல் நோவை சாதாரணமாக கருத்திற்கொள்ளாது வைத்திய ஆலோசனைப்படி சிகிச்சையைப் பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ்வதும் முக்கியம்தானே.

திருமதி சதானந்தி நந்தகுமாரன்
சிரேஷ்ட தாதிய போதனாசிரியர் / யாழ்.தாதியர் கல்லூரி.